உ

சிவமயம்

அனுபவ நஷ்டஜாதகசிந்தாமணி

இஃது

காழ்வுரிப்பாக்கம்

மார்க்கலிங்க சோதிடர் குமாரர்

K. M. தெய்வசிகாமணி சோதிடரால்

எழுதப்பட்டது.

அ. முத்துவடிவேல் முதலியாரால்

வெளியிட்டது.

அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை

(ரிஜிஸ்டர் காபிரைட்)

இதன் விலை] 1940 [அணா 12

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்
பூமகள்விலாச அச்சுக்கூடம்
நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை:—1940.

யிருக்கும் எனக் கூறினாராயினும், அவை முடிவுபெற சில காலங்கள் கழிந்தன. முதன் முதலாய் நான் மேற்படி நூலை எழுத சில அசந்தர்ப்பம். இரண்டாவது அதனை வெளியிடுவோரின் அசந்தர்ப்பம். மூன்றாவது எனக்கு அனுகூலமாயிருந்த நண்பர்கள் செய்த பிரதிகூல சந்தர்ப்பம். இவ்வாறு சிலநாள் தாமதப்பட்டதாயினும், எனது திடத்தாலும் இதனை அச்சிட்டு வெளியிட்டவர்களது பிரயத்தனத்தாலும் ஒருவாறு முடிந்தன.

இவை அநேகமாய் விமேசுரவுள்ளமுடையான் குமாரஸ்வாமியம் எனினும் இரண்டின் ஆதாரத்தைத் தழுவியே வரைந்துள்ளன. ஆதலால் இங்கு கூறும் நஷ்டசாதக முறைப்படி கணித்து உண்மை அறிக. நஷ்டசாதகம் கணிக்கவேண்டியமுறை ஒன்று மாத்திரம் பிரத்தியேகமானதேயன்றி மற்றும் பாவகபலன் அஷ்டவர்க்கம் முதலியன மற்றெல்லா சாதகங்கட்கும் பொருந்தும் என்பது நிச்சயம்.

நிற்க, எனக்கு ஏற்பட்ட சில அசந்தர்ப்பங்களையும் இந்நூல் வெளியாதல் கூடாதென்னும் விருப்பமுடைய என் நண்பர்களது சூக்ஷியைத் தவிர்த்து இந்தச் சாத்திரம் வரைந்து முடியும்படி அனுக்கிரகித்த ஸ்ரீ சுப்ரமண்யக் கடவுளையும், எவ்வித சிரமத்தையும் எதிர்பாராது அச்சிட்டு வெளியிட்ட எமது நண்பர் அ. முத்துவடிவேலு முதலியாரையும் என்றென்றும் மறவேன். இந்நூல் அனைவருக்கும் நன்மையளிக்கும் நூலாய் பயன்படுமாறு எல்லாம்வல்ல இறைவனைத் துதித்தனம். இந்நூலிற் கூறியுள்ள விஷயங்களில் ஏதேனும் பிழையுளதேல் திருத்தி வாசிக்குமாறு வேண்டுகின்றனம்.

காவேரிப்பாக்கம்
28-10-40

இங்ஙனம்:
K. M. தெய்வசிகாமணி சோதிடர்.

பாயிரம்

காப்பு

போதிடமாகிய வேதியனாத புராதனன் மான்முதலோர்
ஈதிடமாய் வருவாரெனில் யாவும்விடா தியல்பாகநவில்
சோதிடமே திடமாக நடாவுசுவாமி சிகாமணியின்
ஓதிடவே யெனதோரகம் வாழ்பவனைச் சகோதரனே.

தெய்வ வணக்கம்

திங்கண்மும் மாரிபெய்யத் திருவறஞ் செழித்துலாவ
மங்கள காங்கள்தங்க மானிலத் தரசையாண்டு
பொங்குதத் துவத்தைக்கொண்டு பொன்னெயின் மேவிநின்ற
எங்கள்புங் கவனைப்போற்றி யிலங்குசோ திடநூற்சொல்வாம்.

ஆசிரிய வணக்கம்

தந்தை தாயாவானுஞ் சார்கதி யிங்காவானும்
அந்தமிலா வின்பநமக் கர்வானும்—எந்தனுயிர்
தானாகு வானுஞ் சாணாகு வானுமருட்
கோனாகு வானுங் குரு.

நவகோட்கள் வணக்கம்

இரவிமதி சேய்மால் பொன்னேர் வெள்ளிகாரி
அரவு சிகிமாந்தி இவரம்சம்—பரவுநெறி
ஓர்ந்து குருமுனிக் கன்றோது குகன்சரண
மார்ந்துரைப்பே னூல்வழியே யான்.

ரிஜிஸ்டர் காபிரைட்

இதனால் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில்:—காவேரிப் பாக்கம் மார்க்கலிங்க சோதிடர் குமாரர் K. M. தெய்வசிகாமணி சோதிடர் எழுதிய "அனுபவ நஷ்ட ஜாதக சிந்தாமணி" என்னும் இந்நூலை அடியில் கையொப்பமிட்டுள்ள யான் மேற்படியாரிடம் சகல சுதந்திரம்பெற்று மகாகனம் பொருந்திய கவர்ன்மெண்டார் அவர்கள் சட்டப்படி ரிஜிஸ்டர் காபிரைட் செய்து வெளியிட்டிருப்பதால் இந்நூலை என் அனுமதியின்றி எவரும் அச்சிடக்கூடாது என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு

அ. முத்துவடிவேல் முதலியார்,

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி,

சென்னை.

விஷய அட்டவணை

விஷயம்	பக்கம்
முகவுரை	5
பாயிரம்	8
நூல்	1
பலன் விவரம்	3
அங்கப்பழுதில்லான்	15
அங்கப்பழுது	15
இரட்டைத்தலையன்	16
ஊமை	16
பல்லுடன் பிறத்தல்	16
பாலாரிட்டம்	17
அரிட்டபங்கம்	18
முதலாம்பாவம்	20
ஜாதகன் விஷயம்	20
ஜாதகன் குணம்	21
ஜாதகன் கீர்த்தி	22
ஜாதகன் குடும்ப விஷயம்	22
ஜாதகன் கல்வி	23
பொதுவிதி	23
தனம்	23
தனநஷ்டம்	24
நேத்திர விஷயம்	25
சகோதர விஷயம்	26
பின்சகோதரம் உண்டா இல்லையா	26
சகோதர விருத்தி	28
கிரகபகை	31
கிரகநட்பு	31
மாதுருபலன்	31
மாதுருதோஷம்	32
புத்திரபலன்	34
மலடன்	36
புத்திரநாசம்	37
ஆறாம்பாவம்	43
ரோகம் உண்டாதல்	43
சத்துருபலன்	45
ஏழாம்பாவம்	46
களத்திரதோஷம்	46
பதிவிரதை	47
களத்திரம் எத்தனை	48
ஷை எந்த திக்கு	49
விவாககாலம்	49
மனைவி மரணகாலம்	49
இரு மனைவி	50
எட்டாம் பாவம்	50
தீர்க்க ஆயுள்	50
ஆயுள் அறியும்வகை	51
ஸ்புடம்	51
அகத்தியர் கூறிய அற்பாயுள்	51
ஷை தீர்க்காயுள்	52
ஒன்பதாம் பாவம்	53
பிதுர் பலன்	53
பிதுரு அரிட்டம்	54
ஸ்புட விவரம்	54
பாக்கிய பலன்	55
பத்தாம் பாவம்	57
கருமபலன்	57
ஜீவனம்	58
பதினோராம் பாவம்	60
ஜேஷ்டசகோதரம்	60
பன்னிரண்டாம் பாவம்	61
சூரியன் திசாபுக்தி பலன்	62
சந்திரன் ,,	67
செவ்வாய் ,,	71
இராகு ,,	75
குரு ,,	78
சனி ,,	82
புதன் ,,	86
கேது ,,	90
சுக்கிரன் ,,	94
கிரகங்களின் ஆக்ஷிவீடு	98
ஷை உச்சவீடு	98
ஷை காரகம்	98
நக்ஷத்திர நாழிகை	98
ஜன்ம நக்ஷத்திர திசை	99
திசாபுக்தி விவரம்	99
மாரகம் செய்பவர்	100

முகவுரை.

சர்வ வல்லமையுமுடைய சிவபிரான் இவ்வுலகி லுண்டாக்கிய ஜீவன்கள் அனேகமாயினும், இம்மானிட ஜன்மம் ஒன்றிற்கே சகல வற்றையும், சகல பொருள்களையு முண்டாக்கி, அப்பொருள்களுள் நன்மையான பொருளெனவும், தீமையான பொருள் எனவும் பிரித்துக்காட்டி நன்மையுள்ள பொருள் எவையோ அதனை யடைந்து நன்மை யடையுங்கள் எனத் தன் தூதுவால் சொல்லக் கேட்டதோ அல்லது, அவர்களால் இயற்றப்பெற்ற நூற்களோ, அதனை நாம் கைக்கொண்டு அதன்படி யொழுகவேண்டுதல் நம்மவர்களின் கடமை யாகும்.

கடவுளால் நேரில் நம்மவர்க்குச் சொல்லப்படாது அவரேவலால் ஏனைய முனிவர்களோ, ரிஷிகளோ கூறப்படும் விஷயங்களையே, வேதம் அல்லது சாத்திரம் என்கிறோம். சாத்திரங்கள் பலவாயினும் சோதிட சாத்திர மொன்றையே இந் நூலின்கண் கூறப்போவதால், சோதிடத்தைப்பற்றிச் சில முக்கிய ஆதாரங்களை இங்கு கூறுவாம். எப்படி எனில்? சோதி என்பது ஒளி. சோதியாகிய ஒளியைக் கண்டவன் நற்பாதையிற் செல்வானேயன்றி முள்ளும் கல்லும் புதருமாயுள்ள பாதையிற் செல்லமாட்டான். இருள்வழி நடப்பவனோ எனில், வழிதெரியாதவனாகி ஒடி கெட்ட பாதையிற் சென்று துன்பப்படுவன். ஆதலால் ஒவ்வொருவரும் மேற்படி ஒளியாகிய சோதியை அல்லது சோதிடத்தை யறிந்து துன்பமில்லாது சுகமே தான் கோரிய இடத்தை யறிந்து தான் மகிழ்ந்திருக்கவேண்டுமே என்றே நம் முன்னோர் தமது அநுபவத்திற் கண்டதும் பண்டைய நூலையும் நூலாசிரியர் கூறியதையும் கேட்டுத் தெளிந்து கூறியுள்ளனர் என்பது எனது கருத்தாகும்.

இரவிற் சென்ற ஒருவன் தான் செல்லும் பாதையிலுள்ள குணதோஷங்களை யறியாது தன் முரட்டுத்தனத்தால் சென்றவருள் அனேகர் துன்பப்படுவர். கதிரவன் உதித்தபின் சென்றவருள் அனேகமாய்த் தான் செல்லும் பாதையில் கஷ்டப்படுவதில்லை. இதனாற்றான், இங்கு கூறும் சோதிடசாத்திரம் அல்லது சோதிட சாத்திரத்தில் சூரியனை முதற் கிரகமாய்க் கொண்டனர் போலும். இவ்வாறு நல்லவழி இவை என்பதை யறிந்து மேற்படி நற்பாதையிற்

சென்று நற்சுகமடையும் சாத்திரங்கள் அனேகம் எனினும், அந்த சாஸ்திரங்களுள் ஏதேனு மொன்றை யாதரவாய் வைத்தே கூற வேண்டுவதா யிருக்கிறது.

அவையாவன:—ஜனனமாகிய வருஷம், மாதம், தேதி, நேரம் இவற்றை யறிந்து கூறுவது ஜாதகம் எனவும், வினவுவோர் வந்த காலத்தை யறிந்து கூறுவது ஆரூடம் எனவும், வினவுவோர் நாம தேயத்தையறிந்து கூறுவது கோசாரம் எனவும், நினைத்த விஷயம் நன்மையா தீமையா என்பதை யறிவது குறி எனவும் கூறுகின்றனர். இவை யொருபுற மிருக்க, ஆதியில் ஈசுரர்க்கும் ஈஸ்வரிக்கும் ஓர் வாக்குவாதம் நடந்ததாகச் சாத்திரங்களிற் கூறியுள்ளன. அவை யாவன: ஈஸ்வரியானவள்,

"சந்திரன்பா னிலக்கணமுங் கோளுநாளுந்
தயங்கிய பக்கங்கரண மியோகம் வாரம்
வந்துசொலுஞ் சோதிடத்தை யறியாதார்கள்
மனநினைவா யறியும்வகை யுளதோ" என்னும்போது,

"இந்தவுட லுயிர்நிலையை யறியாதாருக்
கியாமறிய வியம்புவகை யாதோவென்னிற்
பைந்தொடியே யாஞ்சொல்லுஞ் சரநூறன்னைப்
பரிந்துநீ பார்"

என்று கூறி மேற்சொன்ன சரநூல் என்பதைக் கூறியதாய்க் கூறப் பட்டுள்ளதை யறியலாம்.

இதுபோலவே என்னிடம் சோதிட நண்பர்கள் சிலர், ஜெனன வருஷம் மாதம் தேதி நேரம் இவைகளை யறிந்தவர்களுக்குத் தான் சோதிட சாத்திரமோ இல்லாதாருக்குக் கிடையாதோ இருந்தால் புத்தகரூபமாய் வெளியிடுதல் கூடாதோ என்றனராயினும், அவர்கள் கூறியபடி ஜனனகால நேரத்தை யறியாதவர்க்குங்கூட சோதிட சாஸ்திரமுண்டு. அதனை ஏற்கனவே பண்டைய சாத்திரத்தில் வெளி யிட்டுள்ளன எனக் கூறி, குமாரசுவாமியம், வீமேசுர உள்ளமுடை யான் முதலிய நூற்களிற் கூறியுள்ளன. வடமொழி சாத்திரத்துள் பிருஹத் ஜாதகத்திலும் கூறியுள்ளன. அதன்படி நஷ்ட ஜாதகம் கணித்துச் சொல்லலாமே என்றேனுயினும் அவை மிக ஸ்தூலமா யுள்ளன எளிதி லறிய முடியவில்லை. எல்லோரும் எளிதி லறிந்து கொள்ளும் மார்க்கமாய் ஓர் நூலிருந்தால் பெரிதும் பரோபகாரமா

உ

முருகன் துணை

அனுபவ
நஷ்ட ஜாதக சிந்தாமணி

நூல்

தன்னிரண்டு மறியாதோன் சோதிடத்திலே யுரைக்கும்
பன்னிரண்டு பாவபலன் பைந்தமிழா லெடுத்துரைக்க
முன்னிரண்டு பின்னிரண்டு மூதறிவு தந்தபிரான்
மின்னிரண்டுக் கதிமோக வெற்றிவே லுற்றதுணை.

இங்குகூற முற்படுவது நஷ்ட சோதிட கணிதமாகும். நஷ்ட சோதிடமாவது என்னையெனின்? அவரவர் பிறந்த நாள், திதி, நக்ஷத்திரம், யோகம், கரணம் என்னுமிவற்றை யறிந்து கொள்ளாதோர் தங்கள் தங்களது வருவினைகளை யறிந்து கொள்ளும் மார்க்கமாகும். இவ்வாறு அவரவர் பிறந்த நாள் முதலியவற்றை யறிந்து கொள்ளாதார் தங்கள் வருகால விசேஷத்தை யறிந்துகொள்ளும் மார்க்கங்கள் பல. அவையாவன:—ஆரூடத்தாலும், கோசாரத்தாலும் அறியலாமேயாயினும், இவ்விரு விதத்தாலும் நிச்சயபலனறிவது அசாத்தியமானது. இங்குகூறும் நஷ்ட சோதிட கணிதத்தால் நிச்சய பலனறியலாம் என பண்டைய சாஸ்திர மேதாவிகளால் நன்கு நிச்சயித்துக் கூறியிருப்பதோடு, அனுபவத்தாலும் சம்மதிக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் நஷ்ட ஜாதகம் கணிக்க வேண்டுவோர் எவருக்கு நஷ்ட ஜாதகம் கணிக்க வேண்டுமோ அவரையும் அழைத்துக்கொண்டு தூதலக்ஷணம் என்னும் தாம்பூல தக்ஷணையுடனும் தனக்கிஷ்டமாகிய ஓர்வகை புஷ்பத்துடனேயே சோதிடம் சொல்வோரிடம் வரவேண்டும். சோதிடம் சொல்வோரும் மேற்படி தாம்பூலம் புஷ்பம் இவற்றால் அவரவர்கள் இஷ்டதெய்வத்தைப் பிரார்த்தித்து மேற்படி தாம்பூலம் புஷ்பம் இவற்றின் ஆதாரத்தைக் கொண்டு கீழ்வரும் கணிதமுறைப்படி கணிதம் செய்யவேண்டும். விவரம் பின் வருமாறு.

1 முதன் முதலாக (தாம்பூலம்) வெற்றிலை, பாக்கு, தக்ஷணை, புஷ்பம் ஆகிய நான்கையும் வெவ்வேறு தனித்தனியே எண்ணி வைத்துக்கொள்ள வேண்டும்.

2 முதன் முதலாக வெற்றிலை எண்ணிக்கை எத்தனையோ அதனை முதலாக வைத்து அவர்கள் வந்த (நேரத்தை) நாழிகையை

வினுடியாக்கி, மேற்படி வினுடியால், மேற்படி வெற்றிலைத்துகையைப் பெருக்க வேண்டும். பின்பு பெருக்கிய துகையை வருஷங்கள் 60-ஆல் வகுக்க ஈவு எத்தனையாயிற்றோ அவை பிரபவ முதல் அத்தனையாவது வருஷம் எனப்படும். ஆயினும் இங்கு கூறிய வருஷம் கணிக்கும் முறையில் ஜாதகம் கணித்துக் கொள்வோரின் தோராய வயதைக்கொண்டும் ஜாதகம் கணித்துக் கொள்ளவந்த வருஷத்தில் குரு எந்த ராசியிலிருந்தானோ அதுமுதலாக அத்தனை முன் வருஷங்கள் எனவும், ஆரூடலக்கினமுதல் அத்தனை வருஷம் முன்னமே பிறந்திருப்பார் எனவும் கொள்ளுதல் வேண்டும்.

3 உதாரணம்:—விக்ரமவருஷம் வைகாசிமீ 28-ந்தேதி பகல் நாழிகை 10-க்கு நஷ்ட ஜாதகம் கணிக்கவந்ததாக வைத்துக்கொள்வோம். வெற்றிலையின் எண்ணிக்கை 15 என வைத்துக்கொண்டு நாழிகை 10-க்கு வினுடி 600-ஆனதால் மேற்படி 600-ஆல் மேற்படி வெற்றிலை 15-ஐ பெருக்க வேண்டும். அவ்வாறு பெருக்க,

```
 600 × 15
──────────
60)9000(15
   60
  ────
   300
   300
```

இதனை தமிழ் வருடங்கள் 60-ஆல் வகுக்க மிச்சமில்லை யாதலால் வெற்றிலைத் துகையாகிய 15-ஐ வருஷமாகக்கொள்ளுதல் வேண்டும். இவை பிரபவ முதல் 15-ஆம் வருஷம் எனவே கொள்ளுதல் வேண்டும். இவை பொருத்த மில்லையேல் குரு நின்ற ராசிக்கு முன் 15-வருஷங்கள் எனவும், ஆரூடலக்கின முதல் முன் 15-ஆம் ராசியில் குரு எந்த வருஷத்திலிருந்தானோ அந்த வருஷம் எனவும் கொள்ளுதல் வேண்டும்.

பின்பு பாக்கின் துகை எவ்வளவோ அதனை முன்சொன்ன வினுடியாகிய 9000-ஆல் பெருக்கி 12-ஆல் வகுத்துநின்ற சேடம் மாதம் எனவும் கொள்ளுதல் வேண்டும்.

தக்ஷிணைத் துகை எவ்வளவோ அதனை மேற்படி 9000-ஆல் வகுத்து 30-ஆல் வகுத்துநின்ற சேஷம் எவ்வளவோ அதனைத் தேதி எனவும் கொள்ளுதல் வேண்டும்.

புஷ்பத்தின் துகை எவ்வளவோ அதனையும் மேற்படி உதய வினுடியான 9000-ஆல் பெருக்கி, 60-ஆல் வகுத்துநின்ற சேடம் எவ்வளவோ அதனை நாழிகை எனவும் கொள்ளுதல் வேண்டும். வகுத்தமிச்ச மில்லையேல் அதன் தன் எண்ணிக்கை துகையையே மிச்சமாக வைத்து மேற்சொன்னபடி கொள்ளுதல் வேண்டும். இதுகாறுங்கூறிய முறைப்படி வருஷம், மாதம், தேதி, நேரம் இவற்றை யறிந்து கொண்டபின் அந்தந்த வருஷத்திய பஞ்சாங்கத்தைக்கொண்டு கிரகமமைத்துக்கொள்ள வேண்டும். கிரகம் அமைத்துக் கொள்ளுவதன்முன் மேற்சொன்னபடி கணக்கிட்டுக் கண்ட நாழிகையின்படி அப்போதைய லக்கினத்தை யறிந்துகொண்டு

மேற்படி லக்கினத்தில் எத்தனையாவது பாதம் என அறிந்துகொண்டு அதற்குத் தகுந்தபடி கீழ்வரும் பலாபலனையுரைத்து அவை அந்த ஜாதகனுக்குப் பொருத்தமாயிருக்கிறதா என்பதைத் தெரிந்து கொண்ட பின்பே அதனை நிச்சயித்தல் வேண்டும். கீழ்வரும் பலா பலன்கள் பொருத்தமில்லையேல் முன்சொன்ன விதிப்படி முன்னாகவோ பின்னாகவோ புரட்டிப் பார்த்து சரியான பலாபலனை நிச்சயித்தல் அவசியம். இவ்விஷயத்தை சிரமமின்றி முன்பின்னாய்க் கணக்கிடுதல் வேண்டும்.

பலன் விவரம்

மேடம் 1-ஆம் பாதபலன்

மேடமுத லோரையெனில் விவரம்கேளு
மேல்கீழாம் வீதியது எதிரில்சந்து
வீடதனில் ஓர்மூலை ஊழலாகும்
விளக்கமுடன் பிறந்தமனை சொந்தமென்க
வாடவிலா எதிர்மனையும் பாழாமென்க
வந்தயிவன் பிறவியதில் மூன்றதாகும்
ஆடவில்லை குடும்பமதில் சிலநாள்பின்னே
அவதிவரு மென்றுரைத்தா ரன்னோர்தானே.

மேடம் 2-ஆம் பாதபலன்

ஆடிரண்டாம் பாதமதில் பிறந்தாராகில்
அப்பனே வடக்குதெற்கு வீதியாகும்
நாடியதோர் கீழ்வாச லருகில்கேணி
நன்மையுள வடபாலில் மாரிகோஷ்டம்
ஆடியதோ ரில்லமது சுயார்சிதந்தான்
அன்பான மாதுர்வகை ஈனமாகும்
பாடியதோர் பாலனுக்கு ஐந்தாமாண்டில்
பலமான கெண்டமுண்டு பரிக்ஷைபாரே.

மேடம் 3-ஆம் பாதபலன்

மறியதனில் மூன்றான பாதம்தன்னில்
மேலான பாலனவன் பிறக்கப்பாரு
அரியவனும் மேல்பாலி லிருப்பானப்பா
அப்பனே கிழக்குமேற் கானவீதி
குறியான வடவாசல் தென்பால்சந்து
குற்றமில்லை யம்மானும் சுகமாய்வாழ்வன்
கரியவனும் இவன்நிறமும் கொடூரனவன்
கஷ்டபலன் மூன்றுண்டு கருதுவாயே.

மேடம் 4-ஆம் பாதபலன்

சொல்லுகிறேன் மேடமதில் நான்கேயாகில்
சுகமான வடக்குதெற்கு வீதியாகும்
அல்லவிலே முச்சந்து வீடதாகும்
அறிவிப்பேன் பிதாவினுக்கு கனயோகந்தான்
தொல்லையுண்டு இவன்பிறக்கும் போதில்தாய்க்கு
துணையவரும் பிறந்திருப்பார் மரித்துப்போனர்
எல்லையிலா தனம்படைப்பான் பிற்காலத்தில்
இவனுக்கு நிகரொருவ ரில்லைதானே.

ரிடபம் 1-ஆம் பாதபலன்

விளங்குகின்ற இடபமதில் ஒன்றேயாகில்
வீதியது கீழ்மேலாம் வடக்குவாசல்
துலங்குகின்ற மேற்பாரில் கணேசன்குண்டம்
துணையவரும் மூவருண்டு ஏழ்மையாகும்
இலங்குகின்ற தந்தையற்கு றுணங்களுண்டு
இவன்பிறந்த ஐந்தாண்டில் தீருமென்பர்
கலங்கலில்லை நாளின்மேல் செழித்துவாழ்வான்
காளையிவன் சிவந்தவனும் கருதுவாயே.

ரிடபம் 2-ஆம் பாதபலன்

தேனமரும் இடபத்தில் இரண்டதாகில்
தெவிட்டாத தென்வடக்கு வீதியாகும்
தானவர்கள் வாழ்மனையும் தெற்கேயாகும்
தனயன் பிறந்தது மேற்குவாசலாகும்
ஈனமென்பார் இவன்அம்மான் வகையாமென்பர்
இவனுக்குச் சோதரிகள் அனேகருண்டு
ஊனமில்லை இவன்பிறந்த இரண்டாமாண்டில்
உண்டாகும் கெண்டமொன்று உறுதியாமே.

ரிடபம் 3-ஆம் பாதபலன்

ஓதியதோர் இடபமதில் மூன்றுமோரை
உத்தமனே கிழக்குமேற் கானவீதி
நீதியுள வடவாசலருகில் கோவில்
நிச்சயமாய் பின்பாகம் ஆழிசொல்லு
சேதியொன்று இவன்பிறக்கும் போதில்தந்தை
சிறப்பில்லை வெளிதேயம் சென்றிருப்பான்
ஆதியதாம் அம்மானின் வகையிற்செல்வம்
அதிகமென்பார் அவ்விடத்தில் வாழ்வான்பாரே.

ரிடபம் 4-ஆம் பாதபலன்

மாற்றரிய ரிடபமதில் நான்கேயாகில்
மகிழாகப் பிறந்தமனை கிழக்குமேற்கு
தோற்றியதோர் வாசலது கிழக்காமென்க
துணையவரும் மூவருண்டு துலக்கமாக
ஏற்றரிய நாரணனும் மேற்கேயாகும்
இவனுக்கு மச்சமுண்டு இடபாகத்தில்
சாற்றரிய தனயவனும் சிலநாளுக்குள்
சரியான தனம்படைத்து வாழ்வான்பாரே.

மிதுனம் 1-ஆம் பாதபலன்

மிக்கான மிதுனமதில் முதலேயாகில்
மேல்கீழாம் வீதியது தனித்தவீடு
தக்கியதோர் வடவாச லருகில்குண்டம்
தயவான தாயவட்கு பெருத்தபீடை
சித்தமுற அம்மானால் சுகமுமுண்டு
சிறுவயதில் தனம்படைப்பன் சீலனவன்
மத்திபமாம் இவனுக்கு பத்தில்கெண்டம்
மாமனுக்கும் கெண்டமுண்டு மகிழ்வாயோதே.

மிதுனம் 2-ஆம் பாதபலன்

கூறியதோர் வீணையதி லிரண்டேயாகில்
குறிப்பான தென்வடக்கு வீதியாகும்
சீறியதோர் மாரியவள் மேற்கிலாகும்
சிறப்பான தந்தைவகை செல்வமுண்டு
ஏறியதோ ரிவன்பிறந்த நான்காமாண்டில்
என்னசொல்வேன் தாயவட்கு பெருத்தகெண்டம்
சீறியதோர் பிணிநீங்கி சுகமேயாகும்
சிறப்புண்டு இவன்றனக்குத் தெளிவாயோதே.

மிதுனம் 3-ஆம் பாதபலன்

வீசியதோர் மிதுனமதில் மூன்றிற்றோன்ற
விளக்கமுள கீழ்மேலாம் வீதிஎன்க
பேசியதோர் மேற்பாலில் சிவனார்கோவில்
பெரிதான வீடென்பார் சொந்தமாகும்
காசினியி லிவன்பிறந்த ஐந்தின்மேலே
கனபொருளும் பணிதிகளும் சேருமென்க
பேசியதோர் பிதாவினுக்கு பெருத்தகெண்டம்
பிரபலமா யுண்டெனினும் நீங்குமாமே.

மிதுனம் 4-ஆம் பாதபலன்

துலங்கியதோர் மிதுனமதில் நான்கேயாகில்
தோன்றியதோர் வீதியது வடக்குதெற்காம்
இலங்கியதோர் கீழ்வாசல் புதியவீடு
இனிமையுள்ள வடபாலில் கணேசன்கோவில்
பலம்பொருந்தும் மனையினுள்ளே கிணறுமுண்டு
பாங்கான தாயவட்கு சிலநாள்பீடை
கலங்கியதோர் மாமன்வகை சிலநாள்பின்னே
கவனமுடன் வாழ்வர்எனக் கருதுவாயே.

கடகம் 1-ஆம் பாதபலன்

கூறியதோர் கடகமதில் முதலேயாகில்
குறிப்பான கிழக்குமேற் கானவிதி
வீறியதோர் வடவாசல் ஓர்பால்சந்து
விளக்கமுள மேற்பாலில் மாரிகோவில்
தேரியதோர் தாயம்மான் தனிகனுவன்
தந்தையவன் அவனிடத்தில் சேர்ந்துவாழ்வான்
மீரியதோர் வயதுபத்துக் கப்பால்தானே
மேலான தனமடைவான் மிச்சந்தானே.

கடகம் 2-ஆம் பாதபலன்

புகலறிய கடகமதி லிரண்டேயாகில்
போற்றறிய வடக்குதெற்கு வீதியாகும்
பகருகிறேன் மேல்வாசல் இருபால்சந்து
பாங்கான கீழ்பாகம் கிணறுண்டென்க
நிகரில்லா தனம்படைப்பன் சிலநாளுக்குள்
நிச்சயமா யிவன்மனையில் சிவனுருண்டு
இகலில்லை இவன்பிறந்த ஆண்டுக்குள்ளே
இவனுக்கு கெண்டமுண்டு நீங்கும்பாரே.

கடகம் 3-ஆம் பாதபலன்

விரவியதோர் கடகமதில் மூன்றேயாகில்
விளக்கமுள கீழ்மேலாம் வீதியென்க
பாவியதோர் வடவாச லெதிரில்சந்து
பாங்கான மேற்புறத்தில் கிணறுமுண்டு
இரவிதிசை தனிலேதான் ஈசன்கோவில்
இவனுக்கு மாமனில்லை இன்னங்கேளு
தரையதனி லிவன்பிறந்த நான்காமாண்டில்
தன்னியனு யிருப்பனிவன் தந்தைதானே.

கடகம் 4-ஆம் பாதபலன்

நன்மையுள்ள கடகமதின் நாகாம்ன்பாதம்
நலமாகப் பிறந்தவர்கள் வடதென்வீதி
வன்மையுள்ள கீழ்வாசல் மேற்கில்குண்டம்
வடமான வடதிசையில் பிடாரியுண்டு
இன்னவனும் பிறவியதில் நான்கதாகும்
இவனுக்கு முன்னோர்க ளிறந்துபோனர்
கன்னியராம் பின்பிறவி அம்மான்வற்கம்
கவலையுண்டு பலநாளும் தொல்லையாமே.

சிங்கம் 1-ஆம் பாதபலன்

தெள்ளியதோர் சிங்கமதில் முதலோரைக்கு
தேனேகேள் கிழக்குமேற் கானவீதி
பள்ளமனை வடவாயில் மேற்கில்கோயில்
பலமான வீடதுவு மெதிரிலுண்டு
தள்ளியதோ ரடுத்தமனை பாழதாகும்
தரித்திரமாம் கீழ்மனையும் பெண்பால்வாசம்
மெள்ளவரும் இவன்பிறந்த பின்புயோகம்
மேலவனும் பலபேர்க்கும் உதவியாமே.

சிங்கம் 2-ஆம் பாதபலன்

செயமுடைய சிங்கமதி லிரண்டேயாகில்
சேயனவன் பிறந்ததுவும் தென்வடக்கு
பயமுடைய மாரியவள் தெற்கிலாகும்
பலனில்லாக் கிணறென்று கிழக்கிலுண்டு
நயமுடைய நாரணனர் மேற்கிலாகும்
நன்மையுள குடும்பமென்பார் தாயின்வற்கம்
இயலுமிவன் பிறந்தபின்பு யோகமப்பா
இவனுக்கு கெண்டமுண்டு ஆண்டுக்குள்ளே.

சிங்கம் 3-ஆம் பாதபலன்

ஏர்பெற்ற சிங்கமது மூன்றேயாகில்
இவன்பிறந்த வீதியது கிழக்குமேற்கு
தார்பெற்ற மேல்திசையில் சிவனர்கோவில்
தயவுடைய மாரியவள் தெற்கிலெங்க
சீர்பெற்ற கீழ்புறத்தி லிவன்பிறந்தான்
சிறுவனுக்கு மச்சமுண்டு பிறக்கும்போது
பார்தனிலே இவன்பிறந்த ஆறுண்டின்மேல்
பலமான யோகமுண்டு என்றுஓதே.

சிங்கம் 4-ஆம் பாதபலன்

ஓதுகின்ற சிங்கமதில் நான்கேயாகில்
உண்மையுடன் தெற்குவடக்கினில் பிறந்தான்
போதுரவே கீழ்வாயில் மேற்கில்குண்டம்
புகழ்ச்சியுள நாரணனுர் வடக்கேயாகும்
தீதில்லை இவன்பிறந்த காலந்தன்னில்
சிலநாளில் குடும்பமது தாழ்ந்ததாலே
ஆதர்வாய் பாலனவன் தாய்வர்க்கத்தில்
தனித்திருந்தா னெனவுரைப்பர் நூல்வல்லோரே.

கன்னி 1-ஆம் பாதபலன்

சொன்னகன்னி முதலோரை பிறந்தாராகில்
சொகுசான கிழக்குமேற் கானவீதி
பின்னமிலை இவன்பிறந்த மனைதானப்பா
பேசுகிறேம் வடபாலில் சந்துமுண்டு
அன்னையவள் குடும்பமது பலமதாகும்
அறிவிப்பேன் பிதாகுடும்பம் ஈனமாகும்
கன்னியர்க ளனேகமுண்டு இவனுக்குப்பின்
கனபொருளும் மனையுடனே வாழ்வான்பாரே.

கன்னி 2-ஆம் பாதபலன்

எண்ணியதோர் கன்னியதி லிரண்டேயாகில்
இவன்பிறந்த மனையதுவும் கிழக்குமேற்கு
புண்ணியனே மேற்பாலிற் பாழாம்இல்லம்
புகழ்ச்சியுள தென்பாகம் கன்னிகோயில்
கண்ணியமாய் வாழ்ந்திடுவார் சிலநாள்பின்னே
கணக்கான மனைபலவும் சேரும்பாரு
பண்ணியதோர் பணிபலவு முண்டானுலும்
பலமான கண்டமுண்டு தாய்க்குதானே.

கன்னி 3-ஆம் பாதபலன்

செப்பரிய கன்னிதனில் மூன்றேயாகில்
சேயனவன் பிறந்ததுவோ வடக்குதெற்கு
ஒப்பியதோர் கீழ்வாயி லெதிரில்சந்து
ஒங்குமந்த சண்முகனுர் மேற்கிலாகும்
கப்பியதோ ரிவன்பிறந்த பின்புதானே
கனமான பொன்பலவு மொழிந்துபோச்சு
இப்புவியி லிவனுக்கு நாலாரின்மேல்
இனிமையுள யோகமுண் டென்றுவோதே.

கன்னி 4-ஆம் பாதபலன்

கள்ளமிலா கன்னியதில் நான்கேயாகில்
காளையிவன் பிறந்ததுவோ கிழக்குமேற்கு
மெள்ளவிவன் பிறந்ததுவோ வடக்குவாசல்
மேன்மையுள ஆலயமும் தெற்கிலாகும்
விள்ளறிய தாய்குடும்பம் சிலநாள்பின்னே
வினையாகு பலபணியு மொழிந்ததென்பர்
சொல்லறிய விவனுக்குப் பத்தாமாண்டில்
சொகுசான தந்தையவன் மாண்டானென்னே.

துலாம் 1-ஆம் பாதபலன்

போற்றியகோல் முதலோரை பிறக்கிற்கேளு
புண்ணியனே கிழக்குமேற் கானவீதி
ஏற்றியதோர் தென்வாயி லெதிரில்குண்டம்
இனிமையுள்ள வடதிசையில் கணேசனுண்டு
சாற்றியதோர் தாய்குடும்பம் பலவீனந்தால்
தாயவட்கு பெருத்தகெண்டம் நாலாண்டுக்குள்
தோற்றியதோர் பாலனவன் சேட்டனாகும்
துரைபோல வாழ்ந்திருப்பான் சுருதிவாக்கே.

துலாம் 2-ஆம் பாதபலன்

அரியதுலா மிரண்டாகில் வடக்குதெற்கு
அவன்பிறந்த மனையதுவும் கிழக்குவாயில்
குறியாகப் பின்புறத்தி லாழிசொல்லு
குணமான மேல்திசையில் குமரிகோட்டம்
நெறியான வடதிசையில் சந்துண்டாகும்
நேர்மையுள்ள தாய்குடும்பம் பலத்ததாகும்
அறியதொரு தந்தையவன் பலவீனந்தான்
அழகுபெற வாழ்ந்திடுவான் பிற்காலத்தே.

துலாம் 3-ஆம் பாதபலன்

வின்னமிலா துலாமதனில் மூன்றாமோரை
விளக்கமுடன் பிறந்தமனை கிழக்குமேற்கு
நன்னயமாய் வடவாயில் மேற்கில்சந்து
நலமுடைய தென்புறத்தில் பழயகேணி
என்னசொல்வேன் இவன்பிறவி நான்கதாகும்
இவனுக்கு மாமன்வகை எதிரியாகும்
தன்னகரில் வாழ்ந்திருப்பான் சிலநாள்மட்டும்
தனித்திருப்பான் வெளிநகரி லென்றறைதே.

துலாம் 4-ஆம் பாதபலன்

ஓங்குதுலாம் நான்காகில் அடையாளங்கேள்
உத்தமனே கிழக்குமேற் கானவீதி
தீங்கில்லா தென்வாயில் எதிரில்சந்து
தெவிட்டாத மேல்திசையில் குமரிகோட்டம்
தாங்கியதோர் தாய்குடும்பம் பலமதாகும்
தரித்திரத்தா லாழ்ந்திருக்கும் பிதாகுடும்பம்
ஓங்குமிவன் பிறந்தவுடன் பிதாவுக்கப்பா
உத்தமனே யோகமுண் டென்றுலோதே.

விருக்ஷிகம் 1-ஆம் பாதபலன்

கூறியதேள் முதலோரை பிறக்கிற்கேளு
குணமான கிழக்குமேற் கானவீதி
வீறியதோர் முச்சந்து வீடதாகும்
விதமான வீடதுவும் கூரையாகும்
நீறியதோர் பிதாகுடும்பம் இவன்பிறந்த
நினைவான வருஷமது நான்கின்மேலே
பாறியதாய் பலக்குமென்பர் தீங்கொன்றில்லை
பணிபலவும் சேருமெனப் பகருவாயே.

விருக்ஷிகம் 2-ஆம் பாதபலன்

அரிய விருக்ஷிகமதி லிரண்டாங்காற்கு
அப்பனே பிறந்தமனை வடக்குதெற்கு
நெரியுடைய நாரணனர் கோவில்மேற்கு
நினைவான கீழ்திசையில் குண்டம்கோவில்
பரிவான தாய்குடும்பம் பலமென்றாலும்
பாலனிவன் பிறந்தபின்பி பலவீனந்தான்
குறியுடைய பாலனுக்கு ஆண்டுலொன்றில்
குணமாக கெண்டமொன் றுண்டாகுந்தானே.

விருக்ஷிகம் 3-ஆம் பாதபலன்

விரவியதோர் விருக்ஷிகம் மூன்றேயாகில்
வின்னமிலே பிறந்தமனை தோப்பிலெங்க
பரவியதோ ரில்லமது பலமென்றாலும்
பக்கமதி லொருவரில்லை தனித்தவீடு
இரவிபுதித் ததுபோல இவன்பிறந்தான்
இவனுக்குத் துணைவர்களோ அனேகருண்டு
புரவிமுத லிவனுக்குச் சேருமென்பர்
புண்ணியனே தாய்குடும்பம் பலமதாமே.

விருச்சிகம் 4-ஆம் பாதபலன்

துலங்கியதோர் தேள்நாலிற் பிறக்கிற்கேளு
துலங்கியதோர் வடக்குதெற் கானவீதி
இலங்கியதோ ரிருபாலும் பலத்தவீடு
இவன்பிறக்கும் காலமதி லொருவரில்லை
பலம்பொருந்தும் சகோதரர்கள் பிறப்பர்மேலும்
பாக்கியங்க ளனேகமுண்டு வாழ்நாள் தன்னில்
நலம்பொருந்து மிவன்பிறந்த நான்காமாண்டில்
நாற்றிசையும் புகழவரும் யோகம்தானே.

தனுசு 1-ஆம் பாதபலன்

இனியதனு முதலோரை யாகிற்கேளு
இவன்பிறந்த மனையதுவும் கிழக்குமேற்கு
முனிவர்புகழ் வடவாசல் எதிரில்சந்து
மூன்றுசகோதர ருடையன் தாய்க்குகெண்டம்
வனிதையராம் பெண்ணுதவி யில்லையப்பா
வாழ்நாளில் இவனுக்கு யோகமுண்டு
அனியாப தந்தையர்க்கு யோகமில்லை
அப்பனே யிவன்வாழ்க்கை விசேஷம்தானே.

தனுசு 2-ஆம் பாதபலன்

சொல்லியதோர் தனுசதிலே இரண்டேயாகில்
சோதனையாய் பிறந்தமனை வடக்குதெற்கு
வல்லவனே கீழ்வாசல் மேற்கில்கேணி
வகையான வடபுறத்தில் குண்டமுண்டு
அல்லவில்லை தாய்குடும்பம் நாள்நாளின்மேல்
அதிசயமாய் வாழ்ந்திடுவார் நன்மையாகும்
தொல்லையில்லை பிதாவினுக்கு நன்மையுண்டு
துரைபோல வாழ்ந்திருப்பான் என்றுஓதே.

தனுசு 3-ஆம் பாதபலன்

சாற்றியதோர் வில்மூன்றிற் பிறந்தார்கேளு
சரியான இல்லமது பொதுவாமென்க
ஏற்றியதோ ரிவன்பிறந்த காலந்தன்னில்
இவன்தாய்க்கு பிரபலமாய் கெண்டமுண்டு
நாற்றிசையும் புகழுகின்ற மாதாவாலே
நன்னயமா யிவன்தாயு முயிற்பிழைத்தாள்
போற்றறிய இவன்பிறந்த பின்புதானே
புனிதமுள யோகமுண்டு என்றுஓதே.

தனுசு 4-ஆம் பாதபலன்

தனுசதிலே நான்காகிற் பலனைக்கேளு
தயவான வடக்குதெற்கு வீதியாகும்
கனிவுடைய கீழ்வாயில் பின்பாகம்பாழ்
கருணையுள மேற்புறத்தில் கோவிலென்க
இனியமனே இவன்பிறந்த பின்புதானே
இவன்வசத்தி லில்லையென்பர் பிரதேசந்தான்
கனிவுடைய பிதாவினுக்கு யோகம்கொஞ்சம்
கவனமுடன் வாழ்ந்திடுவா னென்றுஓதே.

மகரம் 1-ஆம் பாதபலன்

சொல்லியதோர் மகரமதில் முதலோரைக்கு
சோதனையாம் கிழக்குமேற் கானவீதி
அல்லலிலா வடவாசல் அருகில்சந்து
அன்பான முச்சந்து வீடதாகும்
தொல்லையிலை யம்மானும் சுகமாய்வாழ்வன்
சோதனையாம் பிதாகுடும்பம் பலமுண்டென்க
வல்லவியாம் தேவியவள் கடாக்ஷத்தாலே
வாழ்ந்திருப்பார் கண்ணியராய் வழுத்துவாயே.

மகரம் 2-ஆம் பாதபலன்

கண்டசுரா இரண்டாகில் பலனைக்கேளு
கணக்காகப் பிறந்ததுவோ பாதைஎன்க
விண்டவிவன் பிறக்குமந்த காலந்தன்னில்
விதமான கன்னியர்க ளொருவரில்லை
தண்டனையோன் றில்லையப்பா சுகமாய்வாழ்வன்
தாய்குடும்பம் சிலநாளில் செழிக்கும்பாரு
கொண்டவிவன் பிதாவினுக்கும் யோகமுண்டு
குணமாக வாழ்ந்திடுவா ரென்றுஓதே.

மகரம் 3-ஆம் பாதபலன்

மானேகேள் மகரமதில் மூன்றுமோரை
மகிழ்வாகப் பிறந்தமனே கிழக்குமேற்கு
தேனேதென் வாசலென்பர் அருகில்சந்து
தெவிட்டாத அன்னையர்க்கு அற்பஆயுள்
யானேதும் விதிபிசகா சிலநாளுக்குள்
என்னசொல்வேன் பாலனுக்கு யோகமுண்டு
வானோர்கள் போற்றுகின்ற சிவத்தினாலே
வாழ்ந்திருப்பார் பெருமையுட னென்றுஓதே.

மகரம் 4-ஆம் பாதபலன்

குறியாய்கேள் மகரமதில் நான்கேயாகில்
குணமான தென்வடக்கு வீதியாகும்
பரிவான் மேல்வாசல் கிழக்கில்குண்டம்
பண்புடைய தென்புறத்தி லீசன்கோவில்
அரிதாக விவன்பிறந்த நான்காமாண்டில்
அப்பனே பிதாவினுக்கு பலத்தகெண்டம்
சரியாக தாய்குடும்பம் செழிக்குமென்பர்
சண்முகனார் துணையிருப்பார் சரியிதாமே.

கும்பம் 1-ஆம் பாதபலன்

வேண்டியதோர் கும்பமதி லொன்றும்பாதம்
விதமான கிழக்குமேற் கானவீதி
பூண்டதொரு தென்வாசல் வடக்கிலாரல்
புனிதமுள மேற்பாலிற் கோவிலுண்டு
நீண்டவிவன் தாய்வகையில் செல்வமில்லை
விதமான பிதுர்வகையிற் செல்வம்சொல்லு
ஆண்டவிவ னன்னைதந்தை தனக்குஅன்பன்
அப்பனே நால்வகையில் சமர்த்தனாமே.

கும்பம் 2-ஆம் பாதபலன்

கும்பமதி லிரண்டாகில் வடக்குதெற்கு
குணமான மேல்வாயில் அருகில்பாழாம்
தெம்புடைய கணேசரவர் வடக்கிலென்க
தெவிட்டாத தாய்வகையில் செல்வமுண்டு
அம்புவியி லிவன்பிறந்த நாலாண்டின்மே
அளவில்லா யோகமுண்டு அருமையாக
வம்புடைய சகோதரரால் துன்பமுண்டு
வரிசையுள பிதாவுக்கு ஊனம்சொல்லே.

கும்பம் 3-ஆம் பாதபலன்

புகலரிய கும்பமதில் மூன்றேயாகில்
போற்றுகின்ற கிழக்குமேற் கானவீதி
விரவியதோர் தென்வாயில் அருகில்சந்து
வேண்டியதோர் பிதுர்வகையில் துன்பமுண்டு
உரவியதாய் வகையிலிவன் சென்றமைந்தன்
உறுதியுடன் பிழைப்பனென்பர் ஊக்கமாக
அரவத்தல்குலை யுடையாய் பாலனுக்கு
அதிசயமாய் செல்வமது வருகும்பாரே.

கும்பம் 4-ஆம் பாதபலன்

இடமுற்ற கும்பமதில் நாலாம்பாதம்
ஏற்றுகின்ற தெற்குவடக் கானவீதி
இடமுற்ற கிழக்குவன்னி வாசலாகும்
தென்திசையி லாலயமு தடங்கள்சொல்லு
இடமுடைய வேந்தர்களால் செல்வமுள்ளோன்
தீராத நோயுடையன் தெரிவையின்பன்
இடமுற்ற பிதுர்வகையில் செல்வமுண்டு
தெவிட்டாத ஆயுளுள மைந்தனுமே.

மீனம் 1-ஆம் பாதபலன்

குலவியதோர் மீனமதின் முதல்பாதத்தில்
குறிப்பாகப் பிறந்திடிலோ கிழக்குமேற்கு
இலகியதோர் வடவாசல் தெற்கிலாரல்
என்னசொல்வேன் இவன்பிறந்த ஆண்டுக்குள்ளே
உலவுதன மதிகமுடன் மிக்காய்வாழ்வான்
உன்னதமாம் அம்மானின் வகையிற்செல்வம்
பெலம்பொருந்து மிவனுக்கு தீர்க்கஆயுள்
பெரிதான நால்வகையுஞ் சமர்த்தனுமே.

மீனம் 2-ஆம் பாதபலன்

சுகமான மீனமதி லிரண்டாமோரை
சூக்ஷமதாய் தென்வடக்கு வீதியாகும்
அகமகிழும் கீழ்மூலை வாசலாகும்
ஆனந்த நாரணனுர் மேற்கிலாகும்
சகலமுங் கொண்டாடுகின்ற ஆழிதெற்கு
சாக்ஷியதாய் பிறந்தவுடன் பிதாவும்சாவான்
புகலரிய அன்னைவகை செல்வத்தாலே
புகழ்ச்சியுடன் வாழ்ந்திடுவா னென்றுஓதே.

மீனம் 3-ஆம் பாதபலன்

சாற்றியதோர் மீனமதில் மூன்றேயாகில்
சரியான கிழக்குமேற் கானவீதி
ஏற்றியதோர் கீழ்வாயில் எதிரில்பாழாம்
இவன்பிறவி நான்காகும் ஒன்றேதீர்க்கம்
போற்றியதோர் தந்தைக்கு யோகம்கொஞ்சம்
புகழ்ச்சியுள நால்வகையும் சமர்த்தனுகும்
ஆற்றியதோர் பாலனவன் பரதேயத்தில்
அருமையுடன் வாழ்ந்திடுவா னென்றுஓதே.

மீனம் 4-ஆம் பாதபலன்

பொருந்தியதோர் மீனமதில் நான்கேயாகில்
புண்ணியனே தென்வடக்கு வீதியாகும்
திருந்தியதோர் கீழ்வாசல் மேற்கில்சந்து
தெவிட்டாத நாரணனும் தெற்கிலென்க
வருந்தியதோர் பிதாவினுக்கு இவன்பிறந்த
வயதைந்துக் கப்பாலே யோகமுண்டு
பொருந்துமிந்த பாலனுக்கு ஆயுளற்பம்
புண்ணியனே தாய்வகையில் துக்கனுமே.

இவ்வாறு அவரவர்களுக்கு ஏற்பட்ட லக்கினப்படி மேற்படி லக்கினபாதமறிந்து, அந்தந்த லக்கின பாதங்களுக்குச் சொல்லிய அடையாளங்கள் சரியாக இருக்கிறதா எனத் தெரிந்துகொண்டு, சரியில்லையேல் முன்பின்னாக அந்தந்த பாதங்களுக்குச் சொல்லியபடி பிறட்டிப் பார்த்து ஜெனித்த வீட்டினது அடையாளத்தை நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். முதன்முதலாய் ஜென்ம லக்கினம் எவை எனவும் அவை எத்தனையாம் பாதம் எனவும் தெரிந்துகொண்ட பின்னரே மற்றைய விஷயங்களை அறிதல் வேண்டும். நஷ்ட சோதிட கணித முறைப்படி ஜெனனகால நாழிகையை ஸ்தூலமாய் அறிந்தாலும் இதன் மூலமாய் ஜெனன கால நாழிகை வினாடியை நிச்சயமாய் அறியலாம். ஆதலால் இம்முறைப்படியே ஜெனனகால நாழிகை விநாடியை நிச்சயித்தல் சாஸ்திர சம்மதம். இதன் பின்பு ஜெனித்த காலத்தில் எவ்வித அடையாளத்துடன் பிறந்தார் என்பதை அறியவேண்டுமாதலால் அவ்விவரங்களைச் சாஸ்திரங்களின் ஆதார ஆதேயத்தால் இங்கு கூறுவாம்.

அங்கப்பழுதில்லான் குறளன்

ஜென்மலக்கினத்திற்குக் கோணங்கள் என்கிற-5-9-லும் கேந்திரங்களாகிய 1-4-7-10 என்னுமிடங்களிலும் பாவகோட்கள் நிற்கில் அந்த ஜாதகன் எவ்வித அவையவ பின்னமும் இன்றி பிறப்பன். மேற்சொன்னபடி கிரகமிருந்தும் அவர்களுடன் குளிகன் கூடியிருக்கில் அங்கப்பழுதில்லாதவனாயினும் குறளனாக இருப்பான்.

அங்கப்பழுது தந்தவிகாரி

சனியுடன் ராகு அல்லது கேதுகூடி ஜென்மலக்கினத்திற்கு ஏழாம்ராசியில் நின்று பலம் பெற்றிருக்க அந்த ஜாதகன் ஜெனிக்கும் காலத்திலேயே அங்கப்பழுதுடையவனாய் ஜெனிப்பன். ஜென்மம் சராசிகளிலொன்றாகி மேற்சொன்ன தீயகோட்களுடன் ஏனைய தீயகோட்களும் காணில் அவன் விகாரதந்த முடையவனாக ஜெனிப்பன்.

இரட்டைதலையன் அங்கப்பழுது

ஜென்மலக்கினத்திறகு 5-9-ஆம் ராசியில் செவ்வாய் நின்று சனி சூரியன் இவர்கள் பார்க்க அவன் இரட்டை தலையுடன் ஜனிப்பான். மேற்படி செவ்வாய் 5-ஆம் திரிகோணத்திருந்து மேற்படி சனி இரவி இவர்கள் பார்க்க கை கால்களில் குறைவுள்ளவனாக ஜெனிப்பான்.

ஜென்மலக்கினத்திற்கு 8-7-ஆம் ராசியில் சூரியன் நின்று சந்திரன் 10-ல் நின்று பலவீனம் பெற்றிருக்க அந்த ஜாதகன் அங்கப்பழுதுடையவனாக ஜெனிப்பன். லக்கினம் கடகமாகி 10-ல் சந்திரன் நின்று சனி நோக்கப் பிறந்தவன் தன் காலில் குறைவுள்ளவனாக ஜெனிப்பன்.

ஜென்ம லக்கினத்திக்கு 5-9-ஆம் ராசியில் புதன் நின்று மதி-குரு-சுக்கிரன் இவர்கள் பலவீனம் பெற்றுப் பார்க்க அந்த ஜாதகன் தனது கைகளிலும் கால்களிலும் அதிக விரலுடன் பிறப்பன் என்பதாம்.

ஊமை

ஜென்மலக்கினம் கடகமாக மேற்படி கடகம் அல்லது மீனம்-விருச்சிகம் இந்த ராசியின் கடை திரேகாணத்தில் மூன்று பாவர்களிருக்க அந்த ஜாதகன் தான் பிறந்த காலத்தில் ஊமையாய்ப் பிறந்தானாயினும் பிற்காலம் சிறிது பேசுவான்.

பல்லுடன் பிறத்தல்

மிதுனம்-கன்னி என்னும் இரண்டு ராசிகளிலொன்றில் புதன் நின்று மேற்படி புதனங்கிசத்தில் செவ்வாயும் ஜென்மலக்கினத்திற் சனியும் நிற்கப் பிறந்தவன் தான் ஜெனித்த காலத்திலேயே பல்லுடன் பிறப்பன்.

இவ்வாறு அவரவர்களுக்குக் குறிப்பிட்ட கிரகம் நக்ஷத்திரம் முதலியவற்றால் மேற்சொன்ன விதிப்படி அங்கபின்னம் முதலியவைகள் உள்ளனவா? என்பதை வெகுவாய் ஆராய்ந்து அங்கப்பழுது உள்ளவன் அல்லது இல்லாதவன் என்பதைத் திண்ணமாய் ஆராய்ந்தறிதல்வேண்டும். மேற்சொல்லிய லக்ஷணப்படி அங்கப்பழுதுள்ளானாயினும், மேற்படி தோஷத்தை நிவர்த்தி செய்யத் தகுந்த கிரகங்களும் உள்ளனவாதலால் அவ்வாறுள்ளனவா என்பதையும் ஆராய்ந்தறிதல்வேண்டும் எப்படியெனில்?

"நாறுந்தீக் கோட்கள்கூட நண்ணிய சுபர்நோக்காரேல்
சூழுமிப்படி பலிக்கும் சொலுந்தீயோர் பலமேகுன்றி
வீழுற நற்கோள்பார்க்கின் விளங்கிய மகவங்கத்திற்
கோளுறு வியாதிதன்னை குறிப்பறிந் துரைக்கலாமே"

என்றபடி மேலே சொன்ன அங்கப் பழுதுண்டாவதற்கு பாவர்கள் சேர்க்கையும் பாவர்கள் பார்வையுமே காரணம் ஆகலின், மேற்

சொன்னபடி பாபர்கள் சேர்க்கை பாபர்வை முதலியன இருந்தும் சுபக் கோட்களது பார்வையோ அல்லது சேர்க்கையோ உண்டெனில் மேற்சொன்ன அங்கப்பழுதென உரைக்க முடியாது. அவரவர்களுக் குரிய அங்கங்களில் ரோகபீடை முதலியன உண்டாக்கலாமாகலின் இவ்வித காரணங்களில் நன்கு நிச்சயித்துக் கூறுதல் வேண்டும்.

இவ்வாறு ஆராய்ந்தறிந்தபின் அந்த ஜாதகனது அரிஷ்டம் முதலியவற்றை ஆராய்ந்து ஆயுள் நிச்சயம் கூறுவது நலமாதலால் மேற்படி பாலாரிட்ட விவரங்களை இங்ஙனம் சுருக்கிக் கூறுவாம்.

பாலாரிட்டம்

சுருக்கமின்மிதுனகும்பம் துலாங்கும்பந்தன்னிற்றிங்கள்
இருக்கவேசெயிரவிமந்தன் இலங்கவேபார்க்கபின்பு
தருக்கிலாமதிதானின்ற தானத்தினதிமீனுற்றுன்
மருக்கிளர்வடுநோர்கண்ணாய் வளர்ந்திடுமகவரிட்டம்.

இ-ள். ஜென்மலக்கினம் எவையாயினும் மிதுனம் - கன்னி- துலாம்-கும்பம் இந்த ராசியில் சந்திரன் நின்று மேற்படி சந்திரனை சூரியன் - சனி இவர்கள் நோக்கியும், மேற்படி சந்திரனுடன் குரு கூடினும் அந்த ஜாதகனுக்கு அரிட்டமுண்டு எ-று.

ஆடுதேளுதயமாக ஐந்தொன்பான்றனிற்பொன்னுக்கே
நீடுகேந்திரத்திற்செவ்வாய் நிற்கிற்பாலனுக்கரிட்டம்
பாடுமொன்றைந்தேழெட்டு பகர்பனிரெண்டுமற்றன்னிற்
ஓடுதேய்மதியைப்பாவர் உற்றிடிலரிட்டந்தானே.

இ-ள். மேடம் - விருச்சிகம் ஜென்மலக்கினமாகி 5-9-ல் குரு நின்று, மேற்படி குரு நின்ற ராசிக்கு 7-ஆம் ராசியில் செவ்வாய் நிற்க அந்த ஜாதகனுக்கு அரிட்டமுண்டு. ஜென்மலக்கினத்திற்கு 5-7-8-12-இவ்விடங்களில் தேய்பிறைச் சந்திரனிருந்து மேற்படி சந்திரனுடன் பாவகோட்கள் கூடியிருக்கின் மேற்சொன்னபடி அந்த ஜாதகனுக்கு அரிட்டமுண்டு எ-று.

தினகரனுதயநிற்கத் தீயகோள்கூடப்பார்க்க
வினவுசெய்சனிபத்தாக மேவிடிற்சிசுவரிட்டம்
கனகமீனுதயமாக கடகத்தினங்கிசத்திற்
றனமிகுசெவ்வாய்நிற்கின் மகப்பெரிலுடனேசாவாம்.

இ-ள். ஜென்மலக்கினத்தில் சூரியன் நின்று அவருடன் பாவ கோட்கள் கூட அல்லது பார்த்திருந்து, 10-ல் சனி நிற்க பிறந்த ஜாதகனுக்கு அரிட்டமுண்டு. ஜென்மலக்கினம் மீனமாகிக் கடகாங் கிசத்திற் செவ்வாய் நிற்கப் பிறந்தவனுக்கு உடனே அரிட்ட முண்டு எ-று.

சனியனேழில்நிற்க சலராசியுதயமாக
பனிமதிக்கீழிராசி பதிந்திடசுபர்கேந்திரத்திருக்கில்
இனியதோர்குழவிசாவாம் ஏழொன்றிற்பாவரோடும்
குனிபிறைமேவநற்கோள் குளிர்பார்வையற்றூர்சாவே.

இ-ள். ஜென்மலக்கினம் ஜலராசியாகி 7-ல் சனி நின்று அட்டமத்தில் சந்திரனிருக்கப் பிறந்தவன் சுபக்கிரகங்கள் கேந்திரம் பெற்றிருந்தாலும் அரிட்டமுண்டு. மேற்படி அட்டமத்தில் சந்திரன் நின்று சுபக்கோட்கள் பார்வையற்றிருக்கில் அந்த ஜாதகனுக்குக் கட்டாயம் அரிட்டமுண்டு எ-று.

பன்னிரண்டெட்டேழொன்றிற் பாவருமதியுங்கூட
மன்னியசுபர்கேந்திரத்திருக்க மதலைக்கேயறிட்டங்காட்டும்
தென்னிகர்பாவரெட்டாய் தேய்மதிகேந்திரத்திருக்கில்
உன்னியமதலைசாவாம் ஒளிதிகழ்வேற்கணல்லாய்.

இ-ள். ஜென்மலக்கினத்திலும் அல்லது 7-8-12-இவ்விடங்களில் பாவர்களுடன் கூடிய சந்திரன் நிற்கவும், சுபர்கள் கேந்திரம் பெற்றாலும் அந்த ஜாதகனுக்கு அரிட்டமுண்டு. பாபக்கிரகங்கள் 8-ல் நின்று ஜனனகாலம் க்ஷீணமதியாகி 1-4-7-10-ல் நிற்க அந்த ஜாதகனுக்கு அரிட்டமுண்டு எ-று.

மீனத்தில் சந்திரன் நின்று குரு சுக்கிரன் இவர்கள் நீசம் பகை அத்தமயம் பெற்றிருந்தாலும் 3-6-8-12-ல் நின்றாலும் அந்த ஜாதகனுக்கு அரிட்டம் உண்டு.

இதுவரையில் சில முக்கிய அரிட்ட விவரங்களைக் கூறியுள்ளன. ஏனைய விஷயங்களுக்கு சாதக அலங்காரம், மணிகண்ட கேரளம் முதலிய நூற்களில் விரிவாய்க் கூறப்பட்டுள்ளன வாதலால் அதினின்றறிந்துகொள்ளுக. இதுகாறுங் கூறிவந்தபடி கிரகவாயிலாய் அந்த ஜாதகனுக்கு அரிட்டம் உண்டு எனினும், மேற்படி அரிட்டதோஷம் எவ்வண்ணம் பரிகாரமாகும்? மேற்படி தோஷமானது நீங்குதற்குக் கிரகங்கள் அமைந்துள்ளனவா இல்லையா என்பதை ஆராய்ந்தே நிலை கூறவேண்டுவது நியதியாதலால் அவ்விதத்தைச் சிறிது விளக்குவாம். இவை நஷ்ட சோதிடத்திற் மாத்திரமன்று. ஜெனன ஜாதக கணிதத்திற்கும் பொருந்துமென்க.

அரிட்ட பங்கம்

உலகினிலுதித்தபேர்கட் கொளிர்மதியரசன்சுங்கன்
கலக்கமில்லாமநின்றூற் கண்டவன்மதிவீட்டானும்
நிலமதிலுறவேயாகில் நிச்சயநன்மையுண்டு
சலமதாய்த்தீயர்தீம்பாய் சாகவிடொட்டார்மாதே.

இ-ள். இவ்வுலகின்கண் பிறந்த மானிடர்களுக்குத் தங்கள் தங்கள் ஜனனகால கிரக அடைவியில் சந்திரன்-குரு-சுக்கிரன் இவர்கள் பலம்

பெற்றிருந்து, சந்திரனிருந்த வீட்டோன் நட்பு பெற்றிருக்க கட்டாயம் மேற்படி (அரிட்டத்தைச் செய்யாது) நன்மையே செய்வர். கொடிய கோட்கள் கொடிய ஸ்தானம் பெற்றிருக்கினும் அரிட்ட தோஷத்தைச் செய்யார் எ-று.

இச்செய்யுளால் கிரகயுத்தத்தாலோ, பகை முதலியவற்றாலோ, ஈனம் பெற்ற கிரகங்களால் அந்த ஜாதகனுக்கு அரிட்டமுண்டு என்றாலும், சந்திரலக்கினாதியும், சந்திரன்-குரு-சுக்கிரன் இவர்களும் பலம் பெற்றிருப்பார்களே யாமானால் முன்சொன்ன அரிட்டத்தை பங்கம் செய்வதுடன் அந்த ஜாதகனுக்கு நன்மையே செய்வர் என்றனர். இவை சர்வசாஸ்திர சம்மதமேயாகும். இதற்குக் காரணம் என்னவெனில்? நவகோட்களுள் குரு-சுக்கிரன் என்னு மிருவரையே பூரண சுபர்கள் எனக் கூறப்பட்டுள்ளன. மற்றும் அப்புவின் அமிசமான சந்திரன் உடலாதிபன் அல்லது இரத்த விருத்திக்குடையன் எனக் கூறப்பட்டிருப்பதாலும், மேற்படி இரத்தமே சர்வஜீவன்களும் வளர்வதற்குக் காரணமா யிருப்பதாலும், சந்திரன் பலம் பெற்றிருந்தாலுங்கூட அரிட்டதோஷம் பங்கமாகும் என்றனர். மற்றும் சந்திரனுக்குள்ள அதிகாரங்கள் பல. ஆயினும் அதனை இங்கு அதிகமாயெடுத்துக் கூறவேண்டுவது அவசியமில்லை யாதலால் இத்துடன் விடுத்தனம்.

மற்றும் மேற்படி தோஷம் பங்கமாவதற்குப் பல நூலாசிரியர்கள் பலவாறு கூறியுள்ளனர். எப்படியெனில்?

சுபகோட்கள் நால்வருள் ஒரு சுபன் பலம் பெற்றிருந்தால் அந்த ஜாதகனுக்கு தீயகிரகங்களாலுண்டாகும் தோஷங்கள் பாதிக்கப்படமாட்டாது. இரண்டு சுபர்கள் பலம் பெற்றிருப்பார்களேயாமாயின் முன்சொன்ன தீயர்களின் எவ்வித பகையு மணுகாது. மூன்று சுபர்கள் பலம் பெற்றிருப்பார்களேயாமாயின் முன்சொன்ன தீயர்களது தோஷம் எப்படிப்பட்டதாயினும் அணுகாது. நான்கு சுபகோட்களும் பலம் பெற்றிருப்பார்களேயாமாயின் அந்த ஜாதகனுக்கு தீயவர்கள் என எந்த கிரகத்தையும் குறிப்பிடவுங் காணோம் எனக் கூறியுள்ளனர். கோட்சார நூலிலும் கணிதஜாதகங்களுக்கும் இங்கு கூறும் நஷ்ட சோதிட ஜாதகத்திற்கும் பொதுச்சுபர்கள் சந்திரன்-புதன்-குரு-சுக்கிரன் என்னும் நால்வர்களேயாகும். இவர்களுள்,

குரு-சுக்கிரன் என்னு மிருவரையும் பூரணச்சுபர் எனவும், வளர்பிறைச் சந்திரனைப் பூரணச்சுபன் எனவும், தேய்பிறையாகில் பாவர் எனவும், புதனை அரைச்சுபன் எனவுங் கூறுக.

இங்கு, நஷ்ட சோதிட கணிதகிரக அடைவியில் அந்தந்த ஜாதகனுடைய வற்கோத்துமங்களும் அவ்வவர்களது யோகங்களையும் கூறுவாம்.

முதலாம் பாவம்

ஜாதகன் விஷயம்

ஜென்மலக்கினுதிபன் கேந்திரகோணங்களில் புலம் பெற்றிருந்து ஜென்மலக்கினத்தைச் சுபர் நோக்க அந்த ஜாதகனுக்குச் சகல சுகங்களும் உண்டு.

ஜென்மலக்கினுதிபன் 6-8-12-ல் நின்று ஜென்மலக்கினத்தைக் கொடியகோட்கள் நோக்குவரேல் அந்த ஜாதகனுக்குச் சுகம் கிடையாது.

ஜென்மலக்கினுதிபதி சந்திரன்-புதன்-குரு-சுக்கிரன் என்னும் நால்வருள் ஒருவராகி,ஜென்மலக்கினத்திற்கு 5-9-ஆம் ராசியிலிருக்கப் பிறந்தவன் சகல சுகங்களேயும் அடைவான்.

ஜென்மலக்கினுதிபன் மேற்சொன்ன நால்வருள் ஒருவராகி 4-7-10-ஆம் ராசியிலிருக்க அந்த ஜாதகனுக்கு சமயோசித பலனும் யோகமும் உண்டாம். இவை சுபகோட்களுக்குறிய பொதுப்பாவ பலமாகும்.

மேற்சொன்ன நால்வருள் ஒருவர் ஜென்மலக்கினுதிபனுகி 6-8-12-ஆம் ராசியிலிருக்க அந்த ஜாதகன் சகல கஷ்டங்களுக்கும் ஆளாவான்.

ஜென்மலக்கினுதிபன் சூரியன் - அங்காரகன் - சனி என்னும் மூவருள் ஒருவராகி மேற்படி லக்கினத்திற்கு 4-7-10-ஆம் ராசியிலிருக்க அந்த ஜாதகன் சகல சுகங்களுமுடையவனுகும்.

கோணமாகிய 5-9-ஆம் ராசியிலிருக்க சமயோகமும் பலமும் உடையவனுகி யிருப்பன்.

மேற்சொன்ன மூவருள் ஒருவர் ஜென்மலக்கினுதியாகி 3-6-8-12-ஆம் ராசியிலிருக்க திசைக்குத் தக்கபடி நற்பலனும் துற்பலனும் மாறி மாறி வரும். ஆயினும் யோகமுடையவன் எனக்கூற வியலாது.

இங்கு ஜென்மலக்கினுதியால் அவன் நிறத்தைக் கூறுவாம்.

ஜென்மலக்கினுதிபன் சூரியனுகில் சிவந்ததேகி, சந்திரனுகில் வெண்ணிற முடையவன், செவ்வாயாகில் சிவந்ததேகி, புதனுகில் கருத்தவன், குருவாகில் பொன்னிற முடையவன், சுக்கிரனுகில் வெண்ணிறமுடையவன், சனியாகில் கருத்ததேகி.

ஜென்மலக்கினம் மேஷம் அல்லது விருச்ஷிகமாகி அதில் சூரியன் நிற்க அல்லது பார்க்க சிவந்ததேகி. சந்திரனிற்க அல்லது பார்க்க வெண்ணிற முடையவன். புதன் நிற்க கருத்தவன் அல்லது சமநிறம். குரு நிற்க அல்லது பார்க்க மாநிறம். சுக்கிரனிற்க அல்லது

பார்க்க மாநிறம். சனி நிற்க இருசிவப்பன், சனி நிற்க அல்லது பார்க்க சமநிறமுடையவன.

ஜென்மலக்கினம் ரிடப துலாமாகி அதில் சூரியன் - சந்திரன் இவர்கள் நிற்கினும் நோக்கினும் வெண்ணிறமுடையவன். செவ்வாய் நிற்கினும் நோக்கினும் காந்தியுடைய தேகி. குரு நிற்கினும் நோக்கினும் பொன்னிறம், தேஜஸ் உடையவன். சனி நிற்கினும் நோக்கினும் கருமைநிற முடையவன்.

ஜென்மலக்கினம் மிதுனம் அல்லது கன்னியாகி அதில் சூரியன் அல்லது சந்திரன் நிற்க அல்லது நோக்க சிவந்த தேகி. செவ்வாய் நிற்க பிரகாசம் பொருந்தியவன். குரு நிற்க இரு சிவப்பன். சுக்கிரன் நிற்க அல்லது நோக்க சமநிறம். சனி நிற்க அல்லது நோக்க கறுத்தநிறம்.

ஜென்மலக்கினம் கடகமாகி அதில் சூரியன்-செவ்வாய் நிற்க அல்லது நோக்க சிவந்தவன். புதன் நிற்க அல்லது நோக்க சமநிறம். குரு நிற்க அல்லது நோக்க மாநிறம். சுக்கிரன் நிற்க அல்லது நோக்க ராஜவடிவன். சனி நிற்க அல்லது நோக்க சமநிறம்.

ஜென்மலக்கினம் சிங்கமாகி அதில் சந்திரன்-சுக்கிரன்-செவ்வாய் இவர்களிருக்க அல்லது நோக்க சிவந்தவன். குரு நிற்க அல்லது நோக்க இருசிவப்பன். புதன்-சனி நிற்கினும் நோக்கினும் சமநிற முடையவன்.

ஜென்மலக்கினம் தனுசு அல்லது மீனமாகி அதில் சூரியன்-செவ்வாய் - சுக்கிரன் - சந்திரன் என்னும் இவர்களுள் ஒருவரிருக்க அல்லது நோக்க அந்த ஜாதகன் காந்தியுடைய சரீரமாயிருப்பன். புதன்-சனி இவர்களிருக்க அல்லது நோக்க அந்த ஜாதகன் கறுத்த நிறமுடையவனாக இருப்பான்.

ஜென்மலக்கினம் மகரம் அல்லது கும்பமாகி அதில் சூரியன்-சந்திரன்-செவ்வாய் நிற்க அல்லது நோக்க சமநிறம். புதன் நிற்க கறுத்தவன். குரு நிற்க அல்லது நோக்க சமநிறம். சுக்கிரன் நிற்க அல்லது நோக்க சமநிறமுடையவன்.

இவ்வாறு பார்வை சேர்க்கை இவைகளை அறிந்து அந்தந்த கிரகங்களுக்குக்குறிய நிறங்களைக் கலந்து கூறுவது பொருத்தமான தாகும்.

ஜாதகன் குணம்

ஜென்மலக்கினாதிபன் சூரியனாகில் கபடமில்லான். சந்திரனாகில் எவ்விஷயத்தையும் மறைக்காது பேசவல்லவன். செவ்வாயாகில் குறும்பு. பிறரை அவமதிக்கத் தகுந்தவன். புதனாகில் பிறர் மனத்தை

அறிந்து அதன்படி நினைப்பவன். சுக்கிரனாகில் தந்திரவாதி. சனியாகில் கல் நெஞ்சன், கொடிய எண்ணம்.

ஜாதகன் கீர்த்தி

ஜென்மலக்கினாதிபன் சூரியனாகில் தனக்கு எவ்வித கஷ்டம் உண்டான காலத்தும் தன் கௌரவத்திற்கு பழுதுண்டாகாவண்ணம் நடந்து கொள்வன். சந்திரனாகில் சிலகாலம் கீர்த்தியுடையவனாகவும் சிலகாலம் கீர்த்தியில்லாதவனாகவும் இருப்பன். ஜனனகாலப்போது வளர்பிறையாகில் நாளுக்குநாள் கீர்த்தியுடையவன் எனவும், தேய்பிறையாகில் நாளடைவில் கீர்த்தி குறைந்தவன். செவ்வாயாகில் நல்லோர்க்கு நன்மை செய்வதிலும், கொடியோர்க்கு தீமை செய்வதிலும் கீர்த்தியுடையவன். புதனாகில் தந்திர மந்திரோபாயத்தால் கீர்த்தியுடையவன். குருவாகில் வேதாந்த விஷயங்களால் பெருமையுடையவன். சுக்கிரனாகில் பொருளாலும் மனைவியாலும் கீர்த்தியடைவன். சனியாகில் துஷ்கிருத்தியங்களில் சரீர பலவன்மையாலும் பிறர் செய்யமுடியாக் காரியங்களைத் தான் செய்வதாலும் கீர்த்தியடைவன்.

இரண்டாம் பாவம்

ஜாதகன் குடும்ப விஷயம்

ஜென்மலக்கினத்திற்கு இரண்டாமதிபன் ஆக்ஷி உச்சம்பெற அந்த ஜாதகன் ஜனித்தபின் அவனது குடும்பம் நாளுக்குநாள் மிக்க யோகமுடையதாகும்.

குடும்பாதிபன் கும்பத்திற்கு கேந்திர கோணங்களில் பலம் பெற்றிருக்கவும், ஜென்மலக்கினத்திற்கு 6-8-12-ஆம் ராசியாகவும் இருக்க அந்த ஜாதகன் குடும்பத்தவர் சகல யோக போகங்களையும் உடையவர்களா யிருப்பினும் இந்த ஜாதகனுக்கு உதவியில்லை.

குடும்பாதிபன் எந்த கிரகமாயினும் குடும்பத் தானத்திலேயே ஆக்ஷிபெற்றிருக்க அவன் குடும்பம் சகல நன்மையும் அடையும் குடும்பஸ்தானத்திற்கு 1-4-5-7-9-10 என்னுமிடங்களில் உச்சம் பெற்றிருக்க அந்த ஜாதகனது குடும்பம் மிக்க செல்வமுடையதாயும், கௌரவமுடையதாயு மிருக்கும்.

குடும்பாதிபன் ஜென்மலக்கினத்திற்கு நான்கிலிருக்க அந்த ஜாதகன் தன் குடும்பத்தவரால் சகல நன்மையும் அடைவன். ஐந்திலிருக்கில் செல்வம், மேன்மை, கௌரவம் முதலியன வுடையவனாவன். ஏழிலிருக்க அந்த ஜாதகனால் அவன் குடும்பத்தவரும், குடும்பத்தவரால் அந்த ஜாதகனும் நன்மையடைவர். ஒன்பதிலிருக்கில் அவன்

குடும்பத்தவர் அல்லது குடும்பம் க்ஷீணமடையுமாயினும் இந்த ஜாதகனால் விருத்தியடையும். பத்திலிருக்கில் ஜாதகனும், ஜாதகன் குடும்பத்தவரும் எந்நாளும் குறைவுபடாத செல்வமுடையவராயும், கௌரவமுடையவராயும் வாழ்வர். குடும்பாதிபன் பதினொன்றி லிருக்கினும் குடும்பம் விருத்தியடைந்து சகல பாக்கியங்களு முடையதா யிருக்கும்.

ஜென்மலக்கினாதிபதிக்கும் குடும்பாதிபதிக்கும் உறவாயின் அந்த ஜாதகனும் அவன் குடும்பத்தவரும் மிக்க ஒற்றுமையுடையவர் களாயிருப்பர். சத்துருவாயின் சத்துருவாகவே யிருப்பர்.

லக்கினாதிபன் பலமிழந்து குடும்பாதிபன் பலம் பெற்றிருக்க அந்த ஜாதகனைவிட அவன் குடும்பத்தவர் மிக்க பலமுடையவரா யிருப்பர் எனவும், மேற்படி குடும்பாதிபன் பலமிழந்து லக்கினாதி பன் பலம் பெற்றிருக்க அந்த ஜாதகனை மிக்க பலமுடையவனாகி யிருப்பன் எனவுங் கூறவேண்டுவது அவசியம்.

க ல் வி

ஜென்மலக்கினத்திற்கு இரண்டாம் அதிபதியால் அந்த ஜாதக னுக்கு உண்டாகும் கல்வியையும் நான்காம் வீட்டால் கல்வியின் பெருமையையுங் கூறவேண்டுவது நியதியாகையால், ஜென்மலக்கி னத்திற்கு இரண்டாமிடத்தினால் அவனுக்கு உண்டாகும் கல்வியினைக் கூறுவாம்.

பொதுவிதி

2-ஆம் வீட்டோன் சூரியன்-சந்திரன்-புதனாகில் தமிழ் வித்தை யுடையவன். செவ்வாயாகில் தெலுங்கு. குரு-சுக்கிரனாகில் சமஸ் கிருதம். சனியாகில் துலுக்கு, ஆங்கிலம் முதலிய அன்னிய பாஷை. புதனாகில் தமிழ், அதர்வணம் முதலிய பாஷை யுடையவன் என்க. மற்றும் இதன் விவரங்களை நான்காம் பாவகத்திற் காண்க.

த ன ம்

ஜென்மலக்கினத்திற்கு இரண்டாம் அதிபன் ஆக்ஷி உச்சங் களால் பலம் பெற்றும் 9-11-ஆம் வீட்டுக்குடையவர்களுடன் தீயர் சேராது நல்லோர்கூட அந்த ஜாதகனுக்கு வேண்டிய அனேகம் பொருள் சேரும்.

9-11-க்குடையோர் இரண்டிலும், 1-2-க்குடையோர் சேர்ந்து 11-லும் நின்று 12-ஐ சூரியன் மட்டும் நோக்காதிருக்க அவன் மிக்க தனமுடையவனாகி வாழ்வன்.

2-11-க்குடையவர் தனித்திருந்து அவர்க்கு 7-ல் குருநிற்கவும், ஜென்மாதிபன் இருந்த ராசிக்கு 7-ல் 11-ஆம் வீட்டோனும் நின்று அவர்களை சூரியன்-செவ்வாய்-சனி இவர்கள் நோக்காதிருப்பார்களே யாமானால் அவன் மிக்க ரொக்க தனத்துடன் வாழ்வன்.

ஜென்மலக்கினாதிபனுடன் சுபன்கூடி 7-ஆம் வீட்டவனுக்கு 7-ல் நிற்க, இவர்களை சனி-சேய்-பாம்பு முதலியவர்கள் பாராதிருக்கின் அந்த ஜாதகன் அளவிடமுடியாச் செல்வமுடையவனாகிப் பெருமையுடன் வாழ்வன்.

சுபகோட்களுடனும் 1-4-5-7-9-10-ஆம் வீட்டவர்களுடனும் பாவர்கள் சம்பந்தமின்றியும் மேற்சொன்ன கேந்திரகோண ஸ்தானங்களில் சுபகோட்களும் இருக்க அந்த ஜாதகன் மிக்க செல்வத்துடன் வாழ்வன்.

தன நஷ்டம்

ஜென்மலக்கினத்திற்கு 2-9-11-முதலிய க்ஷேத்திரங்களுக்கு 7-ல் சனி-செவ்வாய் நின்றாலும் அல்லது மேற்படி 2-9-11-க்குடையவர்கள் எந்த ராசியிலிருந்தார்களோ அந்த ராசிக்கு 7-ல் சனி-செவ்வாய் இவர்களிருந்தாலும், அவர்களை சுபர்களைச் சுபர்கள் பாராதிருக்க அந்த ஜாதகனுக்கு எவ்வளவு தனங்கள் இருக்கினும் அவை யாவும் நாசமாய்ப்போம்.

2-7-11-க்குடையவர்களுடன் சூரியன் சகிதம் பெற்றிருக்கவும், அவர்களிருந்த ராசிக்கு 7-ஆம் ராசியில் 8-12-க்குடையவர்கள் கூடியிருக்கவும், சந்திரனுக்கு 4-ல் சனி நின்று நற்கோட்களேனும் நட்பு கோட்களேனும் பார்க்கவில்லையேல் அந்த ஜாதகனுக்கு எவ்வளவு தனம் இருக்கினும் அவை யாவும் நாசமாய்ப்போம்.

3-5-8-ஆம் ராசியில் சூரியன்-சனி இவர்களிருக்கவும், இவர்களை குரு-புதன்-சுக்கிரன் இவர்கள் பாராது மேற்படி குரு-புதன்-சுக்கிரன் இவர்கள் சூரியனுடன்கூடி ஜென்மலக்கினத்தில் இருந்தாலும் அந்த ஜாதகன் செல்வ மற்றவனாகியும் தரித்திரமுடையவனாயு மிருப்பான்.

2-11-ஆம் ராசியில் அட்டமாதிபனும் 8-ம் ராசியில் சூரியன்-செவ்வாய்-சனி இவர்களுடன் குருவேனும், புதன் சுக்கிரனேனும்கூடி 8-ல் இருக்கவுமானால் அந்த ஜாதகன் தனம் யாவும் நாசமாய்ப்போம்.

சூரியனுக்கு 7-ல் சந்திரனும், சந்திரனுக்கு 2-ல் சனி-செவ்வாயும் நிற்க அந்த ஜாதகன் தனமற்றவனாயும் தரித்திரமுடையவனாயு மிருப்பான்.

ஜென்மலக்கினத்திலும் 3-ம் ராசியிலும் பாவர்களிருக்கவும் 11-ஆம் வீட்டுக்குடையவருடன் பாவர்கள் கூடினாலும் நோக்கினாலும் அல்லது சந்திரன் பலவீனம் பெற்று சந்திரனிருந்த ராசிக்கு 2-11-ல் பாவர்கள் இருந்தாலும் அந்த ஜாதகன் தன் செல்வம் அனைத்தையும் இழந்து சீர் கேடனாயிருப்பன்.

ஜென்மலக்கினத்திற்கு 5-ல் சூரியன் நிற்கவும் 4-ஆம் ராசியில் சனி நின்று ஈனம் பெற்றிருக்கவுமாயின், அந்த ஜாதகன் தனமனைவியையும் இழந்து தரித்திரனாகி வாழ்வான்.

நேத்திர விஷயம்

இரண்டாம் வீட்டோன் இருக்குந் தன்மையைக் கொண்டே நேத்திரபலன். சொல்லவேண்டும். இரண்டாம் வீட்டோன் இரண்டிற்குக் கேந்திரகோணம் என்னும் இவற்றில் பலம் பெற்றிருக்கவும், சுபகோட்களால் பார்வை பெற்றிருக்கவுமானல் அந்த ஜாதகனுக்கு எக்காலத்திலும் நேத்திரநோய் உண்டாகாது.

இர்ண்டாம் வீட்டோன் சனி-செவ்வாய்-ராகு-கேது இவர்களுடன் கூடியும் நீசம் பகை பெற்றும் இரண்டிற்கு 6-8-12-லும் நின்ருல் அந்த ஜாதகனுக்கு அவ்வவர்களது திசைபுக்தி காலங்களில் நேத்திரநோய் உண்டாகும். இதனை அவ்வவர்களது பார்வை சேர்க்கை பலம் முதலியவற்ருல் ஆராய்ந்து நிலை கூறுவது நலம்.

இதனைச் சிறிது விளக்குவாம்.

நேத்திராதிபன் தீயனுகி 8-லிருக்கினும் சனி சந்திரனுடன்கூடி 6-ல் நிற்க அந்த ஜாதகன் பூனைக்கண்ணனுகி இருப்பன்.

நேத்திராதிபன் சுக்கிரனுகி சந்திரன் சனியுடன்கூடி 8-ல் நின்று பாம்புகளில் ஒன்றுடன் கூடியிருக்க அவன் பிறவிக் குருடனுவான்.

நேத்திராதிபன் சனியாகி சுக்கிரனுடன்கூடி 3-ல் நின்று சந்திரனுக்கு அட்டமஸ்தானம் பெற்றிருக்கின் அந்த ஜாதகனுக்குத் தன் மத்திப வயதில் ஒரு கண் போம்.

நேத்திராதிபன் சூரியனுகி இராகு அல்லது கேதுடன்கூடி 6-ல் நின்று சனி செவ்வாயால் பார்வை பெற்றிருக்க அந்த ஜாதகனுக்கு இடைநடுவில் நேத்திரநோய் உண்டாகி அதனுல் துன்பப்படுவன்.

ஜென்மலக்கினம் மேஷம் அல்லது கன்னியாகி சுக்கிரன் நீசம் பெற்று சூரியன்-செவ்வாய்-சனி முதலியவர்கள் சேர்க்கை அல்லது பார்வையாயிருக்கின் அந்த ஜாதகன் தன் சிறுவயதிற்ருனே நேத்திரத்தை இழந்துபோவான்.

நேத்திராதிபன் குருவாகி சுக்கிரனுடன் கூடியும், சுக்கிரனுகி குருவுடன் கூடியும், சந்திரனுக்கு 6-ல் நிற்கில் அவனது விழியில் இரணமுண்டாகும் எனவும், 8-ல் நிற்க அளவில்லா உபாதியுண்டாகுமென்க. 12-ல் நிற்கில் மேற்படி நோயினுலேயே அந்தகனுய்ப் போவான்.

இரண்டாம் வீட்டோன் சந்திரனுகி சுக்கிரனுடன்கூடி ரிடபத்தில் நிற்கின், சனி-ராகு-கேது இவர்களுடன் கூடியாவது பார்வை பெற்ருவது இருக்கின் அந்தஜாதகனுக்குத் தன் நடுவயதிலுண்டாகும் வைசூரியால் அந்தகனுவன்.

2-ஆம் வீட்டோன் செவ்வாயுடன்கூடி 8-ல் நின்று நீசம்பெற்ற சந்திரனுலும், பகை பெற்ற சனியாலும் பார்வை பெற்றிருக்க அந்த

ஜாதகன் தன் சிறுவயதிலேயே விளையாட்டுச் சண்டையால் ஒருகண் அல்லது இருகண்ணும் குருடாய்ப் போவன்.

நேத்திராதிபன் குரு சுக்கிரனாகி 6-8-12-ஆம் ராசியிலிருந்து சனி - செவ்வாய் இவர்கள் நீசம் பகை பெற்றுப் பார்க்க அந்த ஜாதகன் தன் வாலிபகாலத்தில் குச்சு முதலிய கருவி ஆயுதங்களால் ஒரு கண்ணிழப்பன்.

மற்றுமுள்ள விவரங்களை சோதிடக் களஞ்சியத்தில் பார்க்கக் காண்க.

மூன்றும் பாவம்

சகோதர விஷயம்

மூன்றும் இராசியாலும் அவ்வீட்டதிபனாலும் அந்த ஜாதகனுக்குப்பின் உண்டாகும் சகோதர விஷயம் அனைத்தையும் அறியலாம்.

சகோதர விஷயமாய் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயமாவன:—

1 இந்த ஜாதனுக்குப்பின் சகோதர சகோதரிகள் உண்டாவார்களா இல்லையா?

2 உண்டு என்றால் எத்தனை? அவற்றுள் ஆண் எத்தனை பெண் எத்தனை?

3 மொத்த சகோதர சகோதரிகளில் மறித்ததுபோக தீர்க்காயுளுடனிருப்பது எவ்வளவு அவற்றுள் ஆண் பெண் சங்கியை என்ன?

4 சகோதரர்களுக்கு உண்டாகும் யோகங்களும், அவை எந்த காலத்தில் உண்டாகும்.

5 சகோதரர்களுக்கும் அந்த ஜாதகனுக்கும் உள்ள ஒற்றுமை என்னும் இவற்றை மிக்க சூக்ஷமாய் அறிதல்வேண்டும்.

1 பின் சகோதரர்கள் உண்டா இல்லையா என்பதை அறியும் மார்க்கம்

மூன்றும் வீட்டிற் செவ்வாயிருந்தாலும் அல்லது பார்த்தாலும் மேற்படி செவ்வாயை சுபகோட்கள் கூடியோ அல்லது பார்வையோ இல்லையேல் அந்த ஜாதகனுக்குப்பின் கருவுண்டாகாது. அப்படி உண்டானாலும் தாய் கருப்பையிலே க்ஷீணிக்கும்.

மூன்றும் வீட்டோன் செவ்வாயாகி சனியுடன் கூடியும், சனியாகி செவ்வாயுடன் கூடியும், ஜென்மலக்கினத்திற்கு 12-ல் நின்று பாம்புகளிலொன்றால் பார்வைபெற அந்த ஜாதகனுக்குப்பின் அனேக சகோதரங்கள் உண்டாகுமாயினும் உடனுக்குடன் மறிக்கும்.

மூன்றும்வீட்டில் சனி ராகு அல்லது சனி-கேது அல்லது சனி-செவ்வாய் இவர்கள் நின்று மற்றுமுள்ள பாவர்களால் பார்வை பெற்றிருக்க அந்த ஜாதகனுக்குப் பின் எத்தனை சகோதரர்கள் உண்டாயினும் உடனே மறிப்பர். அல்லது பிறந்த 1-2-3-ஆண்டுகளுக்குள் மறிப்பர்.

மூன்றுமிராசியிற் பாவர்களிருந்து 2-4-க்குடையோர் அத்தமயம் பெற்று 9-ல் சனியும், 12-ல் செவ்வாய் நின்று சுபகோட்களின் சேர்க்கையற்றால் அந்த ஜாதகனுக்குச் சகோதரர்களில்லை.

மூன்றுமிராசியில் செவ்வாயும் ஐந்தில் ராகுவும் நின்று ஜென்மலக்கினதியுடன் சனி கூடியும், சந்திரனுடன் பாம்புகளிலொன்று சம்பந்தம் பெறின் அந்த ஜாதகனுக்குச் சகோதரங்களில்லை.

8-ல் குரு நின்று சனி-செவ்வாய் சகிதம் பெற்று, குருவுடன் மூன்றும்ராசி நாதனும், ராகுவும் கூடி ஆறில் நிற்க அந்த ஜாதகன் சகோதரர்களற்றவனாகித் தனித்து வாழ்வன்.

6-ஆம் வீட்டோன் மூன்றிலும், சந்திரனுடன் பாம்புகளிலொன்றும், மூன்றும்வீட்டோனுடன் சூரியன் கூடி எட்டிலும், சனிக்கேழில் செவ்வாயும் நிற்க அந்த ஜாதகனுக்குச் சகோதரர்கள் இல்லை.

மூன்றுமிராசியில் சூரியன்-சுக்கிரனும், 5-ல் செவ்வாயும், 11-ல் சந்திரனும், ஜென்மலக்கினத்தில் பாம்புகளிலொன்று நிற்கின் அந்த ஜாதகன் சகோதரர்களற்றவனாகித் தனித்து வாழ்வன்.

மூன்றிற் பாவ கிரகங்கள் நிற்கவும், சந்திரன் பாவர்களுடன் கூடி எந்த ராசியிலிருந்தானோ அந்தராசிக்கேழில் பாவர்களும் நிற்க சூரியனுடன் மூன்றும் வீட்டோன் கூடியிருக்க அந்த ஜாதகன் சகோதரறற்றவனாவன்.

செவ்வாயும் சனியும் கூடி மூன்றுமிராசியில் நின்றும், மூன்றும் வீட்டோன் சூரியனுடன் கூடிச் சுபர்பார்வையற்றும், இடபத்தில் ராகு நின்று சிம்மத்தில் சந்திரனிருக்கப் பிறந்தவன் தனக்குப்பின் சகோதரர் அற்றவனாகித் தனித்துவாழ்வன்.

மூன்றுமிராசியில் ராகு முதலிய பாவர்களும் செவ்வாய் நீசம் பெற்றும், ஜென்மலக்கினத்திற்கு 2-4 என்னுமிடங்களிலும் பாவர்களிருப்பாரேயாமாயின் அந்த ஜாதகனுக்குப்பின் சகோதரர்களுண்டாகார்.

மேற்சொல்லிய வண்ணம் கொடிய கிரகங்கள் அமைந்திருந்தாலும், மேற்படி பாவர்களுடன் சுபர்களாகிய சந்திரன் - குரு - சுக்கிரன் இவர்கள் கூடியிருந்தாலும் நோக்கினாலும், அந்த ஜாதகனுக்குச் சகோதரர்கள் உண்டாவார் எனினும் உடனுக்குடன் மறிப்பார் எனக் கூறுக.

சகோதர விருத்தி

செவ்வாய் நின்ற ராசிக்கு நான்காமிராசியில் குருவும், புத னிருந்த ராசிக்கு ஏழாமிராசியில் மூன்றும் வீட்டோனும், சனி நின்ற ராசிக்கு ஏழில் சுக்கிரனும் நின்றாலும், சந்திரனுக்கு நான்கில் செவ்வாய் நின்றாலும் அந்த ஜாதகன் சகோதரவிருத்தி யுடையவ னுவான்.

ஆறும் வீட்டோன் ஆக்ஷிபெற்று அவருடன் சுபகோட்கள் கூடியிருக்க, செவ்வாய் ஆக்ஷிபெற்று பாவர்களது பார்வையற்றும், ஜென்மத்தில் குருவும், நான்கில் சந்திரனு மிருந்தால் அந்த ஜாதக னுக்குப்பின் அனேக சகோதரர்கள் உண்டாவார்.

மூன்றும் வீட்டோன் ஆக்ஷிபெற்று அவருடன் குரு கூடி பாவர்கள் பன்னிரண்டில் நின்று, செவ்வாயுடன் சுக்கிரன்கூடி எந்த ராசியிலிருந்தாலும் அந்த ஜாதனுக்குப்பின் அனேக சகோதரங்க ளுண்டாகும்.

ஐந்தாம் வீட்டோன் உச்சனுகி அல்லது ஆக்ஷிபெற்றிருக்கவும், செவ்வாயுடன் புதன் குரு இவர்கள்கூடி நின்றும், மூன்றிற் சந்திர னிருந்து 12-ல் சனி சூரியன் இவர்கள்கூடி நின்றாலும் அந்த ஜாதகன் அனேக சகோதரர்களை யுடையவனுவான்.

9-ல் குரு தனித்திருந்தும், சந்திரன் ஆறில் நின்று ஆறும் வீட்டோன் 11-ல் நின்றாலும், பாவர்கள் நீசம் பெற்று ஜென்மலக்கி னத்தில் சுக்கிரன் நின்றாலும் அந்த ஜாதகன் அனேக சகோதரங்களை யுடையவனுவான்.

செவ்வாயிருந்த ராசியையும் மூன்றுமிராசியையும் சுபகோட்கள் நோக்கவும், ஜென்மலக்கினுதி ஏழில் நின்றாலும் அந்த ஜாதகனுக்கு தீர்காயுளையுடைய அனேக சகோதரங்களுண்டாவர்.

இவ்வண்ணம் அவ்வவர்களது கிரக அடைவியில் சகோதரங்கள் உண்டென்றும், இல்லையென்றும், உண்டாகி மறிப்பார் எனவும் தெரிவது சிலாக்கியமாகும். இங்கு சகோதரர்கள் எத்தனை யென்ப தையும் அவற்றுள் ஆண் பெண் சங்கியை என்ன என்பதையும் விளக்குவாம்.

மூன்றும் ராசிமுதல் மூன்றும் ராசிநாதன் எந்த ராசியிலிருந் தானே அந்த ராசிவரையில் எத்தனை கிரகங்களிருந்தனவோ அத்தனை சகோதரங்கள உண்டாவர்.

அவற்றுள் பலம் பெற்ற கிரகங்கள் எத்தனையோ அத்தனைபேர் நிலைத்திருப்பார் எனவும், பலமிழந்த கிரகங்கள் எத்தனையோ அத் தனைபேர் மறிப்பார் எனவுங் கூறுவர்.

மற்றும் சில நூலாசிரியர்கள் சகோதரகாரகனிருந்த ராசிமுதல் மூன்றும் ராசிவரையில் எத்தனை கிரகங்களிருந்தனவோ அத்தனை

சகோதரர்கள் எனவும் அவற்றுள் முன்கூறியபடி பலம்பெற்ற கிரகங்களை நிலைத்திருப்பர் எனவும், பலமிழந்த கிரகங்களை பிறந்து மறிப்பார் எனவுங் கூறுவர்.

மற்றும் சிலர் சகோதர ஸ்தானாதிபன் நின்ற ராசிமுதல் செவ்வாய் நின்ற ராசிவரையிலுள்ள கிரகங்களைக் கணக்கிட்டு அவற்றுள் பலம்பெற்ற கிரகத்தை நிலைத்திருப்பதெனவும், பலமிழந்த கிரகத்தை மறிப்பார் எனவுங் கூறுவர்.

இம் மூவகையினுள் எவை அநுபவத்திலொற்றுமையாயுள்ளனவோ அவ்வண்ணம் நிலைக்கூறுவது நலம். ஆயினும் தற்காலம் மிக்க பிரசித்தி பெற்றுலவும் சாதக அலங்காரம் போன்ற நூற்கள் சகோதர ஸ்தானமுதல் சகோதர ஸ்தானாதிபனிருந்த ராசிவரையிலோ அல்லது சகோதர ஸ்தானமுதல் சகோதரகாரகன் நின்ற ராசிவரையிலோ உள்ள கிரகங்களைக் கணக்கிட்டு முன்கூறியபடி பலம்பெற்ற கிரகசங்கியை நிலைத்திருப்பதெனவும், பலமிழந்த கிரகங்களை மறிப்பதெனவும் கூறவேண்டுவதே ஏகதேச பொருத்தமானதாகுமெனக் கூறியுள்ளனர். இவை அநுபவத்திலும் சம்மதிக்கப்பட்டு வருகின்றன.

உதாரணமாகக் கீழ்க்கண்ட சக்கரத்தை கவனியுங்கள்.

ல	சனி	ராகு	
	ராசி		
			அ-சு சூரி
	கேது	சங்	புத குரு

மேற்கண்ட சக்கரத்துள் சகோதர ஸ்தானமான இடபராசியிலிருந்து, மேற்படி இடபத்திற் கதிபனான சுக்கிரனிருந்த ராசிவரையில் நான்கு கிரகங்களுள்ளன. அவற்றுள் இடபராகுவுக்கு பூரணபலம் உண்டு. மற்றும் சிங்கராசியில் சூரியன் செவ்வாய் ஆகிய இருவருக்கும் பூரணபலம் உண்டு. சுக்கிரன் ஒருவனே பகை பெற்றவன் ஆனதால் இந்த ஜாதகனுக்கு மூன்று சகோதரர்களே நிலைத்திருப்பர்.

இவ்வண்ணமே ஏனைய ஜாதகனுக்கும் பிரித்துக் கூறுக. இங்கு சகோதரர்களுக்கு உண்டாகும் யோக விவரங்களைக் கூறுவாம்.

சகோதர ஸ்தானமான மூன்றும் ராசியையே மேற்படி சகோதரனது ஜென்மலக்கினமாகக்கொண்டு, அந்த ராசிக்கு 4-5-7-9-10-ஆம் வீட்டவர்களிருக்கும் தாரதரத்தாலேயே சகோதரர்களது யோக முதலியவற்றைக் கூறவேண்டும்.

சகோதர ஸ்தானத்திற்கு நான்காம் ராசிநாதன் பலம் பெற்றிருக்க அந்த ஜாதகனது சகோதரன் பூமி வாகனம் முதலிய செல்வத்துடன் சுகித்து வாழ்வான்.

மூன்றிற்கு ஐந்தாம் ராசிநாதன் பலம் பெற்றிருக்கின் அந்த ஜாதகனது சகோதரர் மிக்க கௌரவத்துடனும் பூமி பொக்கிஷத்துடனும் வாழ்வார்.

மூன்றிற்கு ஏழாம் ராசிநாதன் பலம் பெற்றிருக்க அந்த ஜாதகனது சகோதரர்கள் மனைமக்கள் இவர்கள் விருத்தியுடையவராய் தமது களத்திரவகை செல்வமுடையவர்களாய் வாழ்வர்.

மூன்றிற்கு ஒன்பதாம் ராசிநாதன் பலம் பெற்றிருக்க அவனது சகோதரர்கள் தமது பிதுர்வகை செல்வத்தாலும் சுயார்ச்சித யோகத்தாலும் மிக்க கீர்த்தியுடன் வாழ்வார்.

மூன்றிற்கு பத்தாம் ராசிநாதன் பலம் பெற்றிருப்பாராயின் அவனது சகோதரர்கள் தான் செய்யும் உத்தியோகம் கைத்தொழில் வியாபாரம் முதலியவற்றால் விசேஷ யோகத்தை அடைவார்.

மேற்சொன்ன மூன்றும் ராசிக்கு 4-5-7-9-10-என்னும் ராசிநாதர்கள் பலவீனம் பெற்றிருக்க அவனது சகோதரர்கள் யோக மற்றவர் எனவே கூறவேண்டும்.

மூன்றும் ராசிக்கு 6-ஆம் வீட்டோன் பலம் பெறின் அவனது சகோதரன் வியாதியுடையவனும் கடனுடையவனுமாகும்.

மூன்றும் ராசிக்கு 8-ஆம் ராசிநாதன் பலம் பெற்றிருக்க அந்த ஜாதகனது சகோதரர்கள் பற்பலவிதமான கஷ்டம் வறுமை முதலிய துன்பத்திற்காளாவர்.

மூன்றும் ராசிக்கு 12-ஆம் ராசிநாதன் பலம்பெறின் அந்த ஜாதகன் எவ்வளவு சம்பாதிக்கினும் உடனுக்குடன் செலவு செய்வதோடு தேசாந்திரியாய்த் திரிவன்.

மூன்றும் ராசிக்கு 2-ம் ராசிநாதன் பலம் பெற்றிருக்க அந்த ஜாதகனுடைய சகோதரர் தனவிருத்தியுடையவர் எனவும், 11-ஆம் வீட்டோன் பலம்பெற சகல விதத்தாலும் லாபம் உடையவர் எனவும் கூறவேண்டும். இவ்வண்ணமே ஏனைய பாவங்களையும் ஆராய்ந்து பலன் கூறுக.

இங்கு அந்தந்த ஜாதகனுக்கும் அவன் சகோதரர்களுக்குமுள்ள ஒற்றுமை முதலியவற்றைக் கூறுவாம். இதனை ஜென்மலக்கினாதி

பதிக்கும் மூன்றும் வீட்டோனுக்குமுள்ள பகை நட்பு முதலியவற்றாலேயே அவர்களது ஒற்றுமையையும் கூறவேண்டும் என்பது சாஸ்திரயுக்தம். ஆனதால், கிரக பகை நட்பு முதலியவற்றைக் கூறுவாம்.

கிரக பகை

சூரியனுக்குப் பகை	சுக்கிரன்-சனி
செவ்வாய்க்குப் பகை	புதன்
புதனுக்குப் பகை	சந்திரன்
குருவுக்குப் பகை	புதன்-சுக்கிரன்
சுக்கிரனுக்குப் பகை	சூரியன்-சந்திரன்
சனிக்குப் பகை	சூரியன்-மதி-குஜன்
ராகு-கேதுவுக்குப் பகை	சூரியன்-சந்திரன்

சந்திரனுக்குப் பகைவர்கள் இல்லை.

கிரக நட்பு

சூரியனுக்கு	குரு
சந்திரனுக்கு	அங்காரகன்-புதன்
குஜனுக்கு	சுக்கிரன்
புதனுக்கு	சூரியன்
குருவுக்கு	சனி
சுக்கிரனுக்கு	சனி-அங்காரகன்-புதன்
சனிக்கு	புதன்-குரு
ராகு-கேதுவுக்கு	சூரியன்-சந்திரன் தவிர ஏனைய கோட்களென்க.

நான்காம் பாவம்

மாதுருபலன்

ஜென்மலக்கினத்திலும் நான்கிலும் சுபகோட்களிருக்கவும், சுபகோட்களுடன் நான்காம் வீட்டோன் கூடியிருக்கவும், சந்திரன் பலம்பெற்று சனி சூரியன் இவர்கள் பாராதிருப்பார்களாயின் அந்த ஜாதகனது தாயானவள் தீர்க்காயுளும் சுகமும் உடையவளாவள்.

4-7-10-ஆம் இடங்களில் பாவரின்றி சுபர்களிருக்கவும், நான்காம் வீட்டோன் குருவுடன்கூடி 9-ல் நின்று 12-ஆம் வீட்டோன் ஆக்ஷிபெற்றிருக்கின் அவனது தாயானவள் தீர்க்காயுளும் செல்வமும் உடையவளாவள்.

சந்திரன் நான்கிலிருந்தாலும், அல்லது சந்திரன் எந்த ராசியிலிருந்தாலும் அவனை சனி-ரவி-செவ்வாய் இவர்கள் பாராதிருந்தாலும் அல்லது சந்திரனிருந்த ராசிக்கு ஏழாமிராசியில் குரு-சுக்கிரன் இவர்களிருந்தாலும், நான்கில் சுக்கிரனிருந்து சந்திரன் ஆக்ஷிபெற்

றிருந்தாலும் அவனது மாதா சகல பாக்கியமும் உடையவளாய் பூரணவயதோடு இருப்பாள்.

1-4-7-10-க்குடையவர் ஒன்றுகூடி 5-9-ஆம் ராசியிலிருக்கவும், மேற்படி 5-9-ஆம் அதிபர்கள் 1-4-7-10-ஆம் ராசியிலிருந்தாலும், சந்திரன் பலம்பெற்று சனி-செவ்வாய்-சூரியன் இவர்கள் பாராதிருப் பார்களேயாமானால் அவனது மாதா தீர்க்கவயதும் சம்பத்தும் நிறைந் தவளாவாள்.

சந்திரன் பலம் பெற்றும் கேந்திரங்களிலொன்றில் குரு நின்று பாவர்கள் பார்வையற்று நின்றாலும் அந்த ஜாதகனது மாதா தீர்க்கா யுளும் சம்பத்தும் உடையவளாகி யிருப்பாள்.

சந்திரன் நின்ற வீட்டோன் சுபகோட்களுடன் கூடியும் சந்திர னுக்கு ஏழில் சுபர்களிருந்தாலும் சுபகோட்கள் 9-10-ஆம் ராசியில் நின்று பாவர்கள் பாராதிருந்தாலும் அந்த ஜாதகனது மாதா தீர்க்கா யுளும் சம்பத்துமுடையவளாக இருப்பதோடு அவளது சுற்றத்தவர் களும் தழைத்துவாழ்வர்.

மாதுரு தோஷம்

நான்கு ஏழு ஆகிய இடங்களில் பாவர்களிருந்து சுபர் பார்வை யற்று பாவர்கள் பார்வையுற்றாலும், 4-7-ஆம் வீட்டவர்கள் நீசம் பெற்று சந்திரன் பலவீனம் பெற்றிருந்தாலும் அந்த ஜாதகன் ஜனித்த சிலமாதங்களுக்குள் மாதாமரண மடைவாள்.

10-ஆம் ராசியில் சனி-செவ்வாய் இவர்களிருந்து நான்கு ஏழு இவ்விடங்களிலோ, அல்லது 4-7-ஆம் அதிபர்களோ நீசம் பெற்றிருந் தாலும், இவர்களை சுபகோட்கள் நோக்கவில்லையாகில் இந்த ஜாதகன் ஜனித்த சில மாதங்களுக்குள் அவன் தாய் மரண மடைவாள்.

நான்கில் சந்திரனும் 7-ல் செவ்வாயிருந்து ஜென்மலக்கினத்தில் சனி நின்றாலும் 6-8-ஆம் ராசியில் குரு நின்று ஏனைய சுபகோட்கள் பாராது பாவர்கள் பார்வையுற் றிருப்பாரேயாமாயின் அவன் தாய் சில நாட்களுக்குள் மரணமாவாள்.

4-7-ஆம் இடங்களில் பாவர்களும், சுபர்கள் நீசம் மூடம் பெற் றும் சனியுடன் சந்திரன் கூடி அவர்களிருந்த ராசிநாதன் பலவீனம் பெற்றிருந்தாலும் ஜென்மலக்கினத்தில் சூரியனும் 4-ல் சனியுமிருந்து நாலாம் வீட்டோன் நீசம் பெற்றிருந்தாலும் அவன் தாய்க்குச் சில மாதங்களுக்குள் கட்டாயம் தீம்புண்டாகும்.

குரு-சந்திரன் ஆகிய இருவரும்கூடி நான்கா மிராசியிலிருந்தால் அந்த ஜாதகனது தாய்க்கு தோஷமுண்டாகும். அவை என்ன வெனில்? தாயும் தாய்வற்கத்தவரும் நாசமாவர். இவர்களை ஏனைய சுபகோட்கள் பார்க்கவில்லையேல் இந்த ஜாதகனுக்குப்பின் உண்டா கும் கருவோடு தானும் மறிப்பாள் என்பது திண்ணம்.

நான்காம் ராசியில் செவ்வாய் நின்று சுபர் பார்வையற்றும் சந்திரனுக்கு நான்கில் சூரியன் நிற்கவும் ஆனால் அவன் தாய் சில நாட்களுள் மரணமாவள். இத்துடன் ஜென்மலக்கினத்திலும் சனி நின்றால் அந்த ஜாதகனும் அவன் தாயும் சில நோங்களுக்குள் மரணமாவர்.

6-8-ஆம் வீட்டுக்குடையவர் கேந்திரத்திலும் கேந்திராதிபர்கள் 6-8-ஆம் இடத்திலும் நின்று சந்திரனுடன் பாம்புகளிலொன்றில் கூடியிருந்து பாவர்கள் பார்வையற்று இருப்பார்களேயாமாயின் அவன் தாய் சில காலத்துள் (வயது 10-க்குள்) மரணமாவாள்.

சனி செவ்வாய் ஒன்றுகூடி ஏதேனும் ஒரு ராசியிலிருந்து ஜனனகாலத்தில் தேய்ப்பிறைச் சந்திரனுகி நீசம் பெற்றாலும், சனி செவ்வாய் நான்கில் நின்று பாவர்கள் பார்வை பெற்றிருந்தாலும் அவன் தாய் சில நாட்கள் அல்லது மாதங்களுள் மரணமாவாள்.

நான்காம் ராசியில் சூரியன் நின்று 7-ல் வளர்பிறைச் சந்திரனும் சனியும் கூடியிருந்தாலும், நான்கு அல்லது ஏழாம் ராசியில் செவ்வாய் நின்று ஜென்மலக்கினத்தில் ராகு அல்லது கேது நின்று சுபகோட்கள் பார்க்கவில்லையேல் அந்த ஜாதகன் பிறந்த இரவிலேயே தாய் மரணமாவாள்.

மேலே சொன்னபடி தாய்க்கு தோஷம் உண்டாகத் தகுந்தபடி கிரகங்கள் அமைந்திருந்தாலும் குரு - சுக்கிரன் என்னும் இருவர் நோக்குவரேயாமானல் சிலகாலம்வரையில் அவன் தாய் உயிரோடு இருப்பாள். பொதுவாய்க் கூறுமிடத்து எவ்வித தோஷம் இருப்பினும் குரு-சுக்கிரன் என்னும் இருவர் சேர்ந்தாலும் பார்த்தாலும் அவனது தாயானவள் எட்டு வருஷங்கள் வரையிலாவது உயிரோடு இருப்பாள்.

நான்கில் சுபரும் பாவரும்கூடி நின்று சந்திரனுடன் சூரியனும் 4-ஆம் வீட்டோன் பாம்புகளில் ஒன்றுடன்கூடி இவர்களுடன் ஜன்மாதிபன் கூடவில்லையேல் அவன் பிறந்த நான்காம் வருடத்தில் அவன் தாய் இறந்துபோவாள்.

சூரியனுடன் பாவர்கள் சேராமலும் 4-7-12-ஆகிய இவ்விடங்களில் சந்திரன் இல்லாமலும் 8-12-ஆம் வீட்டோர் ஆக்ஷி பெறாமலுமிருந்தால் அவன் தாயானவள் நெடுநாள்வரையில் உயிர் வாழ்வாள்.

இதுகாறுங் கூறிப் போந்தபடி தாய்க்கு அற்ப ஆயுளென்றும் தீர்க்காயுளென்றும் சுகமுள்ளவள் இல்லாதவள் என்றும் திட்டமாய்க் கூறவேண்டும்.

முதன்முதலாய் நான்காம் வீட்டோனும், இரண்டாவது ஏழாம் வீட்டோனும், மூன்றாவதாய்ச் சந்திரனையும் நிதானித்தே மாதுரு பலன் கூறவேண்டுவது அவசியமாகும்.

இதுவன்றி மாதுரு ஸ்தானாதிபன் இருந்த வீடுமுதல் ஏழாம் அதிபன் நின்ற வீடுவரையில் எத்தனை கிரகங்கள் இருந்தனவோ அத்தனைபேர் தாய்க்கு சகோதரிகள் எனவும், மேற்படி கோட்களுள் எத்தனை கோட்கள் பலம் பெற்றிருந்தனவோ அத்தனைபேர் தீர்க்காயுளுடன் இருப்பவர் என்றும் கூறவேண்டும்.

மற்றும் நான்காம் ராசிமுதல் 7-ஆம் ராசிவரையில் எத்தனை கிரகங்களுள்ளனவோ அவையே தாய்க்கு மொத்த சகோதரிகள் எனவும் சில நூற்கள் கூறுகின்றனவாயினும் அவை அனுபவத்தில் அவ்வளவாகச் சம்மதிக்கப்படவில்லை.

ஆதலால் அந்த ஜாதகத்தில் சந்திரன் பலம் பெற்றிருக்கின் சந்திரனிருந்த ராசிமுதல் மூன்று ராசிகளிலுள்ள கிரகங்களைக் கூட்டியும், நாலாம் வீட்டோன் பலம் பெற்றிருக்க நான்கிற்கு மூன்று ராசிகளிலுள்ள கிரகங்களைக் கூட்டியும் மாதுரு சகோதரி சங்கியைகளைக் கூறவேண்டுவது பொருத்தமானதாகும். இதன் விவரங்களை எம்மால் விருத்தியுரை எழுதி வெளியிட்டுள்ள சோதிடக் களஞ்சியத்தில் பார்க்கவும்.

ஐந்தாம் பாவம்

புத்திர பலன்

ஐந்தாம் வீட்டோன் ஆக்ஷியாகி, குரு பலம் பெற்றுப் பகைவருடன் சேராது சனி-செவ்வாய் இவர்களது பார்வைபெற்று நிற்கப் பிறந்தவனுக்கு அனேக சந்ததிகள் உண்டாவர்.

பாக்கியாதிபன் அல்லது 9-ஆம் வீட்டோன் 9-ஐ பார்க்க, குரு ஆக்ஷிபெற அல்லது பலம் பெற்றிருக்க, சூரியன்-சனி-செவ்வாய் இவர்கள் 6-8-ல் நிற்கின் அந்த ஜாதகன் அனேக புத்திரர் புத்திரிகளை யுடையவனுவான்.

ஐந்தில் சுபர் நின்று ஐந்தாம் வீட்டோன் நட்பு கிரகங்களுடன் கூடி பாவர்கள் பலவீனம் பெற்றிருக்கினும் அந்த ஜாதகனுக்குப் புத்திர புத்திரிகள் அனேகம்.

10-ஆம் ராசியில் குரு நின்று' குரு ஆக்ஷி உச்சம் பெற்று 7-ஆம் அதிபன் 11-ல் நின்று 6-8-12-ல் பாவர்களிருந்தாலும் அனேக புத்திருண்டாவர்.

ஐந்தாம் வீட்டோன் நட்பு பெற்றும் குரு ஆக்ஷி உச்சங்களால் பலம் பெற்றும் ஐந்தாமிராசியைக் கொடியவர் அல்லது சத்துரு கிரகங்கள் பார்க்கவில்லையேல் அவனுக்கு அனேகம் புத்திர புத்திரிகள் உண்டாவர்.

குரு 4-10-ஆம் இடங்களிலிருந்து 5-ஆம் வீட்டோன் 11-ல் நின்றாலும், ஐந்தில் நல்லோரிருந்து சனி-செவ்வாய் பார்வையற்றிருந்தாலும் அவனுக்குப் புத்திரர் அனேகருண்டாவர்.

குரு-சந்திரன் இவர்கள் பகை நீசம் பெறாமலும், அவர்களை சனி-ரவி-செவ்வாய் இவர்கள் கூடாமலும் பாராமலுமிருந்து மேற்படி சனி-செவ்வாய் இவர்கள் 4-7-10-ஆம் இடங்களிலல்லது வேறு எவ்விடங்களி லிருந்தாலும் அவனுக்குப் புத்திரர் உண்டு.

குரு-மதி இவர்கள் ஆக்ஷியாகி பாவர்கள் நோக்குறாது 5-9-ஆம் இடங்களை பலம் பெற்ற எந்த கிரகம் நோக்கினும் அந்த ஜாதகனுக்குப் புத்திரருண்டு.

ராகு-கேதுக்கள் 5-9-ஆம் இடங்களில் இல்லாமலும், மேற்படி இடங்களில் சனி-செவ்வாய்-இரவி இவர்கள் சேராமலும் பாராமலும் இல்லாமலுமிருந்து, 5-ம் வீட்டோனும் புதனும்கூடி மீனம்-மகரம் என்னும் ராசியில் அல்லாது வேறு எந்த ராசியில் இருந்தாலும் அவனுக்குப் புத்திரருண்டு.

ஐந்தாம் வீட்டை ஐந்தாம் வீட்டவனே நோக்கவும் குரு தன் வீடாகிய தனு மீனத்தைப் பார்த்திருந்து மேற்படி இருவரையும் பாவர்கள் பாராமலும், மூடம் அத்தமயம் பெறாமலுமிருந்து 4-6-ஆம் ராசியிலும் குரு நின்ற ராசிக்கு 2-12-ஆம் ராசியிலும் பாபர் இல்லாதிருக்கின் அந்த ஜாதகனுக்குப் புத்திர விருத்தி உண்டாகும்.

நாலாம் அதிபன் ஏழிலும் பத்தாம் அதிபன் ஐந்திலுமிருந்தும் ஐந்தாம் அதிபன் பத்திலிருந்து சனி நோக்கமற்றிருக்க அந்த ஜாதகனுக்கு அனேகம் புத்திரர்கள் உண்டாவர்.

ஐந்தாம் ராசியை குரு பாராமலும் ஐந்தாம் அதிபனை சனி நோக்காமலு மிருந்தாலும், பாவர்கள் ஐந்தாம் ராசியில் இல்லாமலும் 5-ஆம் ராசிநாதன் சனிக்கு 7-ஆம் ராசியில் இல்லாமலிருந்து பாவர்களது சேர்க்கை பார்வையற்றிருக்கும் ஜாதகனுக்கு அனேகம் புத்திரர்கள் உண்டாவர்.

குரு ஆக்ஷி பெற்றிருந்து, ஐந்தாம் ராசியிலேனும் இடபத்திலேனும் செவ்வாய் நின்றால் அந்த ஜாதகனுக்குப் புத்திரர்கள் அனேகம் உண்டாவர். ஆயினும் 7-ல் சனி இருக்கலாகாதென்றறிக.

ஜென்மலக்கினத்திற்கு ஐந்தாம் ராசியானது விருச்சிகமாகி அதில் செவ்வாய் நின்று குரு ஆக்ஷி பெற்றிருந்தாலும், 5-9-ஆம் ராசியில் சனி இல்லாதிருந்து குரு ஆக்ஷி பெற்றிருந்தாலும் அந்த ஜாதகனுக்குப் புத்திரர்கள் அனேகம் உண்டாவர்.

மேஷராசியில் ஜனனமாகியதில் குரு நின்று 5-ல் சூரியனிருந்து குரு மிதுனராசியில் இருந்தாலும் அந்த ஜாதகனுக்கு அனேக புத்திர புத்திரிகள் உண்டாவர்.

ஐந்தாம் ராசி ஆண்ராசியாகி அதில் பெண் கிரகமும், பெண் ராசியாகி ஆண் கிரகமும் நின்ருலும், சந்திரனிருந்த ராசி பெண் ராசியாகி 5-ஆம் ராசியானது ஆண் ராசியானுலும், குரு நின்ற ராசிக்கு 5-9-ஆம் ராசியில் சுபகோட்களில் இருந்தாலும் அந்த ஜாதகனுக்கு புத்திர புத்திரிகள் அனேகம் உண்டாவர்.

சந்திரனிருந்த ராசியானது ஆண் ராசியாகி 5-ஆம் ராசிநாதன் குரு நின்ற ராசிக்கு 7-ல் நின்றும், 5-ஆம் ராசிநாதன் பெண்கிரகமாகி கேந்திரத்தில் இருந்தாலும் அந்த ஜாதகனுக்கு அனேக புத்திர புத்திரிகள் உண்டாவர்.

ஐந்தில் சுக்கிரனிருந்து அவை தனுசு-மீனம் என்னும் இரண்டில் ஒன்ருகி, குரு நின்ற ராசிக்கு 5-ஆம் ராசியில் சந்திரனும் சந்திரனுக்கு ஐந்தில் 5-ஆம் வீட்டோனும் நிற்க அந்த ஜாதகனுக்கு அனேக புத்திர புத்திரிகள் உண்டாவார்.

ஐந்தில் சந்திரனிருந்து அவை ரிடபம் - துலாம் என்னும் இரண்டு ராசிகளில் ஒன்ருகி ஐந்தாம் அதிபனும் சுக்கிரனும்கூடி 7-ல் நின்று குரு உச்சம்பெறப் பிறந்தவனுக்கு அனேக புத்திர புத்திரிகள் உண்டாவார்.

குரு நின்ற ராசிநாதனேயோ ஐந்தாம் ராசிநாதனேயோ சந்திரன் கூடியிருக்கவும், அவ்விராசிக்கு 7-ஆம் ராசியானது பெண் ராசியாயும் இருந்து அதனை பாவர்கள் பார்க்கவில்லையேல் அந்த ஜாதகனுக்கு அனேக புத்திர புத்திரிகள் உண்டாவார்.

மலடன்

ஜென்மலக்கினத்திற்கு ஐந்தில் சனியும், 8-ல் செவ்வாயும், 11-ல் குருவும் நின்ற 5-ஆம் வீட்டோன் சூரியனுடன்கூடிச் சந்திரனுடன் பாம்புகளில் ஒன்றிலிருந்து அவை சனிக்கு 7-ஆம் ராசியாயிருக்க அந்தஜாதகன் தன் பூர்வகர்மத்தால் மலடனுக ஜனித்தான் என்பதாம்.

11-ல் செவ்வாயும் 5-ல் இரவியிருக்க அல்லது நோக்கினுலும் 1-11-க்குடையவர் சனியுடன் கூடியிருந்து 5-ஆம் வீட்டோன் சனியுடன் கூடினுலும் அந்த ஜாதகன் மலடனுவன்.

5-ஆம் வீட்டவனை குரு பார்த்திருந்தும், சனி நின்ற ராசிக்கு ஐந்தாமிராசியில் சந்திரன்-ராகு இவர்கள் கூடியிருந்தாலும், ஜன்மலக்கினுதியை சூரியன் - செவ்வாய் இவர்கள் பார்ப்பாராயின் அந்த ஜாதகன் மலடனுகும்.

6-8-ஆம் வீட்டுக்குடையவர்கள் கூடி ஐந்திலிருந்தும் குரு நீசம் பெற்றிருந்தாலும், குருவும் 5 - ஆம் வீட்டவனும் கூடியிருந்து ஜென்மலக்கினத்திற்கு ஐந்தில் சனி குளிகனிருந்து 6-8-ஆம் யிடங்

களில் சந்திரன் - செவ்வாய் இவர்களிருக்கின் அந்த ஜாதகன் மலடனுவன்.

5-க்குடையோன் இரவியுடன் கூடி 8-ல் நின்று 8-ஆம் அதிபன் செவ்வாயுடன்கூடி 5-ல் நின்று அவரை குரு நோக்கினுலும் அந்த ஜாதகன் மலடனேயாகும்

பத்தாம் வீட்டில் பாவர்களிருந்து பத்தாமதிபன் நீசமாகியிருந்தாலும், லக்கினுதிபன் ஐந்திலிருந்து, சுக்கிரனுடன் சந்திரன் கூடினுலும், 11-ல் ராகு நின்று 5-ஆம் வீட்டோன் ஈனமாகியிருந்தாலும் அந்த ஜாதகன் மலடனேயாகும்.

புத்திர நாசம்

5-ல் சனி நின்று சந்திரனுடன் பாவர்களிருந்தும் 5-ஆம் வீட்டோன் நட்பாகியிருந்தாலும், குருவுடன் பாவர்கள்கூடி ஜன்ம லக்கினத்தில் செவ்வாய் நின்றுலும் அந்த ஜாதகனுக்குப் புத்திரர் உண்டாவார் எனினும் உடனுக்குடன் நசிந்துபோவார்.

5-ஆம் ராசிநாதன் 8-ல் நின்று 5-ல் சூரியனிருந்தாலும், குருவுடன் சனி செவ்வாய்க் கூடியிருந்து பலவீனம் பெற்ற மதி ஜென்ம லக்கினத்திலிருந்தாலும் அந்த ஜாதகனுக்கு எத்தனை குழவிகள் ஜனிக்கினும் உடனுக்குடன் மரணமாவார்.

9-ல் சூரியன் சனியும், 12-ல் குரு செவ்வாய் நின்றுலும், 5-ஆம் அதிபன் நான்கிலிருந்து 12-ல் குரு நின்றுலும், ஜன்மலக்கினத்தில் சுபரின்றி ஐந்தில் பாவர்களிருந்தாலும் அந்த ஜாதகனுக்குப் பிறக்கும் குழவிகள் உடனுக்குடன் மறிததுப் போவார்.

5-ஆம் வீட்டோன் நீசமாகியும் 4-ல் சுக்கிரனுமிருந்து குரு கொடிய க்ஷேத்திரங்களிலிருந்து அவருடன் சனி-செவ்வாய் நிற்கப் பிறந்தவனுக்கு புத்திரர் உண்டாவாராயினும் உடனே மரணமாவார்.

ஜென்மலக்கினத்தில் பாவகிரகங்களும் குருவுடன் கொடியோர்களும் கூடியிருந்தாலும், சுபகோட்கள் 6-8-ஆம் ராசியிலிருந்து 10-ஆம் ராசியில் பகை கிரகங்கள் இருந்தாலும் 5-ல் செவ்வாய் நின்று 9-ல் ராகு நின்றுலும் அந்த ஜாதகனுக்கு உண்டாகும் குழவிகள் அன்றே மரணமடையும்.

பூரணச் சந்திரனுடன் பாவர்கள் கூடியிருந்து 5-ஆம் வீட்டோன செவ்வாயுடன்கூடி மூடம் பெற்றிருந்தாலும், குருவுக்கு 5-ஆம் ராசியில் சனி இரவி கூடியிருந்து சுபர் பார்வையற்ற ஜாதகனுக்கு உண்டாகும் குழவிகள் உடனுக்குடன் நாசமாய்ப்போம்.

சுபக்கோட்களுடன் பாபக்கோட்களும், சுபக்ஷேத்திராதிபர்களுடன் பாபக்கோட்களும் கூடியிருந்தாலும், 5-ஆம் அதிபனுடனும் குருவுடனும் பாபர்கள் கூடியிருந்தாலும் அந்த ஜாதகனுக்குச் சில

காலங்கள்வரையில் புத்திரர் உண்டாகி மறிப்பாராயினும் பிற்காலம் புத்திர விருத்தியுண்டு.

ஜென்மலக்கினத்தில் சந்திரனும் 5-ஆம் ராசியில் குருவும் நின்று சுபர்கள் பார்வையற்றிருந்தாலும், சுபகோட்களைவிட பாவர்களே பலம் பெற்றிருந்து குருமாத்திரம் ஜென்மலக்கினத்தில் இருந்தால் அந்த ஜாதகனுக்கு முன்வயதில் உண்டாகும் குழவிகள் மரணமடைந்தும், பின்வயதில் உண்டாகும் குழவிகள் தீர்க்க வயதுடையதாயும் இருக்கும்.

குரு-சந்திரன் என்னும் இருவரும்கூடி 5-ல் நின்று மற்றுமுள்ள கிரகங்கள் கூடவில்லையேல் அந்த ஜாதகனுக்கு புத்திரதோஷம் உண்டென்க. ஐந்தில் இருந்தவர் இருவரும் சுபர்களாயிற்றே என்று எண்ணுதல் கூடாது.

இதுவரையில் புத்திர பாவ விஷயங்களைக் கூறிவந்தமையால் இதன் ஆதாரத்தைக்கொண்டு ஏனைய ஜாதகங்களுக்கும் தத்தமது யுக்தி புத்தியால் ஆராய்ந்து கூறுக. மற்றும் புத்திர தோஷ பரிகாரங்களையும் நாகபிரதிட்டை அரசமரப் பிரதக்ஷணம் என்னும் இவைகளை எம்மால் விருத்தியுரை எழுதி வெளியிட்டுள்ள சோதிடக் களஞ்சியத்தில் விவரமாய்க் கூறியுள்ளன. ஆதலால் புத்திரதோஷமுள்ளவர்கள் அதன்படி செய்து நலம்பெறுக.

மற்றும் புத்திரர் உண்டு இல்லை என்பதையும் எவ்வளவு என்பதையும் மற்றுமுள்ள கணித ஆராய்ச்சியாலும் அட்டவற்கு முதலியவற்றாலும் ஆராய்ந்து கூறுக.

மீதிலேந்தாதிபுடத்தினி லிரவிமகன் றனைவாங்கியே
போதுறுராசியின்மன்னுறும் போதிறுமேசிறுபுத்திரன்
கோதறுமன்னன்புடத்தினிற் குளிகனைவாங்கியராசியில்
ஏதமில்சனிவருபோதிரா தேகமரித்திடும்பாலரே.

இ-ள். ஐந்துக்குடையவன் ஸ்புடத்தில் நீலனாகிய சனியன் ஸ்புடத்தை வாங்கிக் கண்ட ராசியில் குரு கோசாரப்படி சஞ்சார காலம் புத்திரருக்கு மரணம் உண்டாகும். குருவினது ஸ்புடத்தில் குளிகனது ஸ்புடத்தை வாங்கிக் கண்ட ராசியில் முன் சொன்னபடி குரு சஞ்சாரகாலம் புத்திர கெண்டம் உண்டு எ-று.

இவ்வாறு ஸ்புடமூலமாயும் ஆராய்ந்து கூறுக.

முயற்சியில்லாதவனுக்கு எவ்வித சுகமும் உண்டாகாதென்பது அநுபவ சித்தாந்தம். எல்லாம் தெய்வச்செயலென்றெண்ணி சும்மாயிருத்தல் எதனை பொக்குமெனின் நிலத்தை நன்றாய் உழுதவனாயினும், விதையில்லாதவன் பெறும் பயனை யொக்கும். ஆகலின் முயற்சியுடையவரே சுகமடைவர். கடவுள் வேண்டித்

தூண்டியவற்கு வேண்டியவற்றை யளிக்கும் வள்ளலாகலின் முயற்சி என்பது அவசியம் வேண்டும். இதுபற்றியே குசேலரை அவரது மனைவி எவ்விதம் தூண்டுகிறுறெனில்,

கலைமுழு தோர்ந்துகரி செலாமறுத்த
காந்தனே பருமணியரவத்
தலைகிடந் திமைக்கும் தாத்திரியதனிற்
சாற்றறுந்தக்க நன்முயற்சி
உலைவற புரியாவொரு வனுக்கெங்க
னுற்றிடுஞ்செல்வ நன்னிலத்தை
நிலைபெற வுழுதுவித்தி லான்றனக்கு
நீள்பயனுற் றிடுங்கொல்லோ.

எனக் கூறியிருத்தலா லறியலாம். ஆனதால் எப்பயனை யடைய வேண்டினுர்களோ அவர்கள் அப்பயனை யடையும்வரை (அல்லது) தனது ஆயுள் முடியும்வரை அப்பயனுக்கு வேண்டியமுயற்சி செய்யவேண்டுவது அவசியம்.

இங்கு கூறுவது புத்திரபாவகம். புத்திரரில்லை யென்று மனம் வருந்துவோர் 100-க்கு 75-பேராகும் எனத் தோராயமாய்க் கூறலாம். மேற்படி 75-நபர்களில் பிறந்துப் பிறந்து இறந்து போகுபவர். 25. மற்றும் புத்திரருண்டாவதற்கேற்ற கருவியாகிய மனைவியை யடைய முடியாதவரும் அப்படிப்பட்ட மனைவியை யடைந்தும் அச் சுகம் அல்லது செல்வத்தை யடையமுடியாது வீண்வேதாந்தம் பேசித்திரிபவர் 25-பேர். மற்றும் மேற்சொன்ன சுகமிருந்தும் பிறற் நபும்சகன் என்றும், பேடி என்றும், மலடன் என்றும் பிறற் கூறும் படி தன்புத்தியினத்தால் நடந்து கொள்ளுபவர் 25.

ஆண்மலடர் உண்டு என்றகூற எந்த சாத்திரமும் இடந்தர வில்லை. பெண்மலடு மாத்திரம் உண்டு என அனேக சாத்திரங்கள் கூறியுள்ளனவாயினும், ஒருவன் தனக்குப் புத்திரர் பிறந்து ஆக வேண்டும் என்னும் இச்சையிருக்குமாயின் தனக்குள்ள மலடியாகிய மனைவியுடன் மற்றொருவளைக் கொண்டால் புத்திரருண்டாகுமன்றோ? இவையொரு புறமிருக்கட்டும். சிலர் பூர்வத்தில்செய்த வினையினை இச் சனனத்தில் நேர்ந்ததெனக் கூறுவர். அதனை ஆமோதிப்போமாயி னும், எச்சனனத்தில் நேர்ந்த பாபமாயினும், மானிட சனனமாகிய இச்சனனத்தில் நீக்கிக் கொள்ளாது வேறு எச்சனனமெடுத்து நீக்கிக் கொள்வது. ஆனதால் இச்சனனத்திலேயே தான் கோரியபலனைக் கட்டாயம் அடையலாம். இல்லையேல் (100-க்கு 5-பேர்க்கு) மரு ஜன்மாவிலாவ தடையலாம் எனச் சாத்திரங்கள் கூறியிருப்பது உண்மையே. ஆயினும் இந்த ஜன்மாவிலடைய முயற்சிசெய்வதே மானிடராய்ப் பிறந்தோர்களின் முக்கிய கடமை. ஆனதால் அவ்வித ரகசியங்களைச் சிறிது விளக்குவாம்.

சோதிடத்துள் முன் ஜன்மாவில் பாம்பைக் கொன்றவனுக்கு இந்த ஜன்மத்தில் புத்திரர் பிறந்து பிறந்து இறந்துபோவார் எனவும், ஆண் பெண்ணாகிய இரு ஜீவன்கள் சம்போகம் செய்து நாதவிந்து ஸ்கலிதமாகி கலப்புறும் சமயம் திடீரென அதனை கெடுத்து மேற்படி நாதவிந்தானது பாழாய்ப் போம்படி செய்தவன் மலடன் எனவும், பிதா மாதாவுக்கு அன்பும் ஆசையுமுடைய தனயனை அவர்களிட மிருந்து வேறுபடச் செய்தவனே அல்லது கொன்றவன் எவனோ அவனுக்கே இச்சன்மத்தில் புத்திரசுகங் கிட்டாது எனவுங் கூறப் பட்டுள்ளன. ஆயினும் இவ்வித வேதாந்த விசாரங்கட்கு பதில்கூற யான் அருகனல்லேனாயினும், எம் சிற்றறிவுக் கெட்டியவண்ணம் ஒவ்வொருவரும் புத்திரரடையும் மார்க்கங்களை யிங்கு கூறுவாம். உண்மையும் பொருத்தமு முளதேல் அங்கீகரிக்கவும். இலதேல் உண்மையிவை என்பதை எடுத்துரைக்க யான் மிக்க நன்றி பாராட் டக் கடவேன். இவை இம்மையிலும் மறுமையிலும் பயன் தரும். முக்காலும் வேண்டப்படுகிறது.

தனயர்கள் பிறந்து பிறந்து இறந்து போவதற்குக் காரணம் என்னவென்பதை நன்றாய் ஆலோசியுங்கள். இதற்குக் காரணம் முறையற்ற புணர்ச்சி அல்லது சம்போக காலத்தே தன் குதூகலத் தால் தன்னை அறியாது செய்யும் துற்செய்கை என்றே யான் கூற முடியும்.

1 கருவுண்டாகுங் காலமெனவும், கருப்பைவாய் மலர்ந்திருக்கும் காலமெனவும், கருவுண்டாகும் பருவமெனவும் தானறிந்து கொள் ளாது தனக்கு உண்டாகும் காமாந்தகாரத்தால் ஓர் புருஷனோ அல்லது ஸ்திரீயோ காலமற்ற போகம் செய்வதால் கருப்பைக்குள்ள பலங்குறைந்து கரு தரிக்காது. பிறர் கண்டு மலடன் அல்லது மலடி எனக் கூறும்படி இருக்கலாம். இல்லையேல், மேற்படி கருப்பையினது பலக்குறைவால் கருவுண்டாகி கருவிற்றானே அழியலாம் அல்லது கருமுற்றிப் பிறந்தாலும் வித்திற்றானே தன் பலங் குறைந்திருப் பினும் மண் ஜலம் இவற்றின் சக்தியால் முளைத்த தாவரம் சில நாளுக்குள் பட்டொழிந்து போவதைப் போன்று சில நாட்களிலோ அல்லது மாதங்களிலோ வருடங்களிலோ இறந்து போகலாம்.

2 காலாகாலத்தில் விதைத்த வித்துபோன்று பருவம் காலம் இவைகள் ஒருங்கே அமைந்தகாலத்தில் போகித்து அக்காலத்தில் உண்டாகும் குழவியுங்கூட இடைநடுவிலே மறித்துப் போகின்றன. இதற்குக் காரணம் என்ன?

இதற்கும் எம் சிற்றறிவிற்கு எட்டியவரை உரைப்பாம். எவ்வித மெனின்? காலத்தில் விதைத்த வித்தானது பின்னமின்றி முளைத் தது. ஆயினும் அவை வளர்ந்து தழைத்தோங்க வேண்டுமாயின் காலங்களில் தக்க நீர் பாசனமன்றோ வேண்டும். நீர்பாசனம் குறை

யினும் மாறுபடினும் மேற்படி முளையானது முதிர்ந்தாலும் அவை நீடித்திராது. இடை நடுவிற்றானே பட்டுப் போகின்றன. இது போலவே சகல சக்தியும் அமைந்து ஜனித்த குழவியுங்கூட இடை நடுவில் தன் தாய்தந்தையர்களுடைய துற்சேட்டையாலோ, பராமறிப்பாலோ போஷணை குறைந்து இடைநடுவே மறித்துப் போகின்றன. இவ்வித ஆராய்ச்சியை ஒவ்வொரு ஆண் பெண்களும் தெரிந்துக் கொள்வது அவ்சியம்.

இவ்வித ரகசியங்களை அறிந்துகொள்ள வேண்டுவமதெனின் ஒவ்வொரு ஆடவரும் ஸ்திரீகளும் கீழ்க்கண்ட விஷயங்களை கவனிக்க வேண்டுவது அவசியம். எப்படியெனில் நாம் குறிக்கும் புருஷனை அல்லது ஸ்திரீயோ.

1 தன் சரீரத் தன்மைக்கு ஏற்றவரா?

2 தன் மனத்திற்கு பொருத்தமானவரா?

3 தன் அழகுக்குப் பொருத்தமானவரா?

4 தன் அந்தஸ்துக்குப் பொருந்தியவரா?

5 தன் குணத்திற்குப் பொருத்தமானவரா? என்பதும், மற்றும் சிலவற்றும் கவனிக்கத் தகுந்தவை. ஏனெனில், (1) தன் சரீரத் தன்மைக்கு மாறுபட்ட புருஷனையோ அல்லது ஸ்திரீயையோ அடைந்தவர். இடைநடுவே யாரேனும் ஒருவர் மரணமடைவார். (2) தன் மனத்திற்குப் பொருத்தமில்லாது, பிறர் தூண்டுதலால் அடைந்த கணவனை அல்லது மனைவியோ இடை நடுவே பிறிந்து போவார். (3) தன் அழகிற்குப் பொருத்தமில்லாத கணவனையோ அல்லது மனைவியையோ அடைந்தவர் இடை நடுவே தமக்கு அழகெனத் தோன்றியவரிடம் அன்பும் ஆசையு முடையவர்களாகி இவ்விருவரும் பூனையும் எலியும் போன்றிருப்பார். (4) தன் அந்தஸ்திற்குப் பொருத்தமில்லாத கணவனையோ அல்லது மனைவியையோ அடைந்தவர் ஒருவரையொருவர் மதியாது தன் இஷ்டம்போல் நடந்துகொள்வர். (5) தன் குணத்திற்கும் பொருத்தமில்லாத கணவனை அடைந்தவர் அடிக்கடி சண்டையிட்டுக்கொண்டு பிறர் நகைக்கும் வண்ணமாயிருப்பர். இவ்வாறிருக்கின் இவர்கள் இன்புறுவ தெப்படி? சுகித்து வாழ்வது எப்படி? தான் கோரியதை அடைவது எப்படி? வீணே பிறர் பழிக்கத் தகுந்தவராய் காண்போரில் பலர் தலைவிதி என்றும், முன்செய்த வினையென்றும், மற்றும் பல வசை மொழிகளைக் கூறும்வண்ணமே இருப்பர். ஆனதால் இதனை முன்னமே எவ்வாறு அறிந்து கொள்ளலாமெனில், சோதிட சாஸ்திரம் ஒன்றாலேயே சுலப சூக்ஷ்பமாய் அறியலாம். எவ்வாறெனின்?

அவ்வவர்களது ஜென்மலக்கினத்தால் தத்தமது சரீரத் தன்மையையும், 2-ஆம் ராசியால் அவ்வவர்களது மனோபாவத்தையும், சந்திர

னிருக்கும் தன்மையால் அழகினையும், 5-9-ஆம் இடங்களால் கல்வி-செல்வம்-புத்திரர்-கௌரவம்-பூமி முதலிய பாக்கியத்தையும், 12-ஆம் ராசியால் எவ்வகைக் குணமுடையவர்கள் என்பதையும் அறிந்து கொள்ளலாம். இவ்வகை ஆராய்ந்து மணம் செய்யின் அவர்களே சகல பாக்கியங்களும் நிறைந்தவர்களாய் எவ்வித குறைவுமின்றி நெடுநாள் வாழ்ந்திருந்து நற்பதியிற் சேர்வர் என்பது திண்ணம். இங்கு கூறுவது நஷ்ட சோதிட கணிதமாயினும் அவ்வகை விருத்தாந் தங்களையே இங்கு கூறுவதால் இதனை மற்றெல்லா ஜாதகங்கட்கும் கையாண்டு அதன்படியொழுகின் நன்மையடையவர் என்பது நிச்சயம்.

வதூவரர்களது ஜெனன ஜாதகப்படியோ, அல்லது நஷ்ட ஜாதகப் படியோ, ஜென்மலக்கினாதிபர்கள் ஒருவரேயாயினும் அல்லது ஜென்ம லக்கினம் ஒன்றாயினும் மகா உத்தமம். அப்படியிருக்கின் அவ்விரு வரும் நோயற்ற வாழ்வடைவர்.

வதூவரர்களது ஜென்மலக்கினத்திற்கு இரண்டாம் ராசியதி பர்கள் ஒருவராயினும் அல்லது இரண்டாம் ராசியே ஒன்றாயிருக் கினும் இருவருக்கும் ஏற்பட்டுள்ள இரண்டாம் நாதர்கள் ஒருவருக் கொருவர் நட்பாயிருக்கினும், அல்லது பலம் பெற்றிருக்கினும் அவ் விருவருக்கும் விவாகம் செய்யின், அவர்களை அனைவரும் மதிக்கத் தகுந்தபடி ஒருவரையொருவர் நேசித்து தனவிருத்தியும் குடும்ப விருத்தியு முடையவர்களாவர்.

வதூவரர்களது சந்திரலக்கினம் ஒன்றாயிருக்கினும் அல்லது மேற்படி இருவர் ஜாதகத்திலும் அமைந்த சந்திரன் கோணகேந் திரத்தாலோ மற்றும் எவ்விதத்தாலோ பலமிழந்திருக்கின் அவ்விரு வரும் தமது வாழ்நாளில் ஒருவர்க்கொருவர் எவ்வித மாறுபாடுமின்றி ஒருவருக்கு உண்டான துக்கம் சுகம் என்னும் இரண்டும் தன்னுடை யதே எனத் தீர்மானித்தவராய் ஏகபோக சுகத்துடன் வாழ்வர்.

வதூவரர்களது ஜென்மலக்கினத்திற்கு 5 - ஆம் அதிபர்கள் தத்தமதுஇயற்கைகுணத்துக்குத்தக்கபடி கோணம் கேந்திரம் முதலிய வற்றாலும், நட்பு-ஆக்ஷி-உச்சம் முதலியவற்றாலும் பலம் பெற்றிருக் கின், அவர்களுக்கு பருவகாலத்தே அழகியதும் தீர்க்காயுளுமுடைய புத்திரர்களுதித்து தமது குணத்திற் கேற்றவாறு நடந்து கொள்வர்.

வதூவரர்களது ஜனன ஜாதகத்தில் ஜென்மலக்கினத்திற்கு 9-ஆம் வீட்டோன் முன்சொன்ன விதங்களால் பலம் பெற்றிருக்கின் அவ்விருவரும் சகல பாக்கியங்களு முடையவராகியும், புண்ணிய காரியங்களை யனேகம் செய்து தான் கோரிய செல்வத்தையடைந்து சுகித்திருப்பார். ஆனதால் இவ்வித பாவங்களை ஆராய்ந்து ஓர் புருஷனுக்கோ அல்லது ஸ்திரீக்கோ எந்த பாவாதிபர் வலுத்தார் எவர் பலமிழந்தார் என்பதை நிச்சயித்து அதற்குத் தகுந்த புருஷ

ளையோ அல்லது மனைவியையோ தேடிக்கொள்ளுதல் அவ்வவர்களின் முக்கிய கடமை.

இவ்வகை செய்யின் அவர்களுக் கெவ்வித குறைவும் உண்டாவ தற் கிடமில்லை என்பது நிச்சயம்.

ஆரும் பாவம்

ஜென்மலக்கினாதிபனும் சந்திரலக்கினாதிபனும் சுபகோட்க ளுடன் கூடியிருக்கவும், ஜென்மலக்கினத்தில் குரு-சுக்கிரன் என்னு மிருவருள் ஒருவரிருந்தாலும் அவனுக்குக் கொடிய நோயுண்டாகாது. சூரியனுடனே அல்லது 8-ஆம் அதிபனுடனே சந்திரன் கூடியிருந் தாலும் அந்த ஜாதகனுக்கு முன்சொன்ன கொடிய ரோகங்கள் உண்டாகாது.

2-12-ஆம் ராசியில் சுபகிரகங்களிருந்து சந்திரனுடன் சுபகோட் கள் கூடியிருந்தாலும், ஜென்மலக்கினத்தில் சுக்கிரனிருந்து சந்திர னுக்கு இருபுறமும் நல்லோர் நின்றாலும் அந்த ஜாதகனுக்குக்கொடிய வியாதியுண்டாகாது. சந்திரனுக் கிருபாரிசத்திலும் நல்லோர் நின்று ஏழில் குருவும், ஜென்மலக்கினத்தில் சுக்கிரனிருந்தால் அந்த ஜாதகன் முன்சொன்ன கொடியநோய் எவையுமின்றி யிருப்பன்.

ஜென்மலக்கினாதிபதியை சுபகோட்கள் நோக்கமாய் சந்திரலக்கி னாதிபதி பாவருடன் கூடாமலிருந்தாலும், சந்திரனுடன் நாலோன் கூடி கோண கேந்திரத்தி லிருந்தாலும் அந்த ஜாதகனுக்கு ரோக மில்லை யென்க.

1-4-7-10-ஆகிய கேந்திரத்தையோ அல்லது 1- -9-ஆகிய கோணத்தையோ குரு-சுக்கிரன் என்னு மிருவருள் ஒருவர் நோக்கி யிருந்து சந்திரன் பலம் பெற்று நல்லோர் சேர்க்கை பார்வை முதலி யன பெற்றிருக்க அந்த ஜாதகன் கொடிய ரோகங்கள் எவையுமின்றி நெடுநாள் சுகித்திருப்பன்.

ரோகம் உண்டாதல்

1-8-ஆம் யிடங்களைச் சூரியன் நோக்க அல்லது மேற்படி 1-8-ல் நிற்கவும், அவருடன் ஜென்மலக்கினாதியும் கூடியிருப்பாராயின் அந்த ஜாதகனுக்குப் பித்தரோகம் சம்பவிக்கும். மேற்சொன்ன 1-8-ல் நின்ற அல்லது நோக்கிய சூரியனுடன் செவ்வாயிருக்கினும் மேற்படி பித்தரோகமே உண்டாகும்.

சந்திரன் பலவீனம் பெற்று கொடிய கோட்களுடன் கூடியிருந்து கடகம்-விருச்சிகம் என்னு மிரண்டிலொன்றில் சூரியன்-செவ்வாய் இவர்களிருக்கின் அந்த ஜாதகன் க்ஷயரோகத்தால் மிக்க வருந்தி அதனாலேயே மாரணமும் சம்பவிக்கும்.

மேடம் - கடகம் - துலாம் - மகரம் என்னும் ராசியிலொன்றில் சுக்கிரன் தனித்திருந்து பாவர்கள் பார்வையாகி, ஜென்மலக்கினதிபதி 6-8-ஆம் இடங்களிலிருக்க அந்த ஜாதகனுக்கு க்ஷயரோக முண்டாகும்.

2-8-ஆம் யிடங்களில் புதனிருந்து குருவை செவ்வாய் நோக்கவும், ஜென்மலக்கினதிபன் செவ்வாயுடன்கூடி சந்திரனையும் ராகு கேதுக்களையும் நோக்குவர்களேயாமாயின் அந்தஜாதகன் ஜ்வரநோயில் வருந்துவான் என்க.

ஜென்மலக்கினத்தில் பாபகிரகங்களிருந்து 2-ஆம் இடத்தில் சுக்கிரனிருந்தாலும், ஜென்மலக்கினதியும் சந்திரலக்கினதியும் பலவீனமாகி யிருந்து, சந்திரனைப் பாவர்கள் நோக்குவராயின் அந்த ஜாதகன் எந்நாளும் பிரமியம் என்னும் வியாதியால் துன்பப்படுவன்.

2-8-ஆம் இடத்தில் ராகு நின்று ஜென்மலக்கினத்தில் செவ்வாய் நின்றால் அந்த ஜாதகன் தான் ஜனித்த நாள் முதல் வியாதியுள்ளவனாகவே யிருப்பான். இத்துடன் செவ்வாயும் ஜென்மலக்கினத்திலிருப்பாராயின் அவன் குதரோகம், குய்யரோகம், மூலவியாதி என்னு மிவற்றால் துன்பப்படுவான்.

ஏழாம் ராசியில் பாபக்கோட்களும், 8-ல் செவ்வாயும், 2-ல் கேது நிற்கின் அந்த ஜாதகன் தான் ஜனித்த சில நாளுக்குப்பின் நீங்கப் படாத இரணமுண்டாகி அதனல் மரணமாவான்.

ஜென்மலக்கினத்தில் சனியும், 6-8-ஆம் இடங்களில் சந்திரனுமிருந்து இவர்களை செவ்வாய் நோக்கினலும், சந்திரனுடன் பாவர்கூடி சனி ஜென்மலக்கினதியுடன்கூடி 6-8-ல் நின்றாலும் அந்த ஜாதகனுக்கு கிரந்தி முதலிய ரோகங்களுண்டாகும்.

சந்திரன் மகரம் அல்லது கும்பத்திலிருந்து பாவர்கள் சகிதம் பெறவும், லக்கினதிபன் 6-8-ஆம் ராசியில் நின்று பாவர்கள்கூட அல்லது நோக்கமுற்றிருந்தால் அந்த ஜாதகன் இடையிடையே அனேக நோய் முதலியனவுண்டாகி கஷ்டப்படுவன்.

ஜென்மாதிபன் ஆக்ஷிபெற்று அவனுடன் ராகு கூடியும், சனி மற்றுமுள்ள பாவருடன்கூடி 8 - ல் நிற்கவும், ஜன்மாதிபனுடன் சூரியன்கூடி முன்சொன்ன ஜென்மலக்கினத்திலேயே நின்றாலும் அந்த ஜாதகன் வெண்குஷ்ட முடையவனுவான்.

ஜென்மலக்கினத்தில் பாவர்கள் இராகுவுடன் கூடி நிற்கவும், நான்காம் வீட்டோன் நீசமாகி எந்த ராசியில் இருந்தானே அந்த ராசிக்குப் 12-ல் சந்திரன் இருக்கவுமானல் அந்த ஜாதகன் மார்பில் சூலேநோய் உண்டாகி அதனல் வாதைபடுவன்.

ஜென்மலக்கினத்திற்கு நான்காம் ராசியில் சனி - செவ்வாய் நிற்கவும், ஜென்மாதிபன் பகைபெற்று பாவர்களுடன் சம்மந்தப்படவு-

மாயின் அந்த ஜாதகன் முன்சொன்ன மார்புசூலை என்னும் நோயினு லேயே மரணமடைவான்.

ஜென்மலக்கினத்திற்கு 6-ல் செவ்வாயும் சுக்கிரனும் கூடியிருக்கவும், ஜென்மலக்கினுதிபன் ஆக்ஷிபெற்று சனியுடன் கூடியிருக்கவும், சுக்கிரனுக்கு 8-ல் குரு நின்று நீசம் பெறுவானேயாமாயின் அவன் மகா கொடிய வியாதியால் திடீரென மரணமடைவான்.

அட்டமத்தில் சுக்கிரனிருந்து அவனுடன் சூரியன் கூடவும், இவர்களுக்கு 7-ஆம் ராசியில் சந்திரனிருந்து சந்திரன் பகை பெறவும், குரு நீசம்பெற்று இருக்கின் அந்த ஜாதகன் கொடிய இரணவியாதியால் மரணமாவான்.

1-2-6-12-ஆம் இடங்களில் பாபகிரகங்களிருந்து சூரியன் நீசம் பகை முதலியன பெற்றிருக்கின் அந்த ஜாதகன் தன் இருவிழி களையும் இழந்து பரதவித்து அலைவன்.

சூரியன்-சுக்கிரன்-சந்திரன் என்னும் இம்மூவருங்கூடி 2-ல் நிற்கவும், சூரியன்-செவ்வாய் கூடி 2-ல் நின்று அவருக்கு 7-ல் குரு நின்று பகை நீசம் முதலியன பெற்றிருக்கின் அந்த ஜாதகன் குருடனுவன்.

6-ல் சந்திரனிருந்து அவனுடன் செவ்வாய் கூடவும், 1-2-12-ஆம் இடங்களில் ராகு கேதுக்களில் ஒருவர் நிற்கவும், குரு-சனி என்னும் இருவரும் 4-8-ஆம் இடத்திலிருந்தால் அவன் விழி களுக்கு ஊனமுண்டாகும்.

ஜன்மலக்கினுதிபன் இருந்த ராசிக்கு 2-12-ஆம் ராசியில் பாவர்க ளிருக்கவும், சூரியன் நீசம்பெற்று சந்திரன் 3-ஆம் ராசியில் இருந் தாலும் அல்லது நீசம் பெற்றிருந்தாலும் அந்த ஜாதகன் கால் கரங்கள் ஊனமுள்ளவனுவான்.

11-ஆம் ராசி சரராசியாயும், 5-ஆம் ராசி திரராசியாயும் 7-ஆம் ராசி உபய ராசியாயுமிருந்து அவ்வீட்டதிபர்கள் கேந்திரத்திலிருக்க அந்த ஜாதகனுக்கு ஜுரநோய் உண்டாகும். அவை எதனுலெனில் பேய் பிசாசு பீடையினுல் என்பதாம்.

ஜென்மலக்கினத்தில் சுக்கிரனும், 7-ல் சனியும் நின்று சந்திரன் பலவீனமடைந்து சுபகோட்கள் பாராது பாபக்கோட்கள் நோக்கு வரேயாமாயின் அந்த ஜாதகன் பிசாசு முனி முதலிய துஷ்ட தேவதைகளின் பீடையால் வருந்துவான்.

சத்துரு பலன்

ஜென்மலக்கினத்திற்கு 6-ஆம் ராசியில் சுபகோட்கள் கூட்ட மாகவோ அல்லது தனித்தோ நின்று பலம் பெற்றிருக்கின் அவனது

தாயாதிகள் வழக்கு தொடுத்து பங்கு பாகத்தைக் கொடு என்பர். பங்காளிகளை ஜெயிப்பர்.

6-ல் சுபகிரகங்களிருந்தால் அந்தஜாதகனை அனைவரும் நிந்திப்பாராயினும் அந்த ஜாதகன் எவ்விதத்தாலும் கொடிய காரியங்களைச் செய்யான்.

6-ல் பாவர்களிருக்க நல்லோர்க்கு நல்லவனுயும் தீயவர்களுக்குத் தீயவனுயும் இருப்பன். ஆயினும் தன்னை எதிர்த்த சத்துருக்களை ஜெயிப்பன்.

6-ல் கொடிய பாபர்களிருக்கின் அந்த ஜாதகனைக் காண்போர் அனைவரும் பயந்து நடுக்கங்கொள்ளத் தகுந்தபடி நடந்துகொள்வன்.

6-ல் ராகு அல்லது கேது நிற்கின் விஷஜெந்துக்களுக்கு பயப்படாதவனும், விஷநோய் இல்லாதவனும், விஷம் தீண்டாதவனுமாகும்.

ஏழாம் பாவம்

ஏழாம் பாவகத்தால் களத்திர விஷயங்களை யறிதல் வேண்டும். அவையாவன:—

களத்திரத்தின் அழகு, குணம், கற்பு, ஆயுள், ஒற்றுமை என்பதையும், களத்திரம் எத்தனை யென்பதையும் மணமுண்டாகும் காலம் எப்போது என்பதையும் அறிதல் வேண்டும் அவ்வகை விவரங்களை யிங்கு கூறுவாம்.

களத்திர தோஷம்

சனி நின்ற ராசிக்கு ஏழாமிராசியில் சுக்கிரனிருந்து மேற்படி சுக்கிரனிருந்த ராசிநாதன் நீசம் பெற்றும், சந்திரனுக்கு ஏழாமிராசியில் புதனும் ஏழாம் ராசிநாதனுக்கு நான்கில் செவ்வாயும் நிற்க அந்த ஜாதகன் களத்திரதோஷமுண்டு. அவையாவன:—எத்தனை விவாகம் செய்யினும் மறிப்பர் அல்லது மனைவியின் சுகத்தை யடைய முடியாதிருப்பர்.

குரு மூடம் பெறவும், செவ்வாய் ஏழில் நிற்கவும், ஏழாம் அதிபன் இராகு அல்லது கேதுவுடன் கூடியிருக்கவும், மேற்படி ராகு அல்லது கேது நின்ற ராசிக்கு நான்காமிராசியில் சுக்கிரனிருக்கவும் அந்த ஜாதகன் மனைவி இறந்து போவாள்.

ஜென்மலக்கினுதிபன் நீசமும், 7-ஆம் வீட்டோன் பலவீனமும், ஜென்மலக்கினத்திற்கு 12-ஆம் ராசியில் குருவும், செவ்வாயுடன் சுக்கிரன் கூடியிருக்கவுமாயின் அந்த ஜாதகனுக்கு எத்தனை விவாகம் செய்யினும் உடனுக்குடன் மறிப்பாள்.

இரண்டாம் வீட்டவன் பலம் குறைந்திருக்கவும், ஏழாம் வீட்டோன் நீசம் பெறவும், சுக்கிரன் சனியுடன்கூடி நிற்கவும் இவர்கள்

நடுவே குரு-ராகு இவர்கள்கூடி யிருக்கவுமானால் அந்த ஜாதகனுக்கு எத்தனை விவாகம் செய்யினும் உடனுக்குடன் இறந்து போவாள்.

சனி செவ்வாய்கூடி 7-ல் நிற்கவும், சூரியனுடன் சுக்கிரன்கூடி யிருக்கவும், 7-ஆம் அதிபன் 12-ல் நிற்கவுமானால் அந்த ஜாதகன் மனைவி உடனே இறந்து போவாள்.

குரு-சந்திரன் என்னு மிருவர்களும்கூடி ஜென்மலக்கினத்திற்கு ஏழாமிராயிலிருப்பார்களே யாமானால் அந்த ஜாதகனுக்குக் களத்திர தோஷ முண்டாகும். அந்த தோஷத்துடன் களத்திர வங்கிசத்தவர்களை கருவறுத்து விடும்.

சுக்கிரன் மீனராசியி லிருக்கவும், ஜென்மலக்கினத்தில் அல்லது ஏழாமிராசியில் குரு நிற்கவும், மேற்படி சுக்கிரன் அல்லது குரு நின்ற ராசிக்கு ஏழாமிராசியில் சனி-இராகு இவர்கள் கூடியிருக்கவும், ஜென்மலக்கினத்தில் செவ்வாய் நின்றாலும் அந்த ஜாதகனுக்கு களத்திரதோஷம் உண்டாகும்.

சப்தமாதிபன் ஆக்ஷி பெற்று அவருக்கு இருபுறத்திலும் பாவர்கள்கூடி குருவுடன் சுக்கிரன்கூடி யிருந்தாலும், சந்திரனுடன் சுக்கிரன்கூடி 7-க்கு 12-ஆமிடமாகிய 6-ஆம் ராசியிலிருந்தாலும் அந்த ஜாகன் தன் மனைவியாள் மறிப்பள்.

சுக்கிரன் சுபக்ஷேத்திரம் பெற்றாலும், அவருக்கு இருபுறத்திலும் பாவர்களிருந்து 5-7-க்குடையவர்கள் சூரியனுடன் கூடியிருந்து பாவர்களது பார்வை பெற்றும், சுபர்களது பார்வையற்று மிருக்கின் அந்த ஜாதகனுக்குக் களத்திரதோஷ முண்டாகும்.

பதிவிரதை ஏகபத்தினி

ஜென்மலக்கினத்திற்கு ஏழாம் ராசிநாதன் சுபக்ஷேத்திரம் பெற்றும், இவர்களை பலம்பெற்ற சுபகோட்கள் பார்த்திருக்கவுமாயின் அந்த ஜாதகனுக்கு களத்திரம் தோஷம் கிடையாதாகையால் அவனுக்குக் கிடைக்கும் ஏகபத்தினியானவள் மகா பதிவிரதையாயுமிருப்பாள்.

ஏழில் சுக்கிரனிருந்து அவருடன் சுபகிரகங்கள் கூடியிருந்து பாவக்கிரகங்கள் சேர்க்கையோ அல்லது பார்வையோ இல்லையாயின் அவனுக்குக் கிடைக்கும் மனைவியானவள் மகா உத்தமகுண முடையவளாய் அவன் குடும்பத்திற்கு லக்ஷிமிபோன்று விளங்குவாள்.

ஜென்மலக்கினத்தில் குருநின்று குடும்பாதிபன் ஆக்ஷி பெற்றிருக்கவும், 7-ஆம் வீட்டோன் உச்சம் பெறவும், அவருக்கு 7-ஆம் ராசியில் சந்திரனிருக்கவும், இவர்களைப் பாவர்கள் பாராமலுமிருக்க அவனுக்கு தீர்க்காயுளும் அழகும் வாய்ந்த மனைவி கிடைப்பாள்.

7-ஆம் ராசியில் சந்திரனிருக்கவும், 10-ஆம் ராசியில் குருவும், சுக்கிரன் 4-ஆம் ராசியில் நிற்கவுமாயின் அந்த ஜாதகனுக்கு அவனது மனைவிபால் அனேக பாக்கியம் உண்டாகி அதனால் சுகித்திருப்பன்.

2-7-ஆம் ராசிக்குடையவர் நட்பு கிரகமாகி சுக்கிரன் - புதன் இவர்கள் ஒன்றுகூடவும், நான்காம் அதிபன் 7-ஆம் ராசியில் நிற்கவும் அந்த ஜாதகனுக்கு கிடைக்கும் மனைவியானவள் மிக்க அழகுடைய வளாயும் தீர்க்காயுள், செல்வமுடையவளாயும் இருப்பள்.

சூரியனிருந்த ராசிக்கு 7-ஆம் ராசியில் சுக்கிரன் நிற்கவும், ஜென்மலக்கினத்திலேனும் 7-ஆம் ராசியிலேனும் குரு-புதன் இவர்கள் கூடியிருக்கவும், இவர்களைச் சனி-ராகு-கேது இவர்கள் பாரா மலும் சேராமலும் இருந்தால் அந்த ஜாதகன் தன் மனைவியால் சகல சுகபோக யோகத்தையும் அடைவான்.

2-7-க்குடையவர்கள் பலம் பெற்று அவர்களுடன் குரு-புதன் இவர்கள் கூடியேனும் நோக்கியேனும் இருப்பார்களேயாமாயின் அவனுக்குத் தன் மனைவியால் சகல செல்வங்களும் உண்டாகும்.

களத்திரம் எத்தனையென்பதை யறிதல்

களத்திராதிபனான 7-ஆம் வீட்டுக்குடையவனுடன் எத்தனை கிரகங்கள் பலம்பெற்றுக் கூடினவோ அத்தனை மனைவியராவர். அவற்றுள் பலமடைந்தவரில் எத்தனை கிரகங்கள் கால் - அரை- முக்கால் பலம் பெற்றனவோ அத்தனை மறிப்பதெனவும் ஏனையது நிலைத்திருப்பதெனவுங் கூறுக.

7-ஆம் வீட்டதிபன் ஆக்ஷி உச்சத்தால் பலம் பெற்றிருந்து அவருடன் பாவகபலத்தால் எத்தனைகிரகங்கள் பலம்பெற்றிருப்பினும் அவனுக்கு ஏகதாரமே யாகும்.

7-ஆம் வீட்டோன் சுக்கிரன் வீட்டிலோ அல்லது 2-ஆம் அதிபன் அங்கிசத்தையோ அடைந்து எத்தனை கிரகங்களுடன் கூடினாலும் அத்தனை மனைவியருண்டாவர்.

2-7-ஆம் வீட்டோனும், சுக்கிரனும் பாவருடன்கூடி பலம் பெற்றிருந்து அவை 6-8-12-ஆம் ராசியாகவரின் அவனுக்கு முதல் மனைவி இறந்து போவாளாயினும் இரண்டாம் மனைவி நீடித் திருப்பாள்.

1-7-க்குடையவரிருவரும்கூடி 6-8-12-ல் நின்றால் அவனுக்கு விவாகமில்லை. 7-ஆம் இடம் சுத்தமாக அல்லது சுபகோட்களிருக் கின் விவாகமுண்டு.

2-7-க்குடையவர் 1-4-5-7-9-10-ஆகிய இடங்களிலிருக்கில் அவனுக்கு மனைவி ஒன்றேயாகும். பொதுவாய் லக்கினத்திற்கு - 7, சந்திரனுக்கு-7 ஆகிய இவ்விரு விடங்களேயும் சுபர்கள் நோக்குதல்

அல்லது 7-ல் நிற்கில் விவாகமுண்டு எனவும், ஜென்மலக்கினம் சந்திரலக்கினம் ஆகிய இருக்ஷேத்திரத்தை பாவர்கள் பார்த்தல் அல்லது அந்த ராசியிலிருத்தல் இப்படிப்பட்ட ஜாதகங்களுக்கு விவாகமாவதோ மனைவி நிலைப்பதோ கடினமேயாகும்.

ஏழுக்குடையவனும் சுக்கிரனும் கூடவும் இவ்விருவருள் யாரேனுமொருவர் நீசராசியாகியும், மேற்படி ராசியானது ஜென்ம லக்கினத்திற்கு 6-8-12-ஆம் இடங்களாகவரின் அந்த ஜாதகனுக்கு எத்தனை விவாகம் செய்யினும் நிலைக்கமாட்டார்.

களத்திரம் எந்த திக்கிலிருந்து கிடைப்பாள் என்பதையறிதல்

ஏழாம் வீட்டோன் சூரியனாகில் கிழக்கு திக்கிலிருந்தும், சந்திரனாகில் வாயுமூலையிலும், செவ்வாயாகில் தெற்கிலிருந்தும், புதனாயின் வடக்கிலிருந்தும், குருவாயின் ஈசானதிக்கிலிருந்தும், சுக்கிரனாயின் அக்கினிமூலையிலிருந்தும், சனியாயின் மேற்குதிக்கிலிருந்தும் மனைவி வாய்ப்பள். இத்துடன் மேற்படி 7-ஆம் வீட்டோன் எவர்களுடன் கூடினான் என்பதையும், நோக்கினான் என்பதையும் கண்டு அவ்வவர்களுக்குரிய திக்கையும் கலந்துக் கூறுதல்வேண்டும்.

விவாக காலம்

சந்திரன் எந்த ராசியில் இருந்தானோ அந்த ராசியதிபன் ஸ்புடத்துடன் சந்திரனுக்கு ஏழாமதிபன் ஸ்புடத்தையும் கூட்ட அந்த ராசியிலேனும், அந்த ராசிக்கு 7-ஆம் ராசியிலேனும் தினசரிப்படி குரு சஞ்சாரம் செய்யும்காலம் விவாகம் உண்டாகும்.

மனைவி மரணகாலம்

இரண்டாம் அதிபன் குணகார ஸ்புடத்துடன் இயமகண்டன் ஸ்புடத்தை வாங்கிக்கண்ட ராசியில் முன்சொன்னபடி குரு வருங்காலம் மனைவிக்கு அரிட்டம் உண்டாகும். மற்றும் மேற்படி 2-க்குடையவன் ஸ்புடத்தில் குளிகன் ஸ்புடத்தை வாங்கிக்கண்ட ராசியில் சனி வரும் நாளிலும் மனைவிக்கு அரிட்டம் உண்டாம். 7-க்குடையவன் ஸ்புடத்தில் காலமிருத்துவை வாங்கிக் கண்ட ராசியில் குரு வருங்காலமும் மனைவிக்கு அரிட்டம் உண்டாகும்.

இவ்வாறு விவாககாலம் மனைவி நிரியாணகாலம் இவற்றை ஸ்புட மூலமாயும், மற்றுமுள்ள அஷ்டகவற்கு உடுதிசை முதலியவற்றாலும் ஆராய்ந்து நிலைகூறுதல் வேண்டும். மற்றும் களத்திர விஷயமான சங்கைகளை எம்மால் விருத்தியுரை எழுதி வெளியிட்ட சோதிடக் களஞ்சியம், தாண்டவமாலை, சந்திரகாவியம் முதலிய நூற்களில் பார்க்கக் காண்க.

களத்திர ரூபலாவண்யம் முதலியவற்றை 7-ஆம் அதிபனது ரூபலாவண்யத்தைப் பொருத்ததேயாகும்.

இருமனைவி

7-8-ஆம் ராசியிலேனும், 7-8-ஆம் அதிபர்களுடனும் பாவ கிரகங்கள் கூடியிருந்து 12-ல் குரு நிற்க அந்த ஜாதகனுக்கு மனைவியர் இருவர் உண்டாவர்.

7-ஆம் வீட்டவனோ அல்லது 2-ஆம் வீட்டவனோ பலவீனமாகி, மேற்படி 7-2-ஆகிய ராசிகளில் பாவர்கள் இருப்பார்களேயாமாயின் அந்த ஜாதகனுக்கு மனைவியர் இருவர்.

2-7-ஆம் ராசியில் பாவர்களிருக்கினும் அல்லது நோக்கினும், 2-7-ஆம் அதிபர்கள் பாவர்களுடன் கூடினும், பாவர்களால் பார்க்கப்பட்டாலும் அந்த ஜாதகனுக்கு மனைவியர் இருவர்.

1-2-7-ஆம் இடங்களில் பாவர்கள் இருந்தும், 7-ஆம் அதிபன் நீசம் மூடம் முதலியன பெற்றும், அல்லது சத்துருஸ்தானம் பெற்றிருக்கினும் அந்த ஜாதகனுக்கு மனைவியர் இருவர் உண்டாவர்.

எட்டாம் பாவம்

தீர்க்க ஆயுள்

8-ஆம் வீட்டோன் பாவியாயிருக்கினும் அல்லது சுபனாக இருக்கினும் மேற்படி அட்டமாதிபனே பாக்கியாதிபனாக இருந்து நட்பு. ஆக்ஷி உச்சங்களாலோ, நற்கோள் பார்வையாலோ பலம் பெற்றிருக்கின் அந்த ஜாதகன் தீர்க்க வயதுடையவன்.

ஜென்மாதிபன் பாவனாகி கேந்திரத்திலும், சுபனாகி கோணத்திலும், ஆக்ஷி உச்சங்களால் பலம் பெற்றிருக்கினும், அட்டமாதிபன் சுபனாய் இருக்கினும், பாவனாகி இருக்கினும் முன்சொன்னபடி ஆக்ஷி உச்சங்களால் பலம் பெற்றிருக்கின் அந்த ஜாதகனுக்கு தீர்க்க வயதேயாகும்.

குரு-சுக்கிரன் இவர்கள் கூடி ஜென்மலக்கினத்திலேனும் 4-ஆம் ராசியிலேனும் இருந்து, இவர்கள் சனி சகிதம்பெற்றிருப்பின் அவனுக்கு தீர்க்க வயதாகும்.

கும்பராசியில் ஜனித்து எட்டில் குரு நின்று 4-7-10-ஆம் இடங்களில் பாவரின்றி மற்றையோர் நிற்க அந்த ஜாதகனுக்கு தீர்க்க வயதாகும்.

தனுசுராசியிற் பிறந்து அதில் குரு ஆக்ஷிபெற்று, சந்திரனுடன் செவ்வாய் ராகு இவர்கள் கூடியிருக்க அவனுக்கு வயது-75 ஆகும். மேற்படி குரு 8-ல் நின்று 4-7-10-ஆகிய இவ்விடங்களில் பாவர்களிருக்க மேற்படி ஆயுள் சொல்லமுடியாது.

மற்றுமுள்ள ஆயுள் விஷயம்

சுபகோட்கள் அட்டமாதிப னங்கிசம் பெறவும், அல்லது சுபனுடன் அட்டமாதிபன் கூடியிருக்கவுமானுல் அந்த ஜாதகனுக்கு வயது-66 ஆகும். மேற்சொன்னபடி கிரகமிருக்கினும் ஜன்மாதிபன் சுபாங்கிசம் பெற்று, எட்டாமதிபன் மூன்றிலிருக்கின் வயது - 50 ஆகும்.

1-8-ஆம் அதிபர்கூடி 4-7-10-ஆம் ராசியில் நின்று 8-ஆம் ராசியில் எந்த கிரகமிருக்கினும் அந்த ஜாதகனுக்கு வயது-12 ஆகும்.

ஆயுள் அறியும்வகை

சரமதனிற் சரந்தீர்க்கந் திரந்தான் மத்திபமாம்
தங்கியதோ ருபயங்கள்தா னற்பமாகும்
திரமதனிற் றிரமற்பம் சரந்தான் மத்திபமாம்
திரத்திலுபயம் பெரினுந்தீர்க்க வயதாகும்
வருமுபயர் தனிலுபய மத்திமமே யாகும்
மற்றுமதிற் சரமாகில் வயதற்பமாமே
பெருமையுட னுபயத்தில் திரந்தீர்க வயதே
பெற்றிடிற் பூரணவயது பெற்றிடுவர்தாமே.

ஸ்புடம்

பங்குபாதன் செவ்வாயைப்பற்றியப் புசிப்பிற்காரி
தங்கியதிசையிற் செவ்வாய்தா னுகந்திடுபுசிப்பில்
அங்கவனட்டமாதி திசையினிலவன் புசிப்பில்
மங்குகோசர நன்ருயின்வருத்து நோய்மாறுந்தானே.

அகத்தியர்கூறிய அற்பாயுள் விவரம்

8 - ஆம் அதிபன் நீசம் பொராதிருந்தும், சூரியன் சகிதம் பெற்ருே அல்லது நோக்கியோ இருக்கவும் சந்திரன் பலவீனம் பெற்று அதற்கு நான்காமிராசியில் சனி நின்று இவர்களை குரு நோக்கினுலும், சனியுடன் சுக்கிரனும் கூடியிருக்கின் அந்த ஜாதகன் அற்ப ஆயுளையுடையவன்.

8-ஆம் ராசியில் சனி தனித்து நிற்கவும், சந்திரனுக்கு எட்டாம் ராசியில் செவ்வாய் நிற்கவும், குருவுக்கு ஏழாம்ராசியில் சனியும் நின்ருலும் அல்லது சூரியனுக்கு நான்காமிராசியில் சனி நின்ருலும் அந்த ஜாதகன் அற்பாயுளுடையவனுவன்.

3-ஆம் ராசியில் சனி நின்று அவர்களுடன் சூரியன் ராகுகூடியிருக்கவும், சந்திரன் நின்ற ராசிக்கு மூன்ருமிராசியில் குரு செவ்வாய் நிற்கவுமாகி அட்டமத்தை புதன் சுக்கிரன் பார்வையில்லையேல் அந்த ஜாதகனுக்கு அற்பாயுளாகும்.

சூரியனுடன் சூரியனிருந்த ராசிக்கு எட்டாமதிபன் கூடியிருக்கவும், ஜென்மலக்கினத்தில் செவ்வாய் நின்று இவர்களைச் சுபகிரகங்கள் பார்க்கவில்லையேல் அந்த ஜாதகன் அற்பாயுளுடையவனே யாகும்.

மற்றுமுள்ள விவரங்களை முன்கூறிய பாலாரிட்ட விஷயத்தில் விவரமாய்க் கூறியுள்ளன வாதலால் அதன்படி தெரிந்துகொள்க.

அகத்தியர் கூறிய தீர்காயுள்

சனியும் அட்டமாதிபனும் ஆக்ஷி பெற்றும் நான்கு கோட்கள் ஒன்று கூடியிருந்து அவர்களி லொருவராய்ச் சந்திரனும் கூடியிருக்கின் அந்த ஜாதகனுக்கு தீர்க்கவயதாகும்.

ஜென்மலக்கினாதிபதி சந்திரலக்கினாதிபதி இவர்களுடன் சனி-புதன்-சுக்கிரன் இவர்கள் கூடி நிற்கவும், ஏனைய கிரகங்கள் இருந்த ராசிக்கு 4-5-ஆம் ராசியில் இருக்கவுமாயின் அந்த ஜாதகனுக்கு தீர்க்க வயதாகும்.

1-8-க்கு உடையவர்களுடன் புதன் - சுக்கிரன் இவர்கள் கூடி நிற்கவும், அவருக்கு இருபாரிசத்திலும் நல்லோர் கூடி நிற்கின் அந்த ஜாதகனுக்கு தீர்க்க வயதாகும்.

அட்டமாதிபன் ஆக்ஷி பெற்றிருந்து அவருக்கு இருபுறத்திலும் நல்லோர் நிற்கவுமாயின் அந்த ஜாதகனுக்கு வயது தீர்க்கமாகும். அதனுடன் செல்வமும் அனேகம் உண்டாகும்.

சனி ஆக்ஷிபெற்று அவருக்கு இருபாரிசத்திலும் நல்லோர் நிற்க இராசி சக்கரத்தில் சனி எந்த ராசியில் இருந்தானோ அந்த ராசிக்கு 7-ஆம் ராசியே அமிச ராசியாகில் அந்த ஜாதகன் தீர்க்கவயதும் செல்வமும் உடையவனாவன்.

சனியுடன் நான்கு கிரகங்கள் கூடியிருக்கவும் அவருள் ஒருவர் சூரியனாகி, அவர்கள் இருந்த ராசிக்கு 4-ஆம் ராசியில் ஏனைய கிரகங்கள் கூடியிருக்கின் அந்த ஜாதகனுக்கு வயது தீர்க்கமாகும்.

சனிநின்ற ராசிக்கு 6-7-8-ஆம் ராசிகளில் சுக்கிரன்-புதன்-குரு இவர்கள் தனித்தோ அல்லது ஏதேனும் ஒரு ராசியில் கூட்டமாய்க் கூடியோ இருக்கின் அந்த ஜாதகனுக்கு தீர்க்க வயதாகும்.

3-ஆம் அதிபனுடனேயாவது அல்லது 8-ஆம் அதிபனுடனேயாவது குரு-சுக்கிரன் இவர்கள் கூடியிருந்து சனியுடன் சந்திரன்கூடி எந்த ராசியில் இருக்கினும் அந்த ஜாதகன் பூரணச் செல்வமுடையவனாகவும் தீர்க்காயுளுடையவனாகவும் இருப்பான்.

ஜென்மலக்கினத்திற்கு 4-ஆம் ராசியில் இரண்டு கிரகங்கள் கூடியிருக்கவும், மேற்படி நான்கிற்கு 4-ஆம் ராசியில் சுபர்களுடன் கூடிச் சனி நிற்க, மேற்படி 7-க்கு 4-ஆம் ராசியில் குரு-சுக்கிரன்

இவர்கள் கூடியிருக்கவுமாயின் அந்த ஜாதகன் அனேக செல்வமுடையவனுகியும் தீர்க்க வயதுடையவனுகியும் இருப்பான்.

சனி நின்ற வீட்டிற்குடையோன் சனியுடன் ஆக்ஷி பெற்றிருக்கவும், மேற்படி சனி நின்ற ராசிக்கு 5-ஆம் ராசியிலோ அல்லது 9-ஆம் ராசியிலோ மூன்று கிரகங்கள் கூட்டமாய்க்கூடி நிற்கவும் பிறந்தவன் மிக்க செல்வமுடையவனுகவும், தீர்க்க வயதுடையவனுகியும் இருப்பான்.

ராசி சக்கரத்தில் சனி மகர கும்பத்திலிருந்து அமிசையில் நீசமல்லாதிருந்து உச்சம்பெற்று நிற்கின் அந்த ஜாதகன் மிக்க செல்வமுடையவனுகவும் தீர்க்காயுள் உடையவனுகவும் இருப்பான்.

சனி உச்சம் பெற்று (அல்லது) சனி ஆக்ஷி பெற்றும் நின்று, இவர்கள் இருந்த ராசிக்கு நான்காம் ராசியில் குரு-சுக்கிரன் இவர்கள் கூடியிருக்கின் அந்த ஜாதகன் மிக்க செல்வமுடையவனுகி தீர்க்காயுளுடன் இருப்பான்.

ஜென்மலக்கினுதிபதி, சந்திரலக்கினுதிபதி, அட்டமாதிபதி, சனி லக்கினுதிபன், சந்திர லக்கினுதிபனுகிய இவர்களறுவரும் ஒருவர்க்கொருவர் பகையில்லாது நட்புகோளாகி இருக்கின் அந்த ஜாதகன் தீர்க்கவயதுடையவனுகும்.

ஒன்பதாம் பாவம்

பிதுர் பலன்

5-9-ஆம் ராசியில் குரு அல்லது சுக்கிரனிருந்து அவருடன் சந்திரன்கூட அல்லது நோக்க அந்த ஜாதகனது பிதாவுக்கு தீர்க வயதும் செல்வமும் உண்டாகும்.

10-ஆம் அதிபன் ஆக்ஷி பெற்று 9-ஆம் அதிபன் 11-ஆம் ராசியில் நிற்க அவன் பிதா தீர்க்கவய துடையவன்.

சூரியன் உச்சம் பெற்று, ஜென்மலக்கினத்திற்கு 5-9-ஆம் அதிபர்கள் ஆக்ஷியாகி அவர்களுடன் குருகூடி நிற்கவும், பாம்புகள் அங்காரகன் சனி இவர்கள் 6-8-12-ஆம் ராசியிலிருக்கில் அந்த ஜாதகன் தீர்க்கவயதும் செல்வமு முடையவனுகி யிருப்பான்.

சூரியனுடன் குரு சுக்கிரன் இவர்கள் கூடியும், சந்திரன் 9-ல் நின்று மூன்றுமிராசியில் சுக்கிரன் நிற்க அவன் பிதா சகல செல்வமும் உடையவனுகி வெகுவயதாகி யிருப்பன்.

9-ஆம் அதிபன் சுபத்தானுபனுடன்கூடி 4-7-10-ஆம் யிடங்களில் சுபாங்கிசம் பெற்றிருக்க அவன் தந்தை ராஜபூஜித தன் பூரண ஆயுளுடையவன் நன்மந்திரி என்க.

சூரியனுடன்கூடி 9-ஆம் ஸ்தானத்திற்கு கோணகேந்திரங் களில் பலம் பெற்றிருக்க அந்த ஜாதகன் பிதா வியாபாரச் செல்வனு யும் தீர்காயுளுடையவனுகவும் சகல காரிய சமர்த்தனுகவு மிருப்பான்.

பிதுராதிபன் குரு-சுக்கிரன்-புதன் இவர்கள் ஒருவரையொருவர் கூடியும் நோக்கியுமிருந்து மகாபலம் பெற்றவர்களாகி யிருக்கின் அந்த ஜாதகன் பிதா வெகுதனமுடையவன், பலர்க்குநேயன், பிறரை ரக்ஷிப்பவன், எக்காலத்தும் வெகு சுகமுள்ளவன், நானுவித தந்திர மறிந்தவன் என்க.

பிதுரு அரிட்டம்

5-9-ஆம் அதிபர்கள் சூரியனுடன்கூடி அவர்களைச் சனி நோக் கப் பிறந்தவனது பிதாவுக்கு உடனே அரிட்டமுண்டு. மேற்படி 5-9-ஆம் அதிபருடன் சூரியன் அல்லது சனி கூடியிருக்க அவர்களை 5-6-12-லிருக்கும் பாவர்கள் பார்க்க அந்த ஜாதகன் பிதாவும் உடனே மறிப்பன்.

ஜென்மலக்கினத்திற்கு 5-9-10-ஆம் இடங்களில் சூரியனுவது சனியாவது இரவியாவது தனித்தோ அல்லது கூடியோ நிற்கில் அந்த ஜாதகனது பிதாவுக்கு ஊனம் உண்டு. இத்துடன் 1-7-ஆம் யிடங்களில் செவ்வாய் நின்று சூரியன் குரு என்னும் இருவரும் பல ஈனம் பெற்றிருப்பாராயின் அந்த ஜாதகன் ஜனித்த மூன்று வருஷங் களுள் பிதா மறிப்பன்.

பிதா ஸ்தானமான 9-ல் சனி நின்று மூன்றுமிராசியில் செவ் வாய் நிற்கினும், சூரியன் செவ்வாய்கூடி 8-ல் நிற்கினும், ஜன்மத் திற்கு 5-9-ஆம் ராசியில் பாவக்கோளிருந்து ராகு கேது இவர்களால் பார்க்கப்பட்டாலும் மேற்படி பிதாவுக்கு தோஷமுண்டு. சூரியனுக்கு ஏழில் சனி நின்று செவ்வாய் கூடினும் நோக்கினும் பிதாவுக்கு தோஷமுண்டாவது நிச்சயம்.

9-ல் சனி நின்று சூரியனுடன் ராகு அல்லது கேது சேர்ந்தா லும் 9-ஆம் அதிபன் நீசனுகி அவருடன் சனி செவ்வாய் கூடினும் நோக்கினும் அவன் பிதாவுக்குக் கட்டாயம் அரிட்டமுண்டு.

9-ஆம் அதிபனுடன் சனி செவ்வாய்கூடி எந்த ராசியிலிருந்தா லும் அவன் பிதாவுக்கு அரிட்டம் உண்டு. ஜன்மலக்கினுதிபன் உச்சனுகி மேற்சொன்னவர்களை நோக்குவராயின் மேற்படி பிதா சில நாளிருந்து மரணமாவன்.

சூரியனுடன் 9-7-ஆம் அதிபர்கள்கூடி 6-8-12-ஆம் ராசிகளி லொன்றில் நிற்கவும், பிதுருத்தானமாகிய 9-ஆம் ராசியில் கேது நிற்கவும் ஜெனித்த ஜாதகனது பிதாவுக்கு உடனே அரிட்ட முண் டாகும். நல்லோர் நோக்க சில நாளிருந்து மரணமுண்டாகும் என்க.

ஜென்மலக்கினத்தில் செவ்வாயும் 9-ஆம் ராசியில் சனியும் இருக்கில் அவன் பிதாவுக்கு அரிட்டம் உண்டாகும். மற்றும் 9-ஆம் அதிபனுடன் சனி-செவ்வாய் கூடியிருந்து ஏனைய சுபகோட்களுங்கூடி எந்த ராசியில் இருந்தாலும் அவன் பிதாவுக்கு நிச்சயமாய் மாரணம் சம்பவிக்கும் என்பதாம்.

ஜென்மலக்கினத்திற்கு 8-9-10-ஆம் ராசிகளில் பாவகோட்களிருந்து 9-ஆம் அதிபன் 6-8-12-ஆம் இடங்களில் பலமிழந்து நின்றிருந்தாலும், ஜென்மலக்கினத்திற்கு 9-ஆம் ராசியில் சனி செவ்வாயிருந்து 9-ஆம் ராசியின் அதிபன் 6-8-12-ஆம் ராசியில் நின்றாலும் அந்த ஜாதகனது பிதாவுக்கு அரிட்டம் உண்டாகும்.

ஸ்புட விவரம்

9-ஆம் ராசியதிபன் ஸ்புடத்தில் குளிகனது ஸ்புடத்தைக்காண எந்த ராசியாயினவோ அந்த ராசியில் குரு சஞ்சாரகாலம் நிரியாணம் வரும். மற்றும் சூரியனது ஸ்புடத்துடன் 9-ஆம் அதிபனது ஸ்புடத்தை வாங்க அந்த ராசிமாதம் எவையோ அந்த மாதத்தில் அவன் பிதாவுக்கு அரிட்டம் உண்டாகும்.

மற்றும் பிதாவினது ஆயுள் முதலிய கெண்டாதி கெண்டங்களை உறைப்பதற்கு அஷ்டகவற்கும் முக்கியம் ஆதலால் அவ்வண்ணம் பார்த்துச் சொல்வது நலம்.

பாக்கிய பலன்

9-ஆம் வீட்டதிபனும் குருவும் எவ்வளவு பலம் பெற்றூர்களோ அவ்வளவும் அந்த ஜாதகனுக்கு பாக்கியம் உண்டாகும். குருவும் தனுதிபதியும் கூடி 11-ஆம் ராசியில் இருந்தால் அந்த ஜாதகன் சகல பாக்கியங்களும் உடையவனுவன்.

சந்திரனும் சுக்கிரனும்கூடி 9-ல் நிற்க அந்த ஜாதகன் பொன்-வெள்ளி முதலிய பாக்கியங்களை யடைந்து சுகித்திருப்பான்.

ஜென்மலக்கினத்திற்கு ஐந்தாமிராசியும், சந்திரலக்கினத்திற்கு ஐந்தாமிராசியும் சரராசியாகில் அந்த ஜாதகனுக்குத் தன் பிதாவால் சம்பாதித்து வைத்த பாக்கியம் நிலைக்கும். மேற்சொன்ன இருராசியும் சரராசியாயிருந்து ஜெனனகாலத்தில் பூரணசந்திரனுகி யிருக்க மேற்படி பிதாவின் பாக்கியத்தால் தாயுபகாரங்கொண்டு அதிகமாய் விருத்தியாகும்.

ஜென்மத்திற் கைந்தாமிராசி சரமாயும், சந்திரனுக் கைந்தாமிராசி திரமாயுமிருந்து, ஜெனனகாலம் வளர்பிறைச் சந்திரனுகில் ஜாதகன் ஜனித்தகாலத்தில் பிதாவுக்கு கொஞ்சம் பாக்கியமுண்டு எனினும் நாளுக்குநாள் விருத்தியாகும்.

ஐந்தாமிராசி சரமாயும், சந்திரனுக் கைந்தாமிராசி உபயமாயுமிருக்கவும், பாக்கியாதிபன் ஐந்திலும், ஐந்தாம் வீட்டோன் இரண்

டில் உச்சனுகியுமிருக்க அந்த ஜாதகனுக்குத் தன் தாயாதிகள் பொருள் கிட்டும்.

ஜன்மலக்கினத்திற்கு ஒன்பதாம் ராசியதிபனும் குருவும்கூடி கேந்திரம் பெற்றாலும், ஜென்மாதி குடும்பாதி ஐந்தாமாதி என்னும் இம்மூவரும்கூடி கேந்திரம் பெற்றாலும் அந்த ஜாதகன் நாளுக்குநாள் மிக்க செல்வமுடையவனுகி வாழ்வன் எனவும், மேற்படி செல்வ மானது எக்காலத்தும் குறைவுபடா தெனவும் கூறவேண்டும்.

1-7-க்குடையோர் சுபர்களாகியும் ஒருவருக்கொருவர் மித்துரு வாயுமிருந்து 11-ல் நின்று அவர்களுடன் ஜென்மலக்கினுதிபதியும் கூடுவாரேயாமாயின் அந்த ஜாதகன் எக்காலத்தும் குறைவுபடா செல்வமுடையவனுகிச் சுகித்து வாழ்வன்.

2-7-9-க்குடையவர் ஒன்றுகூடி ஜென்மலக்கினத்திலேனும் 10-ஆம் ராசியிலேனும் நின்று பலம்பெற்றிருக்க அந்த ஜாதகன் தனது பிதுரார்ஜ்ஜித செல்வம் விருத்தியுடையவனுகியும், தன் சுயார்ஜ்ஜித செல்வமும் நாளுக்குநாள் விருத்தியுடையவனுகியு மிருப்பன். 7-10-க்குடையவர்கள் நட்பு கோட்களாகி பலம் பெற்று 10-ஆம் ராசியிலிருக்கின் அவன் மனைவியால் செல்வமுண்டாகும்.

2-4-7-10-க்குடையவர்க் கூட்டமாய் கோணத்தில் பலம் பெற் றிருக்க முன்சொன்னபடி அவன் மனைவியாலும் மற்றும் பலவகை யிலும் பாக்கியமுடையவ னுவன்.

5-9-ஆம் அதிபர்கள் நட்பினராய்க் கேந்திரத்திலிருந்து நல் லோர் நோக்கமுறப் பிறந்த ஜாதகன் தன் பிதுரு செல்வத்துடன் மனைவி செல்வத்தையும் சுயார்ஜ்ஜித செல்வத்தையும் அடைந்து சுகித்திருப்பான்.

10-ஆம் வீட்டோன் உச்சம் பெற்று சுபர்கள் சேர்க்கையுற்று பாவர்களுடன் சேராமலும் பாராமலுமிருந்து 10-ஆம் ராசியை நோக்குவானுயின் அந்த ஜாதகன் அனேக பூமிகளை யுடையவனுகி அதனுல் வெகு சம்பத்தைத் தேடிக்கொள்வன்.

10-ஆம் வீட்டோன் நீசம் பெற்றுவது அல்லது சத்துருக்ஷேத் திரம் பெற்றுவதிருந்து, மேற்படி 10-ஆம் ராசியை நோக்க அந்த ஜாதகன் நீசசம்பந்தமான வழியில் பொருள் சம்பாதிப்பான் எனவும், அன்னிய தேயங்களிலுள்ளவராலும் அன்னிய ஜனங்களாலுமே பொருள் சம்பாதிக்கத் தகுந்தவனுகி யிருப்பான்.

இதுகாறும் கூறிவந்த பிதுருபலன் பாக்கியபலன் என்னு மிவை களுக்கு வேண்டிய சில முக்கிய விஷயங்களை மட்டுமே இங்கு விளக் கிக் காட்டியிருப்பதால் இதன் ஆதாரத்தைக்கொண்டு அவ்வவர்களது சுருதி யுக்தி முதலிய அனுபவத்தால் மற்றுமுள்ள கிரக வீரிசைக்கும் பலன் கூறுக.

பத்தாம் பாவம்

கருமபலன்

8-ல் 10-ஆம் அதிபனிருந்து, 10-ஆம் அதிபன் பலம்பெற்று பாவர்களால் பார்வை பெற்றிருக்கின் அந்த ஜாதகன் துற்கருமம் செய்வதில் விருப்பமுள்ளவனுவான்.

பத்தாம் ராசியதிபன் முன்கூறியவண்ணம் பலம் பெற்றிருந்து 1-4-7-ல் சுபகோட்களுடன் கூடி பலம் பெற்று நிற்கின் அந்த ஜாதகன் அனேக நற்கருமங்களைச் செய்து அதனுல் கௌரவத்தை அடைவன்.

ஜென்மலக்கினத்திற்கு 4-ஆம் ராசியில் சனியிருந்தால் ஞான மார்க்கங்களை அறிய விரும்புபவனும், அனேக தீர்த்தங்களுக்கும் க்ஷேத்திரங்களுக்கும் சென்று வருவன். மேற்சொன்னபடி 4-ல் சனியிருந்தாலும், லக்கினுதிபன் 10-ல் இருந்து குருவும் பலம் பெற்றிருந்தால் மேற்படி புண்ணியபலன் சொல்லமுடியாதாயினும், எக்காலமும் ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்துகொண்டே இருப்பன் எனவும், சில சமயம் துற்கிருத்தியங்களையும் செய்வான்.

பாக்கியமாகிய 9-ஆம் ராசியில் குரு பலம்பெற்று சுபர்களது சேர்க்கையும் பார்வையுமிருந்து, சந்திரனும் ஜலராசியிலிருக்க அந்த ஜாதகன் அனேக நதிதீரங்களுக்குச் சென்று தீர்த்தமாடுவன்.

சந்திரன் 10-ல் பலம்பெற்று சுக்கிரன் ஆக்ஷி உச்சம் முதலியவைகள் பெற்றிருக்கினும், அந்த ஜாதகன் பல தீர்த்தங்களும் காண்பன்.

10-ஆம் வீட்டதிபன் சுபகோட்களுடன்கூடி ஏதேனும் ஒரு ராசியில் இருக்க அந்த ராசிக்கு இருபக்கங்களுக்கு அதிபர்கள் பலம் பெற்று எந்த ராசியில் இருந்தாலும் அந்த ஜாதகன் என்று மறவாச் சிவபூஜை செய்வன். இல்லையெனில் ஏதேனும் ஒரு தெய்வத்தை உபாசிக்கும் தன்மையினனுவன்.

சந்திரனிருந்த ராசியும் சந்திரனிருந்த ராசிக்கு 10-ஆம் ராசியும் பலமாகி, அங்கிசாதிபதியும் பலம் பெற்றிருக்க அந்த ஜாதகன் அனேக நற்செயல்களைச் செய்து பெயரெடுப்பன்.

குரு-சுக்கிரன்-புதன்-சனி ஆகிய இந்நால்வரும் முறையே 1-4-7-10-ஆம் ராசிகளில் தனித்திருந்து வேறு கோட்கள் நோக்கவில்லையேல் அந்த ஜாதகன் எக்காலமும் பூஜை செய்வதில் விருப்பமுள்ளவனுவான்.

10-ஆம் வீட்டோன் 2-9-11-ஆம் ராசியிலிருந்து, ஆக்ஷி உச்சங்களால் பலம் பெற்றும் நல்லவர்கள் பார்வை பெற்றுமிருக்க அந்த

ஜாதகன் எக்காரணத்தைக் கொண்டும் துற்கருமம் என்பதைச் செய்யான்.

10-க்குடையவன் பாபியாய் நீசம்பெற்று 6-8-12-ஆம் இடங்களிலிருக்க அவன் நல்லோரையும் நிந்திப்பவனுகி துற்செயல்கள் அனேகம் செய்வான்.

10-க்குடையவன் ஆகூஷி உச்சங்களாகி அம்சையிலும் பலம் பெற்று நல்லோர்களது சேர்க்கை பார்வை முதலியன பெற்றிருக்க அந்த ஜாதகன் அனேக யாகாதிகிருத்தியங்களேச் செய்வன். மேற்படி 10-ஆம் வீட்டதிபன் முன்கூறியவண்ணமே சுபனுகியும் சுப சம்பந்தம் பெற்றும், ஜென்மலக்கினத்திற்கு 12-ல் நிற்க அந்த ஜாதகன் நற்செயல்களில் பொருள் சிலவு செய்பவனுவன்.

கர்மாதிபன் குருவாகி சுக்கிரனுடன்கூடி மீனராசியிலிருக்க யாகாதி கிருத்தியங்களேச் செய்வன் எனவும், கர்மாதிபதியை குரு-சுக்கிரன் பார்த்தால் பற்பல நற்கிரியைகளேயும் செய்வன்.

9-க்குடையோன் குருவாகி ஆகூஷி உச்சம் பெற்றிருக்க அந்த ஜாதகன் பிறரிடம் உபதேசம் பெற்றுக் கொள்ளுபவனுகுவன்.

ஜீவனம்

அம்புவியோர் செய்தொழிலாற் ஜீவனமுண்டாகும்
அவையன்றி லக்கினஞ் சோமனுதவன் மும்மனேக்கும்
தம்மொடு பத்தாம்வீட் டங்கிசையி லிருந்தோர்
தம்மிலதிகப் பலமாய்த் தரித்தவ ரங்கிசைதான்
வெம்புரவி தேரோ னங்கிசத் தனேயன்பெலமே
மேவில்புல் வைக்கோ லும் விற்றுணவே கொள்வன்
செம்பொன் விற்பது ராசிபல னூலுக்கோரை
திக்குபல முண்டாயிற் செய்வன் வயித்தியங்கள்.

இ - ள். இவ்வுலகத்திலுள்ள மானிடர்களின் ஜனனஜாதகம் நட்டஜாதகம் முதலியவற்றைக் கொண்டு எவரெவர்கள் எந்தெந்த விதமான ஜீவனங்கள் செய்வார் என்பதை யுறைக்குமிடத்து, ஜென்ம லக்கினுதிபதி சந்திரன் சூரியனிருந்த ராசிக்கு 10-ஆம் ராசிநாதர்கள் எந்த அங்கிசையி லிருந்தார்கள் என்பதை யறிந்து, மேற்படி 10-ஆம் வீட்டவனடைந்த அங்கிசையினும் சூரியனிருந்த ராசிக்கு 10-ஆம் ராசிநாதன் பலம் பெற்றிருக்க புல் - வைக்கோல் முதலிய வற்றை விற்றுண்ணுவன் எனவும், சந்திரனிருந்த ராசிக்கு 10-ஆம் அதிபன் பலம் பெற்றிருப்பானுயின் பொன் முதலியவற்றை விற்று அதனுல் ஜீவிப்பன் எனவும், ஜென்மலக்கினத்திற்கு 10-ஆம் ராசியதிபன் பலம் பெற்றிருக்க வயித்தியம் முதலியவற்றைச் செய்து அதனுல் ஜீவிப்பன் எனவுங்கூறுக எ-று.

இதனால் எந்த ஜாதகத்திற்கும் எவ்வகையால் ஜீவனோபாயம் செய்வன் என்பதையறிந்து கொள்ளுதற்கு, ஜென்மம் சந்திரன் சூரியன் இவர்களுக்குப் பத்தாம் ராசியதிபனிருந்த அங்கிசையைக் கொண்டே ஜீவன விஷயத்தைக் கூறவேண்டும் என்பது புலனாயிற்று. ஆதலால் இவ்வகை விசேஷத்தால் ஜீவன விவரம் கூறுவாம்.

ஜன்மலக்கினத்திற்கு 10-ஆம் அதிபன் சூரியன் அங்கிசம்பெற தனது தேகமிளைக்க கஷ்டப்பட்டு ஜீவிப்பன். சந்திரனங்கிசம்பெற (பூரண சந்திரனாயின் ஜலசம்பந்தமான தொழிலைச்செய்து ஜீவிப்பவனும், ஜனனகாலம் வளர்பிறையாயின் நாளுக்குநாள் பலதொழிலைச் செய்து ஜீவிப்பவன் எனவும், தேய்ப்பிறையாயின் ஆரம்பகாலம் ஓர் பிரமாதமான தொழிலைச் செய்வானாயினும் நாளடைவில் மேற்படி தொழில் பலம் குறைந்துபோம்) எனவும், மேற்படி 10-ஆம் வீட்டோன் புதனங்கிசம்பெற வியாபாரத்தலங்களில் தொழில் செய்பவனாவன். குஜனங்கிசம்பெற துஷ்கிருத்தியங்களால் ஜீவிப்பன். குரு அங்கிசம்பெற உபாத்தியாயராகுவன் எனவும், சுக்கிரனங்கிசம்பெற பெண்கள் மூலமான பொருளைக்கொண்டு ஜீவிப்பன் எனவும், சனியங்கிசம்பெறப் பலரும் இழிவுசெய்யத் தகுந்த காரியங்களைச்செய்து அதனால் ஜீவிப்பான் எனவுங் கூறவேண்டுவது அவசியமாகும்.

சந்திரனுக்குப் பத்தாம் வீட்டோன் சூரியன் அங்கிசம்பெற பிறருக்கு இம்சையை உண்டாக்கித் தான் ஜீவிப்பன் எனவும், சந்திரன் அங்கிசம்பெற பொன் வியாபாரம் செய்து ஜீவிப்பவனும், செவ்வாய் அங்கிசம்பெற கருமாரத்தொழில் செய்து ஜீவிப்பவனும், புதன் அங்கிசம்பெற ஜோதிஷம் முதலியவைகளைச் சொல்லி ஜீவிப்பவனும், குரு அங்கிசம்பெற சகல சாஸ்திர பண்டிதனாகி சுகஜீவியம் செய்வன் எனவும், சுக்கிரன் அங்கிசம்பெற பொருள் லாவாதேவி செய்து அதனால் ஜீவிப்பன் எனவும், சனி அங்கிசம்பெற மதுபானங்களை விற்று அதனால் ஜீவிப்பவன் எனவுங் கூறுக.

சூரியனிருந்த ராசிக்குப் பத்தாம் வீட்டோன் சூரியன் அங்கிசம்பெற கிருஷித்தொழிலும், சந்திரன் அங்கிசம்பெற அழகிய பொருளைச் செய்து விற்று அதனால் ஜீவிப்பவனும், செவ்வாயங்கிசம்பெற மரவேலைசெய்து ஜீவிப்பவனும், புதன் அங்கிசம்பெற பிரசித்திபெற்ற வியாபாரத்தைச் செய்து அதனால் ஜீவிப்பவனெனவும், குரு அங்கிசம்பெற இராஜாங்க மூலத்தில் மேலான பதவியிலிருந்து ஜீவிப்பவனும், சுக்கிரன் அங்கிசம்பெற சைவதொழில் பக்ஷணக் கடை முதலியவைகளால் ஜீவனம் செய்பவனும், சனி அங்கிசம்பெற மாமிசம் முதலியன விற்று அதனால் ஜீவிப்பவன் எனவுங் கூறுக. இதை ஆதாரமாய் வைத்து ஏனையோர்க்கு எந்தெந்த ராசியதிபன் பலப்பட்டான் என்பதை அறிந்து அவ்வவர்களுக்குத் தக்கபடி ஜீவனம் கூறுக.

பதினோராம் பாவம்

ஜென்மலக்கினத்திற்கு 11-ஆம் ராசியில் 6-8-12-க் குடையவர் கூட்டமாய்க்கூடியோ தனித்தோ இருக்கின் அந்த ஜாதகன் எக்காரியத்தைச் செய்யினும் லாபமில்லை. 11-ஆம் வீட்டவன் உச்சனுகி அல்லது சுபகோட்களினது மத்தியிலிருக்க அந்த ஜாதகன் எக்காரியத்தைச் செய்யினும் அனேக லாபம் உண்டாகும்.

ஜென்மலக்கினுதிபன் பலம் பெற்றிருந்து 11-ஆம் ராசியதிபனும் உச்சனுகி பலம் பெற்றிருந்தால் அந்த ஜாதகன் அனேக விதத்தாலும் லாபமுடையவனுவான். 11-ஆம் வீட்டோன் எந்த ராசியிலிருந்தானே அந்த ராசிக்குடையவன் உச்சனுகி இருக்கினும் அந்த ஜாதகனுக்குப் பலவிதத்தாலும் லாபமுண்டு.

11-ஆம் வீட்டதிபன் சூரியனுகில் கிழக்கிலிருந்தும், சுக்கிரனுகில் தென்கிழக்கில் இருந்தும், செவ்வாயாயின் தெற்கிலிருந்தும், சனியாகில் மேற்கிலிருந்தும், சந்திரனுகில் வாயுமூலையிலிருந்தும், புதனுகில் வடக்கிலிருந்தும், குருவாகில் ஈசான மூலையிலிருந்தும் லாபம் வரும். 11-ஆம் ராசியில் ராகு அல்லது கேது நிற்க, நிருதி மூலையிலிருந்தும் லாபம் கிடைக்கும் எனக்கூறுக.

11-ஆம் வீட்டுக்குடையவனும் மேற்படி 11-ஆம் ராசிக்குடையவன் நின்ற வீட்டுக்குடையோனும் சந்திரன் - சூரியன் என்னும் நால்வரும் பலம்பெற்று நிற்க அந்த ஜாதகனுக்குப் பயிர்த்தொழில் நன்ருய்ப் பலிதமாகும். மேற்படி கிருஷித்தொழிலாலேயே அவன் மிக்க ஐஸ்வரிய முடையவனுவன். இவர்களது திசையிலும் அனேக செல்வம் கிடைக்கும். மற்றும் 11-ஆம் அதிபதி சூரியனுகி அல்லது சந்திரனுகி இருந்து வேறு ஒருவர்கூட அந்த ஜாதகன் பிரமாதமாகியசெல்வத்தை அடைவன்.

லாபாதிபனைக் குரு கூடில் சகல சம்பத்தும் உண்டு. லாபாதிபனைச் சூரியன்கூடில் பிதுரு செல்வமும், சந்திரன்கூடில் மாதுரு செல்வமும், குஜன்கூடில் தான் செய்யும் தொழிலாலும் சினேகிதர்களாலும் லாபம் கிடைக்கும். புதன்கூடில் வியாபார லாபமும் குரு கூடில் அரசர்களால் லாபமும், சுக்கிரன்கூடில் மனைவியால் லாபமும், சனிகூடில் கைத்தொழில் முதலியவற்ருல் லாபமும் உண்டாகும் என்க.

ஜேஷ்ட சகோதரர்

பதினோராம் ராசியில் செவ்வாய் நிற்க அந்த ஜாதகனுக்குமுன் பிறந்த சகோதரர்கள் அதிகம். 11-ஐ செவ்வாய் பார்க்க முன்பிறந்தவர் ஒருவரேயாகும். 11-ஆம் வீட்டை சுபகிரகங்கள் பலமிழந்து பார்க்கின் பிறந்து பிறந்து இறந்து போவார். பாவர்கள் பலமிழந்து பார்க்க பிறவியே இல்லையாம். பாவர்கள் பலம்பெற்றுப் பார்க்கின்

பிறந்து இறந்து போயிருப்பார். சுபர்கள் பலம் பெற்றுப்பார்க்க முன் பிறந்தோர் அனேகருண்டு.

இவ்விதமே பதினோராம் ராசியை நோக்கிய கிரகத்தையும் மேற்படி ராசியிலிருந்த கிரகத்தையும், 11-ஆம் ராசியதிபனிருக்கும் பலத்தையும் ஆலோசித்து சகோதரபலம் கூறவேண்டுவது அவசியமாகும்.

11-ஆம் ராசிநாதன் எத்தனை கிரகத்துடன் கூடியிருந்தானோ அத்தனை சகோதரம் எனவும், அவர்களுள் பலம்பெற்ற கோட்கள் எவ்வளவோ அவர்களே நிலைத்திருப்பவர் எனவும் கூறுவதுண்டு. இதன் விவரங்களை சோதிடக்களஞ்சியம் விருத்தியுரையில் விரிவாய்க் காண்க.

பன்னிரண்டாம் பாவம்

12-ஆம் ராசியில் சூரியன்-சனி-செவ்வாய் இவர்கள் கூடியிருக்க அந்த ஜாதகனது தாய் தந்தை முதலியோருக்கு அரிட்டம் காட்டும். மேற்படி ராசியானது சூரியனுக்கு ஆக்ஷி வீடாகில் பிதாவையும், சந்திரனுக்கு ஆக்ஷி வீடாகில் மாதாவையும், செவ்வாய்க்கு ஆக்ஷி வீடாகில் சகோதரர் முதலிய மற்றையோரையும் தோஷம் செய்யாது எனச் சாஸ்திரங்கள் கூறும்.

12-ஆம் ராசியானது குரு வீடாக அல்லது கடகமாயிருக்கினும் மேன்மையுண்டு. 12-ஆம் வீட்டோன் குருவாகிக் கேந்திர கோணங்களில் பலம் பெற்றிருக்க, அந்த ஜாதகன் நற்காரியங்களில் தன் பொருளைச் சிலவு செய்பவனும், சுக்கிரனாகில் மனைவி போக ஸ்திரீ முதலியவர்களுக்குச் சிலவு செய்பவனும், சனியாகில் கள் கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களில் தன் பொருளைச் சிலவு செய்பவனும், சூரியனாகில் தந்தை அல்லது தந்தைவற்கத்தவருக்குச் சிலவு செய்பவனும், சந்திரனாகில் மாதரு அல்லது மாதருவற்கத்தினருக்குச் சிலவு செய்பவன் எனவும், செவ்வாயாகில் சிநேகிதர்களுக்கும், புதனாகில் வியாபார வகையிலும் தன் பொருளைச் சிலவு செய்து விடுவான் எனவுங் கூறுக.

9-ஆம் அதிபன் 11-லும், 11-ஆம் அதிபன் 9-லும் இருந்து விறயாதிபன் ஆக்ஷி பெற்றிருக்க அந்த ஜாதகனுக்கு எப்படிப்பட்ட சிலவு உண்டாயினும் மிக்க தனமுடையவனாகவே இருப்பான்.

விறயாதிபன் 11-லும், 11-ஆம் அதிபன் விறயத்திலுமிருந்து ஒருவருக்கொருவர் மிக்க பலமுடையவராகியிருக்கின் அந்த ஜாதகன் தான் சம்பாதிப்பதற்கும் சிலவு செய்வதற்குமே சரியாயிருக்கும்.

12-ஆம் அதிபன் 7-ஆம் அதிபனுடன்கூடி 3-ஆம்ராசியிலிருந்து நீச்சம்பெற்ற சுக்கிரனால் பார்க்க அந்த ஜாதகன் தான் சம்பாதிக்கும்

பொருள் யாவும் தாசி வேசி முதலியவர்களுக்கே சிலவு செய்து விடுவான்.

12-ஆம் வீட்டோன் குருவுடன்கூடி 7-ல் நின்றாலும், 7-ஆம் ராசியைப் பார்த்தாலும் தனது குலஸ்திரீயைத் தவிர வேறு எவருக்கும் பொருள் சிலவு செய்யான்.

விறயாதிபன் செவ்வாயுடன்கூடி கேந்திரங்களில் ஒன்றிலிருந்து பலவீனம் பெற்ற சந்திரனைப் பார்க்க அந்த ஜாதகனுக்குண்டாகும் சரீரநோய்முதலியனவற்றால் சிலவு செய்து விடுவான்.

விறயாதிபன் பலம் பெற்றிருக்க விறயம் அதிகமுடையவன் எனவும், பலவீனம் பெற்றிருக்க விறயம் குறைந்தவன் எனவுங் கூறவேண்டும் என்பதாம்.

விறயாதிபன் சுபனாகி சந்திரனுக்கு 12-ஆம் ராசியிலிருக்க அந்த ஜாதகன் நற்காரியங்களிலும், துற்காரியங்களிலும் அதிகமாய்ச் சிலவு செய்பவனாயும் இருப்பன்.

ஜென்மலக்கினத்திற்கு 12-ஆம் வீட்டிற்குடையவன் ஜென்ம லக்கினத்திற்கு 7-ஆம் ராசியிலிருக்க அந்த ஜாதகன் தன் பொருள் அனைத்தையும் வழக்கு வாது முதலியவற்றால் சிலவுசெய்து விடுவான்.

12-ஆம் வீட்டோன் சுபனாகி பாவர்களுடன்கூடி ஜென்மலக்கி னத்திற்கு கோணகேந்திரங்களில் பலம் பெற்றிருக்க அந்த ஜாதகன் தன் தனங்கள் அனைத்தையும் ஒருவருக்கும் ஈயாமல் பூமியில் புதைத்துவைப்பான் என்க.

சூரியன் திசாபுக்தி பலன்

திசைகளிலுள்ள புத்தி மாதங்களை பின்பக்கத்தில் காட்டியபடி ஒவ்வொரு திசைக்குறிய புத்தியின் வருட மாத தினமறிந்து இப் பூமியிற் பிறந்த ஒவ்வொருக்கும் பலன் சொல்லுதல் வேண்டும். இப்பலன் சொல்லுவதோடு கிரகங்களிருக்கும் நோக்கா நோக்கமறிந் தும் பலன் சொல்ல வேண்டு மாகையால் அதன் விபரங்களைக் கீழ்க் கண்டவாறு அறிந்து சொல்லுதல் வேண்டும்.

விருத்தம்

அருக்கனிலருக்கன்புத்தி யரியநாளூற்றெட்டுக்கும்
கருக்கொடுமுற்றூற்கேடு கலகமந்தணனூற்பீடை
வருத்தமாந்தலைநோயுண்டாம் வலக்காதில்வலிப்புமன்றி
பெருக்கசீரிழிவுமேட மாதத்திற்பீடைதானே.

இ-ள். அருக்கனென்னும் உஷ்ண பிரகாசத்தையுடைய வெய்ய வன் திசை வருஷம் 6-ல் அவன் சுயபுக்தியாகிய நாள் 108-க்கு பலன் விபரம் கூறுவோம். தன்னை ஈன்ற தாய் தந்தையருக்குப் பலவித துன்பமும், கோள் உண்டாதலும், மேலும் விப்ரஜெனத்தால் பலவித

கஷ்டங்களுண்டாகும். மனவியாகூலமும், தலைவலியும் உண்டு. வலது செவியில் வலிகாட்டும். நீரிழிவு ரோகம் காட்டும். இப்புத்தியில் மேஷமாத பிரவேசகாலம் பலவிதத் துன்பம் உண்டாகும் எ-று.

வி-ரை. இவை மேற்சொன்ன புத்திநாதனுக்குறிய பொதுப் பலனாகும். மேற்படி சூரியன் சொக்ஷேத்ரம், கேந்திரம், திரிகோணம் இவைகளிலிருந்தால் அரசசேவை, பூமிபலிதம் முதலிய வாகன பலிதம் உண்டு.

3-11 இவ்விடங்களி லிருந்தால் தலைநோய், காச்சல், பிரயாணம், ராஜகலகம், சூரியனுடன் சுபகிரகங்கள்கூடி இருக்க அற்பசுகம் உண்டு. மேற்சொன்னபடி சூரியன் 3-11 இவ்விடங்களில் நீசம் பெற்றால் பீடை மனஸ்தாபம் இவைகளுண்டாகும். சூரியன் ஜெனனலக்கினத்தோனேக்கூட புத்தி முதலில் சஞ்சலம், மனவியாதி, மத்தியில் சுகமும், கடைசியில் லக்ஷிமி கடாக்ஷமும், வாகனலாபம், க்ஷேத்ரலாபம், ஜெபம் முதலியவைகளைச் செய்வானென்றும் கூறுக.

இரவியிலிந்துபுத்தி யினியநூற்றெண்பதுக்கும்
அரசரான்மகிழ்ச்சிலாப மதிகவாகனமுமுண்டாம்
பரவியமணமாம்பெண்ணுற் பகையிடக்கண்ணினோபாம்
திரமெனுங்கடகத்திங்க டவினைகாணுந்தானே.

இ-ள். சூரியமகாதிசையில் சந்திரனுண்ணும் புத்தி நாள் - 180 இதில் அவன் தரும் பலன் விபரம். ராஜாக்களால் சந்தோஷத்தை யடைதலும், ஆதாயமுண்டாதலும், விசேஷவாகனச் சேர்க்கையும் உண்டு. தன் குடும்பத்திலுள்ள பெண்களுக்கு கலியாணமும், சிற் சில விரோதங்களும், இடது விழிக்கு உபத்திரவமும், தேர்ந்தெடுக் கப்பட்ட ஆடிமாதத்தில் கொடியதுன்பங்கள் உண்டாகும் என்றும் கூறுவர் எ-று.

வி-ரை. மேலும் சந்திரன் தன் சுயவீட்டிலாவது திரிகோணத்தி லாவது, இரண்டாம் ராசியிலாவது, சப்தமாதியுடன் கூடியிருந்தால் பாக்கியமும், செல்வமும் உடையவனாகுவான். நான்காம் வீட்டோ னுடன் கூடியிருந்தால் நல்லயோகம் உண்டு. அமரபக்கச் சந்திர னாகிலும் அவன் தீயருடன் கூடியிருந்தாலும், காச்சல், தலைநோயும், புத்திர மித்திர களத்திராதியருக்குப் பீடையும் காட்டும். 8-ல் சந்திரனிருந்தால் மனவியாதி, ரோகம், சண்டை இவைகளுண்டாகும். 9-10-ல் சந்திரனிருந்தால் வாகனலாபமும், தான்யலாபமும், செல்வம், புத்திரலாபம், கலியாணம், சந்தோஷம் இவைகளுண்டு.

ஆதித்தன்தன்னிற்செவ்வாய் புத்திநாற்றிருபத்தாறும்
வாதித்தவியாதிசண்டை வழக்குநாவறட்சிபீடை
சாதித்தவுற்றார்கேடு தனம்பொருட்சேதமாகும்
போதித்தபொருளுஞ்சாயும் பூமியின்பலனுகாதே.

இ-ள். சூரியமகாதிசையில் குஜன் புக்திக்குரிய நாட்கள் 126-ஆகும். அக்காலங்களில் சண்டையுண்டாகும். நீங்கப்படாத ஜாட்டியத்தை கொடுக்கும். ஏதேனு மொருவழக்கை உண்டுபண்ணும். உஷ்ணசம்மந்தமான வரட்சியை யுண்டுபண்ணும். மேலும் துற்பலனையும், தன்னை ஈன்ற பெற்றோருக்கு பலதீங்குகளைக் கொடுக்கும். தன் ரொக்கஸ்திதிக்கு விரயம் வரும். எவ்வளவு தனமிருந்தாலும் தன் கைவிட்டுப்போம். தன் பூமிமூலமான பலிதங்களையும் குறைவு படுத்தும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன குஜன் 'லக்கினாதிபுடன் கூடியிருக்க மேற்சொன்ன துற்பலனைத் தரான். அதிலும் குஜன் சப்தமாதியாக இருக்க அவனுக்கு சுப்ரமண்ய ஜெபமும், ஆபரணபூஷணங்களும் உண்டாகும். 6-8-12-ல் நீசம் பெற்றிருப்பானாகில் ஜலதோஷமும், அபகீர்த்தியும், கட்டட விரயமும் உண்டாகுமென்றும், அவன்நிற்கும் தானபலன்களையறிந்து சொல்லுக என்பதாம்.

சூரியன்றனிலோரகு சுகத்தையேசொல்லவென்றால்
எருற்றநாண்மூந்நூற்றோ டிருபத்துநான்கதாகும்
பாரியகடிவிஷத்தாற் படைபயம்பிறந்தார்பின்னம்
வீரியமைந்தன்றேசாந் திரத்தினின்மேவுவானே.

இ-ள். சூரியமகாதிசையில் இராகுவின் புத்தியான மாதம்-10 தினம் 24-க்கும் அவன் தரும் பலன்களைச் சொல்லுமிடத்து கொடிய விஷத்தாலும், ஆகாயத்திலிருந்துவிழும் இடி முதலியவைகளாலும், துன்பம் உண்டு. அல்லது தன் உறவினருக்கு கஷ்டம் உண்டு. தன் புத்திரவர்க்கங்களுக்கு கெண்டாதி தோஷம் சம்பவிக்கும். அந்த ஜாதகனவன் அன்னிய தேசங்களுக்குச் சென்று விடுவான் என்றும் சொல்வர் எ-று.

வி-ரை. இராகுபகவான் சுபகிரகத்துடன் சேர்ந்தாலும், சுபகிரகங்களால் பார்த்தாலும், அல்லது உச்சம் பெற்றிருந்தாலும், திரிகோணஸ்தானங்களி லிருந்தாலும், ராஜாக்களால் கீர்த்தியும், வஸ்த்திரபூஷண லாபங்களும், 6-8-12-ல் நின்றால் பந்துஜனப்பீடையும் பயித்தியமும் உண்டாகும். 11-ல் ராகு நின்று சுபகிரகங்களால் பார்த்தால் புத்திரானுக்கு விவாக முதலிய பலன்கள் சேருமென்றும் கூறுவர்.

எதிருறுங்கதிரிற்பொன்னி இருநூறோடெண்பத்தெட்டும்
கதிபெறுமுற்றார்நட்புங் கல்வியுஞ்செல்வமுண்டாம்
மதியுறுமிராசசேவை மக்களுஞ்சுற்றமுண்டாம்
அதிகசத்துருவைவெல்லு மதிசயமிகுதியாமே.

இ-ள். பகலில் வெளிச்சமும் உஷ்ணம் முதலியவைகளைத் தரா நின்ற சூரியமகாதிசையில் குருபுக்தியின் புசிப்பு காலமான இருநூற்றெண்பது நாட்களிலும் அவன் தரும்பலன் என்னவெனில், புகழ்ச்சி

யும், செல்வமுமுடைய ஜன சினேகமும், திரண்ட வித்தையும், தனமும் உண்டாகும். நல்லறிவு விருத்தியும், அரசர்களைக் காணு தலும், புத்திரப்பேறும், தன் பந்துக்களும் சேருவர். தனக்கு எதிர்த்த பகையாளிகளை ஜெயிக்குந் திறமும், காணாததைக் காணு தலும் உண்டாகும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன குரு 5-11-ல் பலம்பெற்ற கிரகங்களுடன் கூடியிருந்தால் விவாகமும், ராஜபேட்டியும், நவரத்தின லாபமும் உண்டாகும். 9-10-க்குடைய கிரகங்களுடன் கூடியிருக்க ராஜ்ஜிய லாபமும், மகா சந்தோஷமும், நூதன கிரக கட்டடமும் உண்டாகும்.

குரு நீச்சம் அஸ்தமயமாக இருப்பானாகில் பல கஷ்டமும், ராஜாக்களால் தொந்தரவும், பயமும் உண்டு. 1-4-7-10-ல் இருந்தால் மேன்மையான சுகமும், தனகஷ்டம் யாவும் நீங்கும் என்பதாம். 6-8-12-ல் இருந்தால் சோராக்னி பயமும், அன்னிய தேசசஞ்சாரமும், காதுநோயும் உண்டென்று கூறுக.

நன்கதிர்சனிமுந்நூற்று நாற்பதோடிரண்டினுக்கு
மன்பயமக்கட்பீடை மனத்துயர்பகைவருண்டாம்
தன்பொருட்சேதமுந்தி யடுப்பதுசரீரபீடை
இன்பமேயில்லைமண்ணி லெவர்களும்பகைவராமே.

இ-ள். உலகில் மேன்மையாய் விளங்கும் சூரியமகாதிசையில் சனி புக்திக்கு ஏற்படும் நாட்களான 342-ல் அவன் தரும்பலன் என்னவெனில் ராஜாக்களால் பயங்கரமும், தன் புத்திர வர்க்கங்களுக்கு துன்பமும், மனவியாகூலமும் உண்டாகும். தனக்குச் சத்துருக்கள் பலர் உண்டாதலும், கைப்பொருள் விரயங்களும், சரீர ஜாட்டியமானது நீங்காதிருத்தலும், தனக்கு அந்த புக்தி வரையில் நற்பலன் என்பதே கிடையாதென்றும், இப்பூமியிலுள்ள அனைவரும் தனக்கு சத்துருக்களாகவே இருப்பார் என்றும் கூறுவாய் எ-று.

வி-ரை. மேற்சொன்ன புக்திநாதனான சனி 4-ஆம் வீட்டோனைக் கூடியிருக்கில் திரவிய வஸ்திர பூஷண லாபம், நூதன கிரகம், சுபசோபனம், தானிய லாபம், ராஜப் பிரீதி இவைகளும் அவனைப் பாவகிரகங்களால் பார்க்க, இராஜ கோபத்தால் பயம், உயிர்ச்சேதம், விலங்கு கிலேசம், சஷ்டாடகம் வயிற்று நோய் முதலியவைகளும் உண்டு. பாவருடன்கூடி திரிகோணங்களில் இருந்தால் மார்பில் காயம், புத்திரநாசம், தனது புத்திரரே தனக்குச் சத்துருவாகவும் இருப்பார். சனி 11-ல் இருந்தால் களத்திர புத்திர லாபமும் அரிய பூஷணங்களும், செல்வமுடையோனாகவும் இருப்பானென்றும் கூறுக.

நற்கதிர்தன்னிற்புந்தி நாளதுமுந்நூற்றும்
வற்கமும்பகைபதாகும் மனத்திகில்சரீரபீடை
கற்கருவினுசமுந்திக் கடுப்புநோய்வழக்குமுண்டாம்
சொற்புகழ்மன்னனுசந் துக்கமுமிகுதியாமே.

இ-ள். நன்மையைத் தரும் சூரியன் திசையில் புதன் புக்தியின் நாட்களான 342-ல் அவன் தரும்பலன் எனவெனில், தன் உறவினரால் விரோதமும், மனவியாகூலமும், சரீர ஜாட்டியமும், பற்பல பொருள் சேதமும், உந்திமூலமான நோயும், கைப்பொருள் நாசமும், புகழ்ச்சியைப் படைத்த தன் பிதாவுக்கு கெண்டமும், ஏராளமான விசனத்தையும் அனுபவிப்பானென்றுங் கூறுக எ-று.

வி-ரை. மேற்சொன்ன புதனுடன் 2-9-11-க்குடையோன் கூடியிருக்க அவனுக்குத் திரண்ட செல்வமும், சொல்வதற்கரிய பூஷணங்களும் தானதருமமும் உண்டாகும்.

6-8-12-ல் இருந்தால் முதலில் சௌக்கியபலன் உண்டாயினும், மத்தியில் வியாதியும், அரசகோபமும், அன்னிய கிராமப்போக்கு வருத்தும் உண்டாகும். புதன் 2-7-ஆம் வீட்டோனுக இருக்கில் அவன் புக்தியில் கொடிய கஷ்டமுண்டு. அதுகாலம் விஷ்ணுஜெபம் செய்ய பரிகாரமாகும்.

ஆதித்தன்றனிலேகேது வனுருநூற்றிருபத்தாறும்
சோதித்தநினைவுகுன்றுந் தூரதேசத்திற்போவார்
வாதித்தவிஷமுமுண்டாம் வழக்குண்டுமனைவேறுகும்
பேதிக்குமுற்றார்கேடு பிணக்குண்டுபலன்செய்யாதே.

இ-ள். சூரியன் திசையில் கேதுஉண்ணும் நாட்களாகிய 126-லும் அவன் கொடுக்கும் பலன் என்னவெனில், தான் மிகுந்த ஆலோசனை செய்துக் கண்ட விஷயத்தை மறந்து போதலும், அன்னிய தேசங்களில் போய் சஞ்சரித்தலும், துன்பத்தைத்தரும் கொடிய விஷங்களால் துன்பமும், ஏதேனும் ஒரு காரியமாக சண்டை முதலியவைகளும், தன் சுயக்ஷேத்திரத்தைவிட்டு அன்னிய கிரகம் செல்லுதலும், தன் சுயபந்துக்களுக்கு கஷ்டங்களும், சஷ்டாடகங்களும் துற்பலனும் உண்டாகும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன கேது அஷ்டமஸ்தானம் பெற்றிருக்கில் கொடிய வியாதியும், வீட்டைவிட்டுப் போதலும், பொருள் நாசமும் உண்டு.

3-10-11 இவ்விடங்களி லிருந்தால் தனலாபமும், கலியாணமும், பிதுர்பாக்கியமும் உண்டாகும். 11-ஆம் வீட்டோனுடன் கூடியிருக்க சவுக்கியமும், 3-ஆம் ராசிநாதனைக் கூடியிருக்க சகோதரநாசமும், தான் தொடுத்த காரியம் அபஜெயமும் உண்டாகும் எ-று.

அருக்கனில்வெள்ளிமுந்நூற் றறுபதுநாளிலாபம்
திருக்கலியாணஞ்செல்வஞ் செம்பொன்னுமிகவுமுண்டு

வருத்தமாஞ்சரீரநோயு மலர்க்கணில்வியாதிதோன்றும்
உருக்கியபிணியுந்தீரு முண்மையாய்க்கருமநன்றே.

இ-ள். சூரியமகாதிசையில் சுக்கிரன் புக்தியாகிய நாட்கள் 360-லும் அவன் தரும் பலன் என்னவெனில் விவாக முதலியவைகளும், தனம் முதலிய பொன்னுணய சேர்க்கையும், விசனத்தைத் தாத்தக்க திரேகஜாட்டியமும், மலர்போன்ற விழிகளுக்கு உபத்திரவமும், தனக்குக் கஷ்டத்தைத்தரும் பிணிநிவர்த்தியாதலும், நற்செயல்களும் உண்டாகுமென்று உண்மையாய்ச் சொல்லுவாயாக எ-று.

வி-ரை. மேற்சொன்ன புத்திநாதனை சுக்கிரன் பாவகிரகங்களுடன் சேர்ந்து நீச்சம் அல்லது 6-8-12-ஆம் இடங்களிலிருந்தாலும் அஸ்தமய கிரகங்களுடன் கூடினாலும் களத்திர பீடையும், பூமிநாசமும், வாகன நஷ்டமும், செய்தொழில் பின்னமும் கொடுக்கும். கேந்திரம் அல்லது திரிகோண ஸ்தானங்களி லிருந்தால் லாபமும், ராஜ சன்மானமும், களத்திர சவுக்கியமும் உண்டாகு மென்றும் சொல்லுக.

சந்திரன் திசாபுக்தி பலன்

சந்திரன்தனிமேலேசோமன் றனக்குநாள்வருமுந்நூறும்
விந்தையாங்கன்னிசேர்வள் வீரமன்னேக்கமுண்டாம்
முந்தியகாரியங்கணினைத் ததுமுடியுமேலும்
இந்திரன்றனைப்போன்மைந்த னினிதுடனுண்டாங்கண்டீர்.

இ-ள். சந்திரமகாதிசை ஷூ 10-ல் தன் சுயபுக்திக்குறிய நாளான 300-ல் அவன் தரும்பலன் என்னவெனில் அழகுபொருந்திய ஸ்திரீகள் வந்து சேர்தலும், வீரபராக்கிரமமான தயிரிய நெஞ்சும், தான் ஆலோசித்த விஷயங்கள் கைக்கூடுதலும் உண்டாவதோடு அந்த ஜாதகனுக்கு இந்திரனுக் கொப்பான அழகிய மக்களும் ஜெனிப்பாரென்று கூறுவாயாக எ-று.

வி-ரை. சந்திர புக்தி காலங்களில் ஆலோசிக்க வேண்டியது என்னவெனில் ஜெனகாலங்களில் வளர்பிரைச் சந்திரனுக யிருந்தால் பூரணமாக மேற்சொல்லிய பலனையே தருவான். சந்திரன் 9-10-ஆம் வீட்டோனைச் சேர்ந்திருப்பானுகில் அவனுக்கு மதம்பொருந்திய யானை முதலியவைகள் சித்திக்கும். 6-ஆம் வீட்டோனுடனும், செவ்வாயுடனும் கூடியிருக்க அவன் தன் சத்ருக்களுடன் சண்டையிடுதலும், தன் படைத்துணைவரால் விரோதமும், வியாதியும் உண்டாகு மென்றும் கூறுவர்.

நன்புறுமதியிற்செவ்வாய் நாளிருநூற்றுப்பத்தும்
பண்பிலாவழக்குச்சண்டை பயித்தியங்களவுநோயாம்
தண்பொருள்சேதங்குட்டங் தழற்பயமேடமாதம்
திண்பெருந்தனேயேபூணு மேந்திழைக்கலகஞ்சேரும்.

இ-ள். மேற்சொன்ன சந்திரதிசையில் குஜன் புக்திக்குரிய நாளானது 210 - ஆகும், அக்காலங்களில் நேசத்தைத் தராத சச்சரவும், சண்டையும் உண்டாகும். மனவிகாதம் உண்டாகும், தன் வீட்டில் சோரம் போகும், வியாதியைத் தரும், தன் ரொக்க ஸ்திதி விரயமாகும், குஷ்டம் என்னும் வியாதியைக் காட்டும், சித்திரைமாதம் வரும்போது நெருப்பால் பயங்கரம் உண்டு. அபாரமான குற்றத்தால் கட்டுண்டும் இருப்பான், ஸ்திரீ ஜனங்களால் சில கோட்கள் உண்டுபண்ணும் எ-று.

வி-ரை. குஜன் 6-8-12-முதலிய க்ஷேத்திரங்களில் இருக்கினும் அவனுடன் சுபகிரகங்கள் கூடினாலும், நோக்கினாலும், மற்றும் 9-5-க்குடையோர் சேர்ந்தால் சிவிகைப் பல்லக்கு முதலியவைகள் சேர்தலும், விருத்தியும் உண்டென்றும் கூறுவர்.

அம்புலிதனிலேராகு வைந்நூற்றுநாற்பதுக்குள்
செம்பொனுஞ்சேதமாகுஞ் செற்றலர்பயம்வியாதி
நம்பியர்துன்பம்ராச நிஷ்டூரமிகவுங்காணும்
வம்பலார்குழலினாளே மதலையர்பீடையாமே.

இ-ள். அம்புலியாகிய சந்திரமகாதிசையில் இராகுவின் புக்தி நாட்கள் 540-ஆகும். அக்காலங்களில் செழுமையான பொன் பூஷணமும் நாணயமும் கைவிட்டுப் போகும். தனக்கு இருக்கும் சத்துருக்களுக்கு பயந்திருக்கவும் நேரும். சரீர வியாதியை உண்டுபண்ணும். தான் பெரிய மலைபோல் சிநேகித்திருந்தவரால் கஷ்டம் உண்டாம் அல்லது தன் ஜேஷ்டனால் கஷ்டம் என்றும் கூறலாம். ராஜாக்களால் குற்றம் சாட்டப்படும், பழிக்கு ஆளாகுவோனு மாவானென்று இனிய வண்டுகளின் குரலைப் பார்க்கினும் இனிய குரலையுடையவளே அவன் புத்திர வர்க்கங்களுக்கும் தோஷம் உண்டென்று கூறுவாயாக எ-று.

வி-ரை. சந்திரனில் இராகு புக்திகாலங்களில் 1-4-7-10-11- இவ்விடங்களில் ராகுவிருப்பானாகில் மேற்சொன்ன கொடிய பலன்கள் மூன்றுமாதம் வரையிலும் என்று கூறுவர். அதற்குமேல் தனதான்ய லாபமும், ராஜாக்களால் சந்தோஷமும், ஜெயமும் உண்டாகும் என்றும் இன்னும் அநேக நற்பலனும் உண்டாகுமென்றும் கூறுவர்.

நன்றிசேர்மதியிற்பொன்ன னானூற்றேடெண்பதுக்கும்
வென்றிசேர்குதிரையானை மேன்பொருடானியங்கள்
குன்றெனுமுலையாய்ச்சேருங் கொற்றவனாலேயின்பம்
கன்றுநன்காலியுண்டாங் காளையைப்பெறுவர்தாமே.

இ-ள். நற்பலனைத்தரும் திசாநாதனை சந்திரனில் குருவுண்ணும் நாட்களான 488-ல் அவன் தரும்பலன் என்னவெனில், வெற்றியைத்தரும் குதிரை யானை வந்து சேர்தலும், அளவிறந்த செல்வமும்,

தன வகைகளும், பருவதத்தைப்போன்ற ஸ்தனத்தை யுடையவளே! தானாகவே வந்து சேருமென்று சொல்வாய், இராஜரீகம் புரிபவரால் சந்தோஷமுண்டு, நன்மையைத் தரும், நாற்கால் ஜீவனும் கன்று காலிகளும் சேரும், குரு புத்தியிலேயே ஆண் குழவியைப் பெறுவான் எ-று.

வி-ரை. குரு உச்சம் அல்லது கேந்திரம் கோணம் இவைகளைப் பெற்றிருக்க ராஜாக்களால் பூஜிதனும், அனேக விதமான லாபங்களுண்டாகு மென்றும், 6-8-12 இவ்விடங்களிலிருக்க களத்திர புத்திர நாசமும், அனேக துக்கமும் உண்டாகும். அவனுடன் 6-ஆம் வீட்டோன் கூடியிருக்க சண்டையும், கிலேசமும் உண்டாகு மென்றும் கூறுவர்.

மதிதனிற்காரிபுத்தி மாதம்பத்தொன்பதுக்கும்
பதிகெடுங்கன்றுகாலி பற்றறுமனத்திற்றுக்கம்
விதியுறுமனேயாளோடு மெய்ப்பொருட்சேதமாகும்
சதிபெறுகருத்தோனாலே கோள்வருஞ்சாற்றினேன்கேள்.

இ-ள். சந்திரதிசையில் சனியுண்ணும் புக்தி மாதம் பத்தொன்பதிலும், நாற்கால் ஜீவன்களான கன்று காலிகள் தன் வீட்டைவிட்டு அல்லது கைவிட்டு போதலும், மனவிறக்தியும் அல்லது வியாகூலமும் உண்டாகும். தன் மனைவிக்கு கெண்டமும், தன் கையிலுள்ள பூஸ்திதி விறயமும், கறுத்த சரீரமுடையவனால் மோசமும், கலகமும் உண்டாகு மென்று சொல்வாயாக எ-று.

வி-ரை. மேற்சொல்லிய சனி கேந்திர கோணங்களி லிருக்கினும் 11-ஆம் வீட்டிலிருக்கினும், பலம்பெற்ற கிரகங்களுடன் சேர்ந்தாலும், உச்சம் ஆகூழி பெற்றிருந்தாலும், அவனுக்கு தனலாபமும், நூதன கிரக கட்டடமும் உண்டு.

சந்திரன்றன்னிற்புந்தி தான்பதினேழுமாதம்
அந்தரக்கலகம்போக மழகியமக்கட்பேறும்
சிந்தைசேரிராசயோகஞ் சேர்ந்திடுநினைத்ததெல்லாம்
முந்தியவித்தைலாபம் புரட்டாசிமுடிவிற்றுனே.

இ-ள். சந்திரன்மகாதிசையில் புதன் உண்ணும் புக்தி மாதங்களான 17-லும் கொடுக்கவேண்டிய பலனென்னெனில் திடீரென்று பிறரால் கோள் வருதலும், அழகுடைய புத்திரருண்டாதலும், தன் மனத்திற்குச் சந்தோஷத்தைத் தரத்தக்க ராஜயோகத்திற்குச் சமானமான யோகமும், தான் கோறிய காரியங்களும் பொருளும் கைகூடுதலும், மேன்மையான கல்வி விருத்தியடைதலும், இவை யாவும் புரட்டாசிமாதத்தின் கடைசியில் உண்டு எ-று.

வி-ரை. மேற்சொன்ன புத்திநாதனாகிய புதன் 6-8-12 முதலிய க்ஷேத்திரங்களிலும் நீச்சம் அல்லது அஸ்தமயம் பெற்ற தீயகோட்

களின் சேர்க்கையாலும் பீடிக்கப்பட்டால் திரேகபீடையும், களத்திர பீடையும், ஜுரபீடையும், அரசராலும், திருடராலும், துன்பமுண் டாகு மென்றும் கூறுவர்.

நிலவினிற்கேதுவேழு மாதமுநெருப்பாற்பீடை
தொலைவிலாச்சரீரம்வீங்குஞ் சுற்றஞ்சாமிடக்கண்ணேயாம்
அலைச்சலும்பயமுமுண்டா மதிகதண்டனையுமுண்டாம்
பலஜெனவெறுப்புவந்து நாசமாம்பகையுண்டாமே.

இ-ள். சந்திரமகாதிசையில் பாம்பாகிய கேதுண்ணும் புக்தி மாதங்களான 7-லும், அக்கினியால் துன்பமும், திரேக ஆதியங்கமும் வீக்கம் உண்டாகும். தன் உறவினர்கள் இறந்தது போதலும், இடது விழிக்கு பாதையும், எக்காரியத்திலும் பிரமிக்கும்படி மன திகில் உண்டாகும். சொல்லுதற்கரிய அபவாதம் கிடைக்கும். அனேக ஜனங்களால் தூஷிக்கப்படுபவனும், விரயமும், விரோதம் முதலியவைகளும் உண்டாகும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன கேது 4-12 இவ்விடங்களில் சுப கோளுடன் கூடினுலும், நல்லோர் பார்த்தாலும், வாகன லாபமும், சுகமும், வாழ்வும் உண்டாகும் என்றும் சோதிடத்தோர் கூறுவர்.

வட்டமாமதியில்வெள்ளி மாதங்களிருபதுக்கும்
திட்டமாம்வியாதியுண்டாம் சேர்ந்திடுவிதனங்காட்டும்
நட்டமாமர்த்தநாச நாளிலேவிரோதமுற்றூர்
கட்டமாஞ்சத்துருவாலே காரியஞ்சேதமாமே.

இ-ள். பெரிய வட்டத்தைப்போன்ற வடிவமுடைய சந்திரமகா திசையில் சுக்கிரன் உண்ணும் புக்தி மாதங்களான 20-லும், தன் சரீரத்தில் சமரசஜாட்டியம் உண்டாம். தன் கையிலுள்ள பொருளை விரயம் செய்யும். நஷ்டங்களும் அர்த்தநாசமும் உண்டாகும். திடீ ரென்று தன் சுயஜனங்களே பகைவராவர். தன் பகைவரால் பற்பல கஷ்டங்களும், தான் தொடுத்த வேலைகள் யாவும் கைக்கூடாதென்றும் கூறுவர் எ-று.

வி-ரை. சுக்கிரன் ஜெனனகாலங்களில் இரண்டிலிருந்தால் அவன் புத்திராதனுக வருங்காலம் புதையலும், அரசரால் சந்தோஷ மும், பொன்பூஷண லாபமும் உண்டு. கொடிய க்ஷேத்திரங்களிலும் தீயகிரகங்களுடனும் சேர்ந்தால் கொடியபலனே கொடுப்பான்.

வெண்மதிதனிலேவெய்யோன் வேண்டியவாறுமாதம்
உண்மதிசுரமுப்பித்த முருவழுங்குலைந்துவேறுய்
கண்மதியங்கந்தன்னிற் கடுவலிநோயுமுண்டாம்
பண்புறுகுணத்திநாளே பலனுண்டுபலன்செய்யாதே.

இ-ள். வெண்மைப் பிரகாசமுடைய சந்திரமகாதிசையில் சூரிய னுண்ணும் புக்தி 6-மாதங்களில் உட்கண்ட வியாதியும், ஜுரமும்,

பித்தம் முதலியவைகள் பீடிக்கப்படும். தன் சரீரங்குலைந்து மாறுரூபமாகுவன். நேத்திரத்திலும், மனத்திலும், 'திரேகத்திலும், கொடிய உபத்திரவமான வியாதியுண்டாகும். சிநேக வாஞ்சையையுடைய பெண்ணே! சூரியனுக்கு நல்லபலனைத்தரும் சக்தியிருந்தாலும் தரமாட்டான் எ-று.

வி-ரை. மேற்சொன்ன சூரியன் லக்கினாதியுடன் கூடினாலும் 2-11 இவ்விடங்களிலு மிருந்தால் தன் புக்தி அந்தியகாலங்களில் நல்ல பலனைத் தருவானாயினும், பிதுர்நாசமுண்டாகும். கேந்திர கோணங்களிலிருந்தால் ராஜசேவையும், சந்தோஷமும், புத்திர லாபம் முதலிய நற்பலனையே தருவாரென்றும் சோதிடத்தோர் கூறுவார்.

செவ்வாய் திசாபுக்தி பலன்

நன்றிசெய்சேயின்மாத நாலுநாளிருப்பத்தேழும்
கன்றிடுங்காலினுய்கள் கடுத்திடுமேடமாதம்
வென்றிசேர்மன்னரச்சம் வெப்புநோய்நீசராலே
கொன்றிடுந்தோளின்மாதத் துடன்வெட்டுங்குத்துமானே.

இ-ள். குஜமகாதிசை ஆல் 7-ல் குஜன் சுயபுக்தியாகிய மாதம்-4 நாள் இருபத்தேழிலும், அவன் தரும் பலன் என்னவெனில் குட்டிப்போட்ட சுணங்கனால் தன் காலில் கடிபடுதலும், வெற்றியையுடைய ராஜாக்களால் சித்திரைமாத பிரவேச காலங்களில் அச்சமும், தான் அதிக வருத்தப்படத்தக்க நோய் நீசரால் உண்டாதலும், கார்த்திகை மாதம் வந்தபோது பெரிய சண்டை முதலியவைகளால் அடிபடுதலும், மரணத்திற் கேதுவான தோஷமும் உண்டாகும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன குஜன் நீச்சம் அஸ்தமயம் அல்லது 6-8-12 இவ்விராசிகளில் இருந்தால் தீயால் பயமும், சுபனங்கிசம் பெற்றும், சுபனுடன் கூடியும் இருந்தால் நாற்கால் வாகனலாபமும், சுபபலன்களாகவே நடக்கும் என்றறிக.

செவ்வாயில்ராகோராண்டுஞ் சேர்ந்தநாள்பதினெட்டுக்கும்
ஒவ்வாதவிஷத்தாற்றோளாற் றிங்களிலுற்றூர்நாசம்
இவ்வாறுமேகக்கட்டி யிருந்திடுந்தலம்வேறாகும்
கொவ்வைவாய்மானேகுட்டங் குரூரமாம்பீடையாமே.

இ-ள். குஜமகாதிசையில் பாம்பாகிய இராகுவுண்ணும் ஆல்-1 நாள் 18-ல் அவன் தரும் பலன் என்னவெனில் கொடியவிடங்களால் துன்பப்படுதலும், தன் தாய் தந்தையர் முதலிய பந்து வர்க்கத்தாருக்கு கார்த்திகைமாதம் வந்தபோது கெண்டாதி தோஷங்கள் உண்டாவதோடு தன் சுயக்ஷேத்திரத்தை விட்டு அன்னிய க்ஷேத்திரத்திற்கு மாறுதலும், அவயக்குறைவை யுண்டுபண்ணும் குஷ்ட வியாதியும், கொடிய துன்பமும், பீடையும் உண்டாகுமென்று

கோவைக்கனியையொத்த இதழ்களையுடைய பெண்ணே! சொல்வாயாக எ-று.

வி-ரை. மேற்சொன்ன ராகு சுபகிரகங்களுடன் கூடினாலும், பார்வை பெற்றாலும், 3-10-11 இவ்விடங்களி லிருந்தாலும் ராஜப் பிரீதியும், பூமிமூலமான லாபமும், களத்திர புத்திர சுகமும் உண்டென்று சொல்வது சாஸ்த்திர சித்தம் ஆனதால் இராகு எந்த க்ஷேத்திரத்தி லிருக்கிறானென்று ஆராய்ந்து கூறுக.

முழங்கியசேயிற்பொன்னன் முன்னூற்றுமுப்பத்தாறும்
வழங்கிடுமர்த்தநாச மன்னராற்பகையுமுண்டு
தழங்கிடுந்திசைதொடங்கி சத்துருபலருமாதர்
அழங்கலின்நாளிற்செல்வ மரசாலுறவுமாமே.

இ-ள். முழக்கத்தையுடைய குஜமகாதிசையில் குருவுண்ணும் நாட்களான 336-ல் அவன் தரும் பலனென்னவெனில் அர்த்த நாசத்தை யுண்டுபண்ணும். மேலும் ராஜாக்களால் விரோதத்தைக் கொடுக்கும். மேல் எழுதிய குஜதிசை ஆரம்பமுதல் தன் சத்துருக்கள் அனேகமாய் உண்டாவர். அந்திய காலங்களில் தனத்தைக் கொடுப்பதோடு ராஜாக்களால் சினேகம் உண்டாகும் என்றும் சொல்வாயாக எ-று.

வி-ரை. மேற்சொன்ன குரு உச்சம் ஆக்ஷிபெற்று சுபனங்கிசம் பெற்றாலும், அல்லது சுபன் வீடுகளில் இருந்தாலும் மேற்சொன்ன தீயபலனைத்தரான். இராஜ சன்மானமும், பால்பாக்கிய விருத்தியும், பாக்கிய சேர்க்கை, பெரியோர் உறவு, சினேகம் உண்டாகும் என்றும் கூறுவர்.

மருவியசேயிற்காரி மாதமீராறுமொன்றும்
கருதியநாளொன்பானுங் கலகமாம்வழக்குச்சண்டை
பொருபடையர்த்தநாசம் பொருந்தியமெய்யிற்குட்டம்
மருவியநிலையுங்கெட்டு வனத்தினிற்கிலேசமாமே.

இ-ள். அங்காரக மகாதிசையில் சனியுண்ணும் காலங்களான வருஷம்-1, மாதம்-1, நாள்-9 ஆகும். அக்காலங்களில் அவன் தரும் பலன் என்னவெனில், கோள் உண்டாதலும், பற்பலவித விவகாரங்களும், சண்டை நேர்தலும், தனக்கு உதவி செய்பவர் அல்லது உறவினர்களுக்குக் கொஞ்சம் விறபமும், தன் தேகத்தில் குஷ்ட வியாதியும், தான் நிலைத்திருக்கும் க்ஷேத்திரத்தை விட்டுவிடுதலும், மனச் சஞ்சலங்களையும் உண்டாக்கும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன சனி கார்யாதிபயாயும், அல்லது சொக்ஷேத்திரம்-திரிகோணம்-உச்சம்-உச்சனங்கிசம் இவ்வாறு இருப்பானாகில் மேற்சொன்ன தீயபலனைத் தரான். மகா கீர்த்தியும், புத்திர களத்திர லாபமும் உண்டு. நீச்சம் பெற்றும் 6-8-12-இவ்விடங்களிலும்

இருப்பானுகில் இராஜ பயமும், துடுக்கர் மூலமான ஆபத்தும் உண்டாகுமென்றும் கூறுக.

முந்தியசேயிற்புந்தி முன்னூற்றேடைம்பத்தேழும்
செந்திருவரிவைசேர்வள் செல்வமுமிகுதியாகும்
வந்திடுநோயுந்தீரு மருவியகன்னிமாதம்
நிந்தையாமரவுதீண்டு நீடியபலன்செய்யாதே.

இ-ள். முன்சொல்லிய குஜன் மகாதிசையில் புதனுண்ணும் நாட்களான 357-லும் அவன் தரும்பலன் என்னவெனில், அழகு, லக்ஷணம், பெருமை முதலியவைகள்வாய்ந்த ஸ்திரீயை அடைதலும், தனவிருத்தியும், தனக்கு உண்டாயிருக்கும் வியாதி நிவர்த்தியாதலும், திடீரென நிந்தையைத் தரும் விஷப்பாம்பானது இப்புத்தியில் புரட்டாசி மாதத்தில் கடித்தலும், தான் எவ்வளவு முயர்ச்சி செய்யினும் பலனைத் தாராதெனவும் கூறுவர் எ-று.

வி-ரை. புத்திநாதனை புதன் நீச்சமாகவும், அஸ்தமயமாகவும், 6-8-12-என்னும் இடங்களிலுமிருந்தால் அவனுக்கு அபமிருத்தும், மனைவி புத்திரநாசம், நாற்கால் ஜீவவிறயம் முதலிய தீயபலனையும், கேந்திரம், கோணம், உச்சம் முதலிய க்ஷேத்திரம்பெறின் உத்தியோக லாபமும், களத்திர சுகமும், சாஸ்திரக் கேள்வி முதலிய நற்பலனையும் தரும் என்றும் பெரியோர் சொல்வர்.

செய்யவன்றனிலேகேது சேர்ந்திடுமாதநான்கு
உய்யுநாளிருபத்தேழு முடன்பகைமாதராலே
மெய்யிலேவியாதிதோன்றும் விஷபயமிகுதியாகும்
தையலார்பொருட்டானிந்தை சத்துருமிகுதியாமே.

இ-ள். குஜன் மகாதிசையில் புத்திநாதனாகவரும் கேதுண்ணும் மாதம் - 4, நாட்கள் 27 - லும், அவன் தரும் பலன்களைச் சோதிக்குமிடத்து ஸ்திரீ ஜெனங்களால் விரோதமும், திரேக ஜாட்டியமும், கொடிய சர்ப்பங்களாகிய விஷங்களால் அச்சமும், ஸ்திரீகள் மூலமான பழிபாவ வசனங்கள் உண்டாதலும், தன்னை துவேஷிக்கும் பகைவர் அனேகமாய் உண்டாவர் என்றும் கூறுவர் எ-று.

வி-ரை. மேற்சொன்ன புத்திநாதனை கேது-உச்சம்-கேந்திரம்-கோணம் இவ்விராசிகளிலிருக்க தனதான்ய லாபமும், நாற்கால் ஜீவலாபமும், ராஜாக்களால் உண்டாகும் என்றும் மேலோர் கூறுவர்.

நாடியசேயிற்சுங்க னற்றிங்களீரேழுக்கும்
நீடியபொருளுஞ்சேரு நேரிழைவந்துசேர்வள்
தேடியதெய்வபூசை செய்வன்மாதவர்கள்சேர்வர்
வாடியசிரங்குதேமல் வாகனம்பெறுவர்தாமே.

இ-ள். குஜமகாதிசையில் புத்திரநாதனாக மாறிவரும் சுக்கிரனுண்ணும் வருஷம்-1, மாதம்-2 ஆகும். அக்காலங்களில் நிறைந்த செல்வம் பெறுதலும், அழகுபொருந்திய ஸ்திரீகள் வந்தடைதலும், பகவஸ்துதி உண்டாதலும், பெரிய தபசி முதலிய ஞானிகள் கூடுதலும், வாட்டத்தைத் தரும் சிரங்கு முதலிய மேல்கண்ட இரணங்களை உண்டு பண்ணுதலும், நாற்கால் ஜீவன்களை வாங்குதலும், இப்பலனை அடைவான் எ-று.

வி-ரை. மேற்சொன்ன சுக்கிரன் 6-8-12-இவ்விடங்களில் நீச்சம் பெற்றிருப்பானாகில் தெற்கு திக்கு பிரயாணமும், கஷ்டம் துக்கம் முதலிய பலன்களை உண்டுபண்ணுவான் என்றும் மேலோர் கூறுவர்.

அங்கியிற்பரிதிதிங்க ளுலுநாளாறுமாகும்
மங்கியகுட்டங்கண்ட வியாதியாமனதிற்றுக்கம்
செங்கனற்பயமுண்டாகுஞ் சிர்மறைபவராற்றுன்பம்
இங்கிதமனையாள்நோவு மெவர்களும்பகைவராமே.

இ-ள். குஜமகாதிசையில் பருதியாகிய சூரியனுண்ணும் மாதங்கள்-4, நாட்கள் 6-லும், அவன் தரும்பலனுவன.உருவங்களைக்குறைவு படுத்தும் குஷ்ட வியாதியும், கழுத்து-மார்பு-வயிறு முதலிய கண்ட ரோகமும், மனவியாகூலமும், செழுமை நிறமுள்ள நெருப்பால் அச்சம் உண்டாதலும், சிறப்புபெற்ற விப்பிறரால் கஷ்டமும், இனிமையைத்தரும் பெண்சாதிக்கு ரோகமும், யாவரும் விரோதமுள்ளவர்களாகவே இருப்பார் என்றும் கூறுவர் எ-று.

வி-ரை. மேற்சொன்ன புத்திரநாதனை சூரியன் 6-8-12-இவ்விடங்களில் தீயகோட்களுடன்கூடி இருந்தால் பந்துஜனக் கலகம், புத்தி முதலில் கஷ்டமும், மத்தியில் அதிக கொடுமையும், அந்தியில் பரதேச சஞ்சாரமும் செய்வான். 3-10-11-இவ்விடங்களிலிருந்தால் தனதான்ய லாபம் முதலிய நற்பலனையே தருவார் என்றும் கூறுவர்.

நலமுறுசேயிலிந்து நாடியதிங்களேழும்
பலமுறும்பூமிலாபம் பலித்திடுங்கன்றுகாலி
இலகியபொன்னுமுத்து மின்பமாமாடையுண்டாம்
தலமதுபேதம்பின்பு தளர்ச்சிவந்தெய்துந்தானே

இ-ள். நற்பலனைத் தரும் குஜமகாதிசையில் சந்திரனுண்ணும் காலமான மாதங்கள் 7-லும், பூமி மூலமான லாபத்தால் மேன்மை பெறுதலும் வாகனம் முதலிய விருத்தி உண்டாதலும், பிரகாசத்தையுடைய முத்து பொன் முதலியவைகளால் சந்தோஷமும், ஆடை விருத்தியும், பிற்காலங்களில் தன் க்ஷேத்திரத்தைவிட்டு அன்னிய க்ஷேத்திரம் போதலும், தரித்திரமும் உண்டாகும் என்றும் சொல்லுக எ-று.

வி-ரை. மேற்சொன்ன புத்திநாதனுன சந்திரன் உச்சம்-லாபம்-சுபர்வீடு-திரிகோணம் இவ்விடங்களில் இருப்பாராகில் புண்யதீர்த்த ஸ்நானம், தேவாலயதரிசனம் இவைகளை உண்டுபண்ணும். 6-8-12-ல் பாவகிரகங்களுடன் கூடியிருந்தால் இராஜகோபம் முதலிய பலனைத் தரும்.

இராகு திசாபுக்தி பலன்

இராகுவிலிராகுமாத நாலெட்டுநாளீராறும்
வாகுருவேந்தனுச மனத்துயர்விஷத்தால்பீடை
ஏகமாமனையாள்துன்ப மிருந்திடுந்தலபேதங்கள்
காகநேர்நிறத்தனுலே கலகமுங்கோளுண்டாமே.

இ-ள். இராகுமகாதிசையில் தன் சுயபுக்தியான வருஷம்-2, மாதம்-8, நாள்-12 ஆகும். அக்காலம் அவன் தரும் பலன்களைச் சொல்லுமிடத்து தன் பெற்றோர் என்னும் ராஜனுக்கு கெண்டமும், சஞ்சலமும், விஷங்களால் துன்பமும், சுகத்திற்கு ஈடுபட்ட பெண் சாதிக்கு கஷ்டமும், தன் வீட்டைவிட்டு அன்னிய வீட்டிற்கேகுதலும், காகத்திற்கொப்பான நிறமுடையவனுல் சண்டை முதலியவைகளை உண்டுபண்ணுமென்றும் கூறுவாயாக எ-று.

வி-ரை. மேற்சொன்ன ராகுபகவான் உச்சனுகவும், சொக்ஷேத்திரமாகவும் இருந்தால் மேற்சொன்ன துற்பலனைத் தராது. மேலான யோகபலனைத் தருவானென்று கூறியிருப்பதால் அவனிருக்கும் இடமறிந்து அதற்கேற்றவாறு பலன் சொல்லுக.

பாரியவிராகின்மன்னன் பரிவுடன்புசிக்குந்திங்கள்
நாரியேயிருபத்தெட்டு நாளுமூவெட்டினின்பம்
ஆரியராலேசெல்வ மரசரால்மகிழ்ச்சியுண்டாம்
காரியமெல்லாங்கூடும் காரிழைமணமுண்டாமே.

இ-ள். பெருமைப்பெற்ற இராகுவின் திசையில் புக்திநாதனுக மாறிவரும் குருவுண்ணும் மாதங்களான-28, நாட்கள்-24 அக்காலங்களில் அவன் தரும் பலன்களைச் சோதிக்குமிடத்து சந்தோஷம் பிராமணரால் தனமுண்டாதலும், ராஜாக்களால் சந்தோஷமும், தான் தொடுத்த வேலைகள் யாவும் ஜெயமடைதலும், பெண்களைக் கலியாணம் செய்துக்கொள்ளுதலும் உண்டாகும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன புக்திநாதனுன குரு 6-8-12-ல் இருந்தாலும் அவ்வீட்டோன் பார்வை பெற்றாலும் நற்பலனைத் தரமாட்டான். கிரகநாசமும், நோய் முதலிய துன்பங்களையே தருவானென்றும் கூறுக.

வடிவுளவிராகிற்காரி மாதமுப்பத்துநான்கும்
படிமிசைநாளாறுக்கும் பகைமனத்திடர்வியாதி
முடியிலாவழக்குச்சண்டை மூண்டிடும்வாதம்பித்தம்
இடியுறுசெங்கைசோதி சதயமுமிகுதிநோயே.

இ-ள். கறுத்த நிறத்தையுடைய இராகுவின் திசையில் சனி யுண்ணும் புக்தி மாதங்களான-34, நாட்கள்-6 ஆகும். அக்காலங் களில் அவன் தரும் பலனைச் சோதிக்குமிடத்து சத்ருத்துவமும் தைரியகுறைவும், ரோகமும், நீங்கப்பட மாட்டாத விவகாரங்களும், சண்டையும், தன் தேகத்தில் பித்தம் என்னும் வியாதியும், அவ னுக்கு ரோகத்தைத்தரும் நக்ஷத்திரங்களை சோதிக்குமிடத்து சதயம்-சுவாதி-திருவாதிரை என்னும் 3-நக்ஷத்திரங்களிலுண்டாகும் எனவும், அழகுவாய்ந்த பெண்ணே! சொல்வாயாக எ-று.

வி-ரை. புக்திநாதனன சனி லாபம் உச்சம் சுபகிரகங்களின் அங்கிசம் முதலியவைகளி லிருப்பாரானல் ஆபரணபூஷண லாபம், விஷ்ணுபக்தி, பட்டாபிஷேகம், ராஜயோகத்திற்குச் சமமானயோக மும் அநுபவிப்பான். பாவிகளுடன்கூடி 6-8-12-ல் இருப்பானுகில் மேற்சொன்ன பலன்களைத் தவிர்த்து துன்பபலனையே தருவான்.

வந்திடுமிராகிற்புந்தி மாதமுப்பதின்மேனுட்கள்
முந்தியமூவாருக்கு முயற்சியாம்வாழ்வுண்டாகும்
சிந்தையிற்றெய்வபத்தி சிலபொருள்வந்துசேரும்
விந்தையாமழலைசேரு மேலுறுபகையுண்டாமே.

இ-ள். மேற்சொன்ன இராகு மகாதிசையில் புக்திநாதனுக மாறிவரும் புதனுண்ணும் மாதங்களான முப்பதும், நாட்கள் பதி னெட்டிலும் அவன் தரும் பலன்களைச் சோதிக்குமிடத்து எக்காரியங் களையாவது ஆரம்பித்தலும், அதன் மூலமான நற்பலனும், தன் மனத்தில் கடவுளை தியானித்தலும், பற்பல தனங்களையடைதலும், அழகுடைய புத்திருண்டாதலும், கொடிய சத்ருத்துவமும் உண் டாகும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன புக்திநாதனன புதன் 2-11 இவ்விடங் களிலிருந்தாலும், அவ்விட்டோர் பார்த்தாலும், மேற்சொன்ன பலனி னும், இன்னுமதிகமான சவுக்யமும் இஷ்டபோஜனமும், புஷ்ப அலங்காரமும் உண்டாகும். 6-8-12 இவ்விடங்களி லிருப்பாரானல் களத்திர ரோகமும், சூரியனுல் பார்க்கப்பட்டால் தனவிரயமும், கஷ்டம் முதலிய துற்பலனும் அடைவானென்று கூறுக.

மருவியராகிற்கேது மாதமீராறுமிக்க
கருவியநாண்மூவாறு கடிவிஷத்தாலேஜபம்
தருமகவுக்குப்பீடை சரீரமேவீங்குநோயாம்
அரிவைபர்தமக்குத்துன்ப மாச்சாலச்சமாமே.

இ-ள். இராகு மகாதிசையில் புக்திநாதனுக மாறிவரும் கேது உண்ணும் மாதம்-12, நாட்கள்-18 ஆகும். அக்காலங்களில் அவன் தரும் பலனைச் சோதிக்குமிடத்து விஷஜெந்துவின் கடியால் துன்ப மும், தன் புத்திரவர்க்கங்களுக்கு இடையூறும், தன் உடல் ஸ்தூலிக்

கத்தக்க வீக்கத்தால் உபத்திரவமும், தன் மனைவிக்குக் கஷ்டமும், ராஜாக்களினால் பயங்கரமும் உண்டாகுமென்றும் கூறுவர் எ-று.

வி-ரை. மேற்சொன்ன புக்திநாதனாகிய கேது சுகாதிபதியுடன் கூடி இருந்தால் முத்துப் பல்லக்கு சேர்தலும், சுபருடன் கூடினாலும் பார்க்கப்பட்டாலும் அரசனுக்குச் சமானமானவனென்று கூறுவர்.

மன்னியவிராகில்வெள்ளி மாதமேமுப்பத்தாறும்
பொன்னுடன்பொருளுஞ்சேரும் பூஷணமிகுதியுண்டாம்
அன்னியமங்கைசேர்வ ளரசரால்மகிழ்ச்சியுண்டு
பின்னும்வஞ்சனையாற்றுன்பம் பீடைவந்தகன்றுபோமே.

இ-ள். இராகு மகாதிசையில் புக்திநாதனாக மாறிவரும் சுக்கிரனுண்ணும் மாதங்கள்-36. அக்காலங்களில் அவன் தரும் பலன்களைச் சோதிக்குமிடத்து பொன் நாணயங்கள் முதலிய பற்பல செல்வ விருத்தியும், நகைகள் அனேகமாய்ச் சேர்தலும், அழகிய பெண்கள் வந்தடைதலும், ராஜரீகம் புரிபவரால் சந்தோஷமும், தன்னைப் பிறர் மோசம் செய்வரென்றும், ஆனால் பலவித கஷ்டங்களும், நஷ்டங்களும் உண்டாகி நிவர்த்தியாகும் என்றும் கூறுவர் எ-று.

வி-ரை. புக்திநாதனாகிய சுக்கிரன் சுபனாக இருக்கினும், அவன் நின்ற க்ஷேத்திரத்திற்குத் தக்கபடியே, பலனையளிப்பானாகையால், அவன் தன் சொக்ஷேத்திரத்திலும் உச்சனாகவும், சுபகிரகங்களுடன் கூடியுமிருந்தால் நற்பலனைத் தருவானேயொழிய கொடியக்ஷேத்திரங்களிலும் தீயகிரகங்களுடனும் கூடியிருப்பானாகில் அவன் நற்பலனைத் தரான்.

ராகுவிலிரவிமாதம் பத்துடன்நாண்மூவெட்டும்
வாகுறுகுலத்தார்சண்டை மன்னராற்றஞ்சமாகும்
சேகுறுமனையாள்பிள்ளை பிறுதுருசினுகதாகும்
ஆகமூவிதத்தாலைய மிருப்பிடமகலுந்தானே.

இ-ள். இராகு மகாதிசையில் புக்திநாதனாகவரும் சூரியனுண்ணும் மாதங்களான-10, நாட்கள்-24. அக்காலம் அவன் தரும் பலனைச் சோதிக்குமிடத்து அரசர்களால் ஜீவனமுண்டாதலும், தன் சுயஜென விகாதமும், தனக்கு உதவியாளாகிய மனைவி புத்திரர் சகோதிரர் இவர்களால் மனவியாகூலமும், கஷ்டமும் உண்டாகும். மேற்சொன்ன 3-விதத்தாராலேயே தன் வீட்டைவிட்டு அன்னியவீடு போகவும் செய்யும் எ-று.

வி-ரை. ராகுதிசையில் புக்திநாதனாக வரும் சூரியன் உச்ச சொக்ஷேத்திரம் பெற்றிருந்தால் ராஜாக்களால் அபிமானம் உண்டாகும். அன்றியும் மேற்குதிசையில் சுபகார்யார்த்தமாய் பிரயாணம் செய்யவும் நேறும் என்றும் கூறுவர்.

உதித்திடுமிராகிலிந்து னுயர்திங்களீரோன்பானும்
மதித்திடும்பந்துநாச மனைவியார்பொருளுஞ்சேதம்

கதித்திடுமத்தமோணத் திசையினிற்கால்கணேவு
விதித்திடுந்தலம்விட்டேகும் விஷத்தினிற்றுன்பமாமே.

இ-ள். இராகு மகாதிசையில் புக்திநாதனுக வரும் சந்திரனுண்ணும் மாதங்களான பதினெட்டிலும், அவன் தரும் பலனைச் சோதிக்குமிடத்து தனக்குதவியாக இருக்கும் உறவினருக்கு தோஷங்களும், தனச்சேதம் தன் மனைவியாலுண்டாதலும், அஸ்தம் திருவோணத்திற்குறிய வடக்கு மேற்கு திசையில் பிரயாணம் செய்து தன் பாதம் நோகுதலும், தன் பூர்வோத்திரமாயிருந்த இல்லத்தை விட்டு போதலும், விஷவகையால் கஷ்டங்களுமுண்டாகுமென்றும் கூறுவர் எ-று.

வி-ரை. புக்திநாதனுன சந்திரன் ஜெனனகாலங்களில் திசாநாதனுடனும், 5-ஆம் வீட்டோனுடம்கூடி அவ்விருவரும் பாவகிரகங்களாகவே இருக்கில் மேற்சொல்லியதைவிட மேலான துற்பலனை விளேயும், உச்ச சொக்ஷேத்திரம் பெற்றுலும், 3-10 இவ்விடங்களிலிருந்தாலும், மேற்சொன்ன துற்பலன் யாவும் நீங்கி நற்பலனை விளேயும்.

இன்புறுமிராகிற்செவ்வாய் மாதமீராறுமிக்க
வன்புறுநாண்மூவாறு மக்கினிபயங்கிலேசம்
மன்பகைவிஷத்தாற்பீடை மருவுசண்டாளரின்பம்
துன்பமாங்களவுசண்டை துயர்மனேகிலேசந்தானே.

இ-ள். இன்பத்தைத் தரும் ராகு மகாதிசையில் புக்திநாதனுக மாறிவரும் குஜனுண்ணும் மாதம்-12, நாட்கள்-18, அக்காலம் அவன் தரும் பலன்களாவன நெருப்பால் துன்பமும், மனவியாகூலமும், ராஜாக்களால்விரோதமும், விஷங்களால் துன்பமும், தன்னை எதிர்த்த கொடியவர்களுக்குச் சந்தோஷமும், பலவித துன்பங்களும், தன் வீட்டில் திருடுபோதலும், வாக்குவாதமும், தன் இல்லத்திலேயே துயரங்களும், சந்தேகங்களும் உண்டாகும் எ-று.

வி-ரை. ஜெனன காலங்களில் அங்காரன் உச்சனுகவும், சொக்ஷேத்திரனுகவும், சுபகிரகங்களால் நோக்கம் பெற்றும், இருந்தால் அவன் புக்தியில் சவுக்கியங்களும், பூமிலாபமும், நாற்கால் ஜீவலாபமும், ராஜபேட்டியும், தேவ பிரசாதமுதலிய நற்பலனையும் தருவாரென்றும் கூறுவர்.

குரு திசாபுக்தி பலன்

மருவியபொன்னின்மன்னன் மாதமையைந்துநாளோ
ஒருபதினெட்டினுக்கு முயர்பிரதாபமிக்க
பொருளுடன்தானியங்கள் பூஷணம்பூமிலாபம்
அரிவையர்சேர்த்தியின்ப மரசரான்மகிழ்ச்சியாமே.

இ-ள். குரு மகாதிசையில் தன் சுயபுக்தியான வருடம்-2, மீ-1, நாட்கள்-18, அக்காலம் அவனுடைய வேண்டிய பலனென்னவெனில் கௌரவம் உண்டாதலும், தனச்சேர்க்கையும், தான்யபலிதமும், ஆபரண விருத்தியும், மண் மனே லாபமும் உண்டாவதோடு ஸ்திரீ சேர்க்கையால் சந்தோஷங்களும், நற்பலனையும் விளைப்பான் எ-று.

வி-ரை. ஜெனனகாலங்களில் குரு உச்சம் - ஆக்ஷி - கேந்திர கோணம் இவற்றிலிருந்தால் மேற்சொல்லிய பலனைவிட மேன்மையான பலனே விளையும். நீச்சராகி 6-8-12-இவற்றில் இருந்தால் தாயாதி விரோதமும், தானிய நாசமும், அன்னியதேசம் செல்லுதலும், அபமிருத்து தோஷம் முதலிய பலனே விளக்கும் என்றும் கூறுவர்.

பொருந்தியகுருவிற்காரி புகழ்திங்களாகும்பத்து
வருந்தியநாளீராறும் வாகனம்பொருளும்வாய்க்கும்
திருந்தியகால்கைவாதஞ் சேயிழைதனக்குத்துன்பம்
இருந்திடம்வெற்றியில்லே யிடர்வந்துநீங்குந்தானே.

இ-ள். குருமகாதிசையில் புக்திநாதனாக மாறிவரும் சனியுண்ணும் வருஷம்-2, மாதம்-6, நாள்-12, அக்காலம் அவன் தரும் பலனைச் சோதிக்குமிடத்து நாற்கால்ஜீவ சேர்க்கையும், தனச் சேர்க்கையும் உண்டாவதோடு கால்கரங்கள் முதலிய பூட்டுகளில் முடக்குவாதமும் உண்டு. தன் பெண்சாதிக்கும் பற்பல கஷ்டங்களும், தன் சுயக்ஷேத்திரத்தில் வெற்றி முதலிய சுககுறைவென்றும், பலவித கொடிய பலன் உண்டாகி பரிகாரமாகுமென்றும் கூறுவர்.

வி-ரை. மேற்சொன்ன சனி ஜெனனகாலங்களில் 11-5-9-இவ்விராசியில் பலம் பெற்ற கிரகங்களுடன்கூடி இருப்பானாகில் அவன் முன்சொன்ன கொடிய பலனைத் தராது, நற்பலனைத் தருவான். நீச்சம் பெற்றும் 6-8-12-இவ்விராசியிலும் சம்மந்தப்படுவானாகில் அதிக கஷ்டமும், களத்திர புத்திர நாசமும் உண்டாகுமென்றும் கூறுவர்.

மருவியகுருவிற்புந்தி மாதமோவிருபத்தேழும்
அருகுறுநாளோராறு மாடலும்பாடல்ஞானம்
வருவதுபூசையாலும் வளமுளமாதர்மைந்தர்
பெருகிடுஞ்செல்வமன்னர் பெருமையும்புகழுண்டாமே.

இ-ள். பெருமையும் பிரக்யாதியையுமுடைய குருதிசையில் புத்திநாதனாக மாறிவரும் புதனுண்ணும் வருஷம்-2, மாதம்-3, நாட்கள்-6, அக்காலம் அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து சந்தோஷங்களால் கொண்டாடுதலும், சங்கீதங்களைப் பழகிக்கொள்ளுதலும், தத்துவ சாஸ்திரப் பயிர்ச்சி செய்தலும், தேவாலயங்களுக்கு அபிஷேகித்தலும், வளமைபொருந்திய களத்திர புத்திர விருத்தியும்,

தனவிருத்தியும், மன்னரால் பெருமையும், சந்தோஷம் உண்டாகும் எனவும் கூறுவர் எ-று.

வி-ரை. புதன் நின்ற ராசிக்குடையோன் நீச்சம் பெற்றாலும், அஸ்தமயம் பெற்றிருந்தாலும், பாவகிரகங்களுடன் கூடியிருந்தாலும், திரேக பீடையும், புத்திர பீடையும், களத்திர புத்திர நாசமும் உண்டாகும். புதன் கேந்திரத்திலும், கோணங்களிலும், ஆக்ஷி உச்சம் பெற்றும், சுபரால் பார்க்கப்பட்டும் இருந்தால் பால் அன்னம் புசித்தலும், நினைத்த காரியசித்தியும், களத்திர புத்திர சந்தோஷமும் உண்டாகுமென்றும் கூறுவர்.

பரவியகுருவிற்கேது பதினொருமதிநாளாறும்
திரமுளமாதர்க்கேடு திரிச்சலாந்தேசமெங்கும்
உரமுளஉற்றார்மற்றை யுறவினர்பகையதாகும்
நிரவியமனையாடன்னு னிலைவிட்டுப்போவதாமே.

இ-ள். உலகெங்கும் போற்றும் குரு மகாதிசையில் கொடியோனை கேது உண்ணும் மாதங்களான-11, நாட்கள் 6-லும், அவன் தரும் பலன்களைச் சோதிக்குமிடத்து தனக்குச் சுகத்தைத் தரும், பெண்களுக்கு கெண்டாதி தோஷங்களும், அன்னிய தேசங்களில் சஞ்சாரம் செய்தலும், தன் பந்துஜெனமும், அன்னிய ஜனமும் விரோதமாதலும், தாய் தந்தை விரோதமும், தன் களத்திரத்தால் தன் சுயக்ஷேத்திரத்தை விட்டு அன்னியதேசம் போகவும் நேறும்.

வி-ரை. ஜெனன காலங்களில் கேது சுபகிரகங்களுடன் கூடில் அவன் புக்தியில் அர்ப்பபலனை விளைவிப்பான். பாவியுடன்கூடி 6-8-12-ல் இருந்தால் களத்திரநாசம், பயம் முதலிய தீயபலனை விளையும் என்று சொல்லுக.

பரவியகுருவில்வெள்ளி மாதமுப்பத்திரண்டு
நிரைபரிகட்டுவர்க்கம் நிலைமையாம்பொருளுஞ்சேரும்
புரியினிற்கன்னிமாதம் பூமியும்போகமுண்டாம்
குரைகடற்சுற்றத்தோடு குணமுடன்வாழ்வதாமே.

இ-ள். குருமகாதிசையில் புத்திரநாதனுக வரும் சுக்கிரனுண்ணும் வருடம்-2, மாதம்-8, அக்காலம் அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து பலத்தைப் படைத்த யானை குதிரை முதலிய வாகனங்களை அடைதலும், தனநிக்ஷேபமும், அந்த திசையில் புரட்டாசிமாத காலங்களில் பூமி வாங்குதலும், சிற்றின்பத்தை அனுபவித்தலும், இக்கடல் சூழ்ந்த உலகின்கண் அவன் பந்து ஜெனங்களோடு சந்தோஷமாய் வாழ்ந்திருப்பான் என்றும் கூறுவர் எ-று.

வி-ரை. மேற்சொன்ன சுக்கிரன் ஆக்ஷி-உச்சம்-திரிகோணம் இந்த ராசியில் இருப்பானகில் அவன் புக்தியில் யானை குதிரை

லாபமும், நாற்கால் விருத்தியும், கலியாணம் செய்துக்கொள்ளுதலும், நடக்கும். 6-8-12-ல் இருந்தால் பந்துஜனக் கலகமும், களத்திர பீடையும்; இராஜ நிஷ்டூரமும் உண்டு.

உலகுறுகுருவிற்பானு வொன்பதுநாண்மூவாறும்
நலமுறுமர்த்தலாபம் நாடியகருமங்கூடும்
பிலகுறைநெருப்பிற்காற்றிற் பிணிபலர்பகையும்பீடை
கலகமாமகத்திற்பின்பு காரியநன்மையாமே.

இ-ள். உலகத்தோர் யாவரும் கொண்டாடத்தக்க குருமகா திசையில் ஆயிரங்கண்ணோனை சூரியன் உண்ணும் மாதங்கள்-9, நாட்கள்-18, அக்காலங்களில் அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து நன்மையும், அர்த்த லாபமும், தான் தொடுத்த வேலை ஜெயமடைதலும், அக்கினியாலும் காற்றினாலும் பல கஷ்டமும், தன் வீட்டிலுள்ள பலருக்கு வியாதியும், சத்துருத்துவ கஷ்டமும், தன் இல்லத்தில் அனேக கோள் உண்டாதலும், அந்திய காலங்களில் தான் தொடுத்த காரியம் கைகூடுதலும் உண்டாம் எ-று.

வி-ரை. சூரியன் கேந்திரகோணம் பெற்றிருந்தாலும், அஷ்டமாதிபதி பார்த்தாலும் முதலில் ஜுரம், சிரநோய், தன் வீட்டு லக்ஷிமிகரக் குறைவு, பாவம் செய்ய எண்ணம், கட்டுதிட்டம் தெய்வ ஸ்துதி யுண்டு.

நின்றதோர்குருவிலிந்து நேர்பதினாறுமாதம்
வென்றிநற்சிவிகைமுத்து வெண்குடைபணியுமுண்டாம்
அன்றுநன்மனையாண்மைந்த ரறிவுளோர்பொருளுஞ்சேரும்
என்றுநற்கருமமெல்லாந் தெய்வத்தாலெய்துந்தானே.

இ-ள். குருமகாதிசையில் புக்திநாதனாக வரும் சந்திரன் புசிக்கும் திங்கள்-16, அக்காலம் அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து வெற்றியும், சிவிகை முத்து லாபமும், வெண்சாமரம், குடை முதலியவைகளும், பூஷணங்கள் விருத்தியாதலும், களத்திர புத்திர சந்தோஷமும், உத்தமர் நேசமும், தனச் சேர்க்கையும், தேவானுபலத்தால் அவனுக்கு எல்லா நன்மையும் உண்டு எ-று.

வி-ரை. மேற்சொன்ன சந்திரன் 6-8-12 இவ்விடங்களிலிருந்தால் தனநாசம், கௌரவக்குறைவு, ராஜாக்களால் கோபம், பீனிசரோகம் உண்டாகும். 9-5 இவ்விடங்களிலிருந்தால் நற்பலனேயுண்டு.

பாங்குளபொன்னிற்செவ்வாய் பதினொன்றுமதிநாளாறும்
தீங்குறுவினைகளுண்டாம் திருடராற்றழலாற்றுன்பம்
ஆங்குறுமுற்றார்சேத மல்லதுபிணியுமுண்டாம்
நீங்கியேநிலைவிட்டேகும் நினைத்ததுமுடிந்திடாதே.

இ-ள். குருமகாதிசையில் புக்திநாதனாக வரும் குஜன் உண்ணும் மாதம்-11, நாட்கள்-6 அக்காலம் அவன் தரும் பலனைச்

சோதிக்குமிடத்து கொடுமையை விளைவிக்கும் துன்பங்களும், தன் தாய் தந்தையர் முதலிய உறவினர்களுக்கு கெண்டாதி தோஷமும் இல்லையேல் கெண்டத்திற்குச் சமதயான ரோகமும், தன் வீட்டை விட்டுப் பேருதலும், தான் தொடுத்த வேலை அபஜெயமும் உண்டாகு மென்று கூறுவாயாக எ-று.

வி-ரை. மேற்சொன்ன குஜன் ஜெனனகாலங்களில் ஆக்ஷி உச்ச மாயும், கேந்திரம் கோணங்களிலும் இருந்தால் சொர்ப்பலாபமும், முற்பாதியில் தனநாசமும், பிற்பாதியில் தனதான்ய லாபங்களும், தன் வீட்டில் கலியாண சம்பவங்களும் உண்டாகும்.

மாதங்கக்குருவில்ராகு மாதமோரிருபத்தெட்டும்
ஓதியநாண்மூவெட்டு முடன்பகைசிறுவழக்குச்
சேதமாம்பொருள்விரோதஞ் சேயிழைதனக்குத்துன்பம்
சூதுகண்மிகவுண்டாகுந் தொடர்ந்திடுஞ்செல்வம்போமே.

இ-ள். மருத்துவம் பொருந்தியவரெனப் பெயர்விளங்கும் குரு மகாதிசையில் ராகுவுண்ணும் வருடம்-2, மாதம்-4, நாட்கள்-24 இக்காலங்களில் அவன் தரும் பலனைச் சோதிக்குமிடத்து கொல்லத் தக்கச் சத்ருத்துவமும், கொஞ்சம் விவகாரங்கள் உண்டாதலும், தன் கைப்பொருள் நாசமும், சத்ருத்துவமும், களத்திரத்திற்குப் பற்பல கஷ்டமும், அனேகர் வஞ்சிப்பதும், தன் பொக்கிஷத்திலுள்ள தனம் யாவும் விரயமாகும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன புக்திநாதனுகிய இராகு சுபனுடனும், அசுபனுடனும்கூடி, கேந்திர கோணங்களிலிருந்தால் தாயாதிஜன விரோதமும், அந்தியில் கஷ்டமும், மத்தியில் வெகு சவுக்கியமும், பற்பல நன்மையும் உண்டாகும்.

சனி திசாபுக்தி பலன்

காரியிற்காரிமாதங் கருதியமுப்பத்தாறும்
வீரியமூன்றுநாளு மெய்யினில்வியாதிதோன்றும்
சீரியவடிமைமைந்தர் செல்வமுங்குறையும்பின்னும்
கூறியவுறவுதன்னுற் கொடும்பகைதானுண்டாமே.

இ-ள். சனிமகாதிசையில் தன் சுயபுக்தியான வருடம்-3, நாட்கள்-3 ஆகும். அக்காலம் அவன் தரும் பலனைச் சோதிக்குமிடத்து திரேகத்தில் வியாதியுண்டாதலும், தன் ஆளடியார் குறைதலும், புத்திரர் நாசமாதலும், தனம் விரயமாதலும் உண்டு. தனக்குப் பகைவர்களும், தன் சுயபந்துக்களே தனக்குச் சத்ருவாகவும் இருப் பார் என்றும் கூறுவாயாக எ-று.

வி-ரை. மேற்சொன்ன சனி புக்திக்குறிய பலனை ஒவ்வொரு வருக்கும் தன் இராசி கிரகப்படி இருக்கும் தாராதரமறிந்து கூறுதல்

வேண்டும் எப்படியெனில்? சனி தன் சுயவீட்டிலும், 4-7-10-ஆம் ஸ்தானங்களிலும், சுபகிரகங்களின் அங்கிசையிலுமிருக்க நல்ல கீர்த்தியும், குதிரை யானை முதலிய வாகனங்களும், ராஜாக்களால் பற்பல அனுகூலங்களும் உண்டு.

பங்கினிற்புந்திமாத நாலெட்டுநாளொன்பானும்
இங்கிதகல்விஞான மெழிலுடைப்பொருளுஞ்செல்வம்
மங்கையர்மருவிகூடு மைந்தருஞ்சுற்றமுண்டாம்
பொங்கமாம்மன்னராலே புகழ்ந்துவாழ்ந்திருப்பர்தாமே.

இ-ள். சனிமகாதிசையில் புசிக்க வரும் புத்திநாதனென்னும் புதனுண்ணும் வருடம்-2, மீ-8, நாள்-9 ஆகும். அக்காலங்களில் அவன் தரும் பலனைச் சோதிக்குமிடத்து தாழ்வடையாத வித்யா அப்பியாசமும், பூர்வக்கியானமும், மேன்மையான பற்பல திரவியமும், தனங்களும், தன் வீட்டில் பெண்ணால் கலியாணம் கூடுதலும், புத்திரப்பே றுண்டாதலும், உறவினர் கூட்டுறவு உண்டாதலும், மன்னர்களால் சந்தோஷமும், சவுக்கியமும் உண்டாகுமென மேலோர் கூறுவர் எ-று.

வி-ரை. மேற்சொன்ன புக்திநாதனாகிய புதன் மிதுனம் கன்னி 11-9 இவ்விடங்களிலிருந்தால் மேற்சொல்லிய பலனுடன் இன்னும் அனேக நற்பலனை விளையும். 6-8-12 இவ்விடங்களில் பாவகோட்களுடன்கூடில் நற்பலனைத் தரான்.

படிமிசைசனியிற்கேது பதின்மூன்றுமதிநாளொன்பான்
கடியதோர்வலக்கால்வாதங் காணுமேபித்தரோகம்
இடிவருமைந்தனாலே விஷபயமர்த்தநாசம்
கொடியிடையவராற்றுன்பங் கோளினாற்கலகமாமே.

இ-ள். சனிமகாதிசையில் கேது உண்ணும் வரு-1, மீ-1, நாட்கள்-9, அக்காலங்களில் அவன் தரும் பலனைச் சொல்லுமிடத்து முக்கிய உருப்பான வலதுகாலில் வாதம் உண்டாதலும், மேகசம்மந்தமான பித்தம் அதிகமாகுதலும், தன் புத்திரனால் கொடியதுன்பம் உண்டாதலும், விஷஜெந்துக்களால் ஆபத்தும், அர்த்தநாசமும், பெண்களால் பல கஷ்டங்களும், பிறரால் உண்டாகும் கலக வார்த்தையால் சண்டையும் உண்டாகும் எனவும் கூறுவார் எ-று.

வி-ரை. மேற்சொன்ன கேது எந்த லக்கினமாக விருந்தாலும், அந்த லக்கினாதியுடன் கூடியிருந்தால் அவன் புக்தி ஆதியில் சவுக்கியமும், கெங்காதீர்த்த ஸ்தானமும் கிடைக்கும். 5-6-8-9-12 இவ்விடங்களிலிருந்தால் அபமிருத்து உண்டு. இதற்கு சனி விரதம் 48-நாள் இருக்கில் பரிகாரமாம்.

முனிவுறுசனியில்வெள்ளி மாதமோமுப்பத்தெட்டு
இனியதோர்பணிநல்லார்த மின்பமும்வெற்றியுண்டாம்

> வனிதையர்சேர்வர்லாப மக்களுஞ்சுற்றமுண்டாம்
> தனியொருபகையுமுண்டாந் தன்னையும்வெல்லலாமே.

இ-ள். கோபத்தையுடைய சனிமகாதிசையில் சுக்கிரனுண்ணும் ஞூ-3, மீ-2 இக்காலங்களில் அவன் தரும் பலனைச் சோதிக்குமிடத்து நல்ல மேலான ஆபரணங்களை யணிதலும், உத்தமர்களால் சந்தோஷமும், ஜெயமும், ஸ்திரீகள் கூடுதலும், ஆதாயமும், புத்திரப்பேரும், உறவினர் உண்டாதலும், நூதனமாக சத்ருத்துவம் உண்டாதலும், மாரணம் முதலிய காரியங்களைச் செய்யவும் அதிகாரம் வாய்ந்தவனென்றும் கூறுவர் எ-று.

வி-ரை. ஜெனன காலங்களில் சுக்கிரன் 2-7-க்குடையவனாக இருக்க களத்திர சந்தேகமும், குன்மவலியும் உண்டாகும். 6-8-12-ல் மூடம் பெற்றிருந்தால் களத்திரநாசம், தனவியாதி, மனவிறயம் முதலிய வைகள் உண்டு.

> பாவியசனியிற்பானு பதினொன்றநாளீருரும்
> உரமுளரத்தமேக முதரத்திற்சூலைகண்ணோய்
> திரமுளமனையாண்மக்கள் சிறுத்திடுநோயினாலே
> காமதுவெரிவாங்காலுங் கடுவலிவாதமாமே.

இ-ள். மேன்மையைப் படைத்த சனிமகாதிசையில் சூரியன் உண்ணும் மாதம்-11, நாட்கள்-12, இக்காலங்களில் எவ்விதததிலும் நீங்காத மேகசம்பந்த உதிரப் பெருக்கும், தொந்தி முதலிய இடங்களில் சூலை என்னும் உஷ்ணமும், நேத்திர ரோகமும், தனக்குச் சொந்தமான பெண்டிரும் புத்திரரும் சரீரம் மெலிந்து வியாதியால் அவஸ்தைப் படுதலும், அஸ்தங்களில் உஷ்ணமும், காலில் கொடிய நோயும், வாதமும் உண்டாகுமென்று கூறுவர் எ-று.

வி-ரை. சூரியன் ஜெனனகாலங்களில் சுபகிரகங்களுடன் கூடியும், பார்க்கப்பட்டும் இருந்தால் மேற்சொல்லிய கொடிய பலனைத் தாராது. நற்பலனையே தருவான்.

> மதமுறுசனியிலிந்து மாதம்பத்தொன்பதுக்கும்
> விதமதாங்கலகப்பீடை வீட்டினில்வழக்குசண்டை
> பதனமாம்பணிபூணாரம் பல்வளம்பொருளுஞ்சேதம்
> அதனமாந்தலங்கள்விட்டே யவதியால்மீள்வராமே.

இ-ள். பலம்படைத்த சனிமகாதிசையில் சந்திரன் உண்ணும் வருடம்-1, மாதம்-7, அக்காலங்களில் அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து பற்பல விதங்களாலும் கோள் உண்டாதலும், தரித்திரமும், தன் இல்லத்திலேயே சச்சரவு எற்படுதலும், விவகாரங்களும், தன் ஜீவியதத்திற்கென்று வைத்திருக்கும் பூஷணங்களும், தான் அணியும் அணிபணிகளும், இன்னும் பலதனம் பொருள் இவைகள் தன் கைவிட்டுப்போதலும், கொடிய கஷ்டங்களால் அவஸ்தைப்பட்டு

தன் சுயஸ்தலத்தைவிட்டு அன்னிய ஸ்தலத்திற்குப் போவான் என்றும் கூறுவர் எ-று.

வி-ரை. கடகத்திற்கு ஆக்ஷிநாதனான சந்திரன் பாவகோட்க ளுடன் கூடியிருக்கில் களத்திர நாசம் உண்டாதலும், அல்லது மாதுரு நாசம் உண்டாதலும், பீடை முதலிய துற்பலனும், 6-8-12-இவ்விடங்களில் பலம்பெற்று இருப்பானாகில் உத்தம போஜனமும், சௌக்கியமும் உண்டாகும்.

பலனிலாச்சனியிற்செவ்வாய் பதின்மூன்றுநாளொன்பானும்
குலங்களிலீனமிக்க கொடும்பகைபழியுங்காட்டும்
அலைந்திடுந்தேசமெங்கு மனைவரும்விரோதமாவார்
தலங்களிற்பொன்னாற்சோரந் தலம்விட்டுப்பிரியுந்தானே.

இ-ள். நற்பலனைத் தரப்படமாட்டாத சனிமகாதிசையில் குஜன் உண்ணும் வருடம்-1, மாதம்-1, நாட்கள்-9, அக்காலங்களில் அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து தன் குலாசாரக்குற்றம் உண்டாத லும், கொடுமையான சத்துருத்துவமும், நிந்தை உண்டாதலும், அன்னிய தேசங்களில் சென்று உலாவுதலும், எல்லா ஜனங்களும் தனக்குச் சத்துருத்துவமாகவே இருத்தலும், தன் வீட்டில் பொன் முதலிய நாணயங்கள் களவு போதலும், தன் க்ஷேத்திரத்தைவிட்டு அன்னிய க்ஷேத்திரங்களுக்குச் செல்லுதலும், துற்பலனுமே விளையும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன குஜன் லக்கினாதியுடன் கூடி 3-6-11-இவ்விடங்களில் உச்சம் பெற்றால், சந்தோஷம், வஸ்திரலாபம், இராஜ உத்தியோகம், தனலாபம், பாக்கியம் இவைகள் உண்டாதலு மாம். லக்கினாதிபதியே குஜனாகில் நூதன மண்மனை சேர்க்கை யும், 7-8-ஆம் ராசிக்குடையோனாகில் சத்துருபயமும் உண்டாகும்.

முன்னமேசனியில்ராகு முப்பத்துநான்குமாதம்
மின்னுநாளாறிற்சேதம் விஷமதுதூரத்தித்தீண்டும்
இன்முஞ்சரீரமெங்கு மேறுதவியாதியுண்டாம்
அன்னியர்பகையதாகும் மல்லலுமிகுதியாமே.

இ-ள். முன்சொல்லிய சனிமகாதிசையில் புத்திநாதனாக வரும் இராகு உண்ணும் வருடம்-2, மாதம்-10, நாட்கள்-6, அக்காலம் அவன் தரும்பலனைச்சோதிக்குமிடத்து செம்புமுதலியநாணயங்களும் பாத்திரங்களும் விரயமாதலும், விஷத்தையுடைய அரவம் தூரத்திக் கடித்தலும், இன்னும் அளவிடமுடியாத நோய் சரீரத்தில் உண்டா தலும், பந்துவல்லாதார் விரோதமாகுதலும், விசேஷ அலைச்சல் உண் டாகுமென்றுங் கூறுவர் எ-று.

வி-ரை. மேற்சொன்ன இராகு லக்கினத்தில் இருந்தாலும், லக்கினாதியுடன் கூடினாலும், 3-6-10-11-இவ்விடங்களிலும் ரிடபம்-

கடகம்-மகரம் இவ்விராசிகளிலும் இருப்பானாகில் இராஜாக்களால் சன்மானமும், வஸ்திர பூஷணமும் உண்டாகும்.

முன்புருசனியின்மன்னன் முப்பத்துநாளீருரும்
அன்புறுமடியார்சேர்வ ராடையாபரணங்கைமேல்
இன்பமாமரசராலே யெண்ணியகருமமாகும்
மின்கொடியுடனேசுற்ற மிகுதியாம்பலனுண்டாமே.

இ-ள். முன்சொல்லிய சனிமகாதிசையில் குருவுண்ணும் காலமான வருடம்-2, மாதம்-6, நாட்கள்-12, அக்காலங்களில் அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து சந்தோஷங்கள் உண்டாகுதலும், சில வேலையாட்கள் வைத்து வேலை வாங்குதலும், வஸ்திரங்கள் உண்டாதலும், பூஷணங்கள் விருத்தியடைதலும், இராஜாக்களால் சந்தோஷமுண்டாதலும், தான் தொடுத்த காரியம் ஜெயமடைதலும், களத்திரமும், சுற்றத்தாரும் வந்து சேர்தலும், இன்னும் அநேக பலன்களையும் உண்டாக்குமென்றுங் கூறுவர் எ-று.

வி-ரை. மேற்சொன்ன குஜன் ஜெனனலக்கினத்திற்கு 2-7-க்குடையோனாகி இருந்தால் அந்த ஜாதகனுக்கு அபமிருத்து தோஷம் உண்டாகும் என்றும், அதற்கு துர்க்காதேவி பூஜைசெய்யின் நிவர்த்தியாகுமென்றும் கூறுவர்.

புதன் திசாபுக்தி பலன்

வலம்புரிபுதனிற்புந்தி மாதமோரிருபத்தெட்டும்
துலங்குநாண்மூவொன்பானுஞ் சுற்றமுந்துணையுமுண்டாம்
பலந்தருமர்த்தலாபம் பாக்கியமிகவுமுண்டு
நலம்பெறுஞானங்கல்வி நாடியகருமமாமே.

இ-ள். யாவரும் வலம்வந்து தொழுது வணங்கும் மகாவிஷ்ணுவென்னும் புதன்மகாதிசையில் தன் சுயபுக்திக்குரிய வருடம்-2, மாதம்-4, நாட்கள்-27 ஆகும். அக்காலங்களில் அவன் தரும்பலன் என்னவெனில், தன் சுற்றத்தார் சேர்தலும், தனக்கு உதவிபுரிவோர் அநேகர் சேர்தலும், பலம் உண்டாதலும், குறைந்த ஆதாயம் உண்டாதலும், அநேகமான தனசம்பத்துண்டாதலும், நன்மையை விளக்கும் ஞானமார்க்கங்களும், வித்தையால் அப்பியாச விருத்தியுண்டாதலும், தான் தொடுத்த காரியம் ஜெயமடைதல் முதலிய நற்பலனும் விளையும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன புதன் சஷ்டமம், அஷ்டமம், மோக்ஷம் இவ்விடங்களில் இருக்கினும் பாவகோட்களுடனும் சகிதம்பெற்றாலும் தன்குலத்தோர் நாசமும்,குன்மவியாதியும், விலங்கு இராஜவிரோதமும், தனநாசமும் ஆகும். உச்சம்-ஆக்ஷி-கேந்திரம்-கோணம் இவற்றில் இருந்தால் மேன்மையான நற்பலனே விளையும்,

பரிந்திடும்புதனிற்கேது பதினொருமாதம்பின்னும்
வருந்துநாண்மூவொன்பானு மாதலந்தனைவிட்டேகும்
பொருந்திடும்வியாதிபீடை பொருட்சேதமுற்றார்கேடு
மருந்திடுகுணத்தாற்றுன்ப மனமதுகிலேசந்தானே.

இ-ள். யாவரும் பரிந்து கொண்டாடத்தக்க புதமகாதிசையில் கேது உண்ணும் மாதங்கள்-11, நாட்கள்-27, அக்காலங்களில் அவன் தரும்பலனைச் சோதிக்குமிடத்து பெருமைப் பெற்ற தன் சுயக்ஷேத்திரத்தைவிட்டு அன்னிய க்ஷேத்திரம்போய் சேர்தலும், எந்நாளும் நீங்காத வியாதியும், தரித்திரமும், தனவிறயங்களும், தன் தாய் தந்தையர் உறவினர் முதலியோருக்கு அரிட்டமும், துன்பமும், விஷத்தைப் புசித்தவர்போன்று கஷ்டப் படுதலும், மனச் சஞ்சலமும் உண்டாகுமெனவும் கூறுவாயாக எ-று.

வி-ரை. கேது ஜெனனகாலங்களில் சுபக்கிரகங்களோடாவது அல்லது லக்கினாதியுடனாவது கூடி சுபக்கிரகங்களால் பார்க்கப்பட்டால் அற்ப சவுக்கியமும், சொற்ப லாபமும், நாற்கால் ஜீவலாபமும், மேற்கு திசைப் பிரயாணமும், ராஜாக்கள் பேட்டியும், சரராசிகளிலிருந்தால் இன்னும் மேலான சவுக்கியமும் விளையும்.

வாசமாம்புதனில்வெள்ளி மாதமுப்பதுமோனான்கு
நேசமாமக்கட்பேறு நேரிழையுடனேயின்பம்
பாசமாஞ்சுற்றம்வித்தை பலபணிமுற்றுமுண்டாம்
தேசமேபோனார்மீள்வர் சேயிழைமணமுமாமே.

இ-ள். புதன்மகாதிசையில் வெள்ளியாகிய சுக்கிரன் வாசம், செய்யும் காலமான வருடம்-2, மாதம்-10, அக்காலங்களில் அவன் தரும்பலன்கள் என்னவெனில், சினேகிதம், புத்திர உற்பவம், தன் களத்திரத்துடன் சந்தோஷத்தோடு இருத்தலும், உறவினர்கள்மீது மிகுந்த ஆசையும், வித்தையில் முயர்ச்சியும், அனேக பூஷணங்களும், இன்னும் பல செல்வங்களும் உண்டாகும். தூரத்திலுள்ள தேசப்பிரயாணம் செய்திருந்தவர் வீடு வந்து சேர்தலும், தன் வீட்டில் பெண்ணால் கலியாணங்களும் உண்டாகும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன சுக்கிரன் ஜெனனகாலங்களில் கன்னி-விருச்சிகம் - சிங்கம் - மேடம் - தனுசு இவ்விடங்களிலிருந்தால் அவன் புத்தியில் தலைவலி காச்சல் களத்திர துவேஷம் வடக்குதிசைப்போக எத்தனம், நாற்கால் ஜீவநாசம், பாவகோட்களுடன் கூடியிருந்தால் அற்ப சவுக்கியம் உண்டாகுமென்றும் கூறுவர்.

நேருற்றபுதனிற்பானு நீடியமாதம்பத்தும்
சீருற்றநாட்களாறுஞ் செந்தழற்பயங்கிலேசம்
பாருற்றமனையாள்பீடை பகைவருமிடையூறுண்டாம்
வாருற்றகொங்கையாளே மன்னராற்றுன்பமாமே.

இ-ள். நற்பலனை விளைக்கும் புதமகாதிசையில் புக்திநாதனக வரும் சூரியனுண்ணும் மாதகங்கள்-10, நாட்கள்-6, அக்காலம் அவன் தரும் பலன்களைச் சோதிக்குமிடத்து நெருப்பினல் ஆபத்தும், மனத்தில் சந்தேகங்களும், தன் உயிர்க்கிணையாகிய களத்திரத்திற்கு பல கஷ்டங்களும், வியாதியும், விரோதம் உண்டாதல் முதலிய கொடிய பலன்கள் உண்டாவதோடு அழகுபொருந்திய பெண்ணே! ராஜாக்கள மூலமான கஷ்டங்களும் உண்டாகுமென்று கூறுவாயாக எ-று.

வி-ரை. சூரியன் ஜெனனகாலங்களில் லக்கினதிபதியால் பார்வையுற்று இருப்பானகில் சவுக்கியமும், தனலாபமும், மத்தியிலும் அந்தியிலும் நற்பலனை விளையும். சனி-குஜன்-ராகு இவர்களுடன் சேரினும் பார்க்கினும் மனவியாதியும், தேகபீடையும், சுயஜன விரோதங்களும் உண்டாவதோடு, அனேக துற்பலனும் விளையும் என்றும் கூறுவர்.

வாரணப்புதனிற்சோமன் மாதமேபதினேழுக்கும்
பூரணமானசோகை கண்டபின்புறங்கால்வீங்கும்
காரணக்கலகம்பெண்ணுற் கனபீடைசிலுகுமுண்டு
தாரணிதன்னில்மாந்தர் தமக்கெலாம்பகையர்தாமே.

இ-ள். யானைக் கொப்பாகிய புதமகாதிசையில் புக்திநாதனக வரும் சந்திரனுண்ணும் ஷ-1, மீ-5, அக்காலங்களில் அவன் தரும் பலனைச் சொல்லுமிடத்து தன் புத்தி சபலப்படத்தக்க ஆயாசம் உண்டாவதுடன், காலின் பின்பக்கம் வீக்கத்தைக் கொடுக்கும். ஸ்திரீகள் மூலமான கோள் உண்டாகும். கொடிய தரித்திரமும், ஓர்நாளுக்கோர் விதமான பலனைக்காட்டும் இப்பூமியிலுள்ள எல்லா ஜனங்களுக்கும் விரோதமுடையவனுகவே இருப்பான் என்றும் கூறுவர் எ-று.

வி-ரை. சந்திரன்-புதன்-சுக்கிரன் பார்வை பெற்று கேந்திர திரிகோணங்களி லிருப்பானகில் தென்திசைப் பிரயாணமும், கலியாண சம்பிரமங்களும், நீச்சம்-சத்ரு-க்ஷேத்ரம் பெற்றிருப்பானகில் தனநாசம், கஷ்டவிறயம், மனஸ்தாபம், காரியவிக்கினம், பந்துஜன துவேஷம், ராஜாக்களால் துவேஷம், அபஜெயம் முதலிய துற்பலனை விளையும் மென்றும் கூறுவர்.

பன்னியபுதனிற்செவ்வாய் பதினென்றுநாண்மூவொன்பான்
தன்னிலேபித்தரோகங் காமாலைதலைநோக்காடு
அன்னியர்பகைவிரோத மாயுதத்தாலேபீடை
முன்னெருபகையுமுண்டு முடியவேகலகந்தானே.

இ-ள். நற்கோட்களி லொருவரான புதமகாதிசையில் புக்திநாதனக வரும் குஜனுண்ணும் காலமான மாதங்கள்-11, நாட்கள்-27 அக்காலங்களில் அவன் தரும் பலனைச் சோதிக்குமிடத்து பித்த

வியாதியும், சிரபாதை முதலிய காமாலை யுண்டாதலும், தன் பந்து வல்லாத ஜனங்களால் சத்ருத்துவமும், கருவிகளால் கஷ்டங்களும், இப்புத்திக்கு முன்னாலேயே தனக்குச் சத்ருக்கள் உண்டாவரென்றும், அந்தியவரையில் கோள் உண்டாகிக்கொண்டே இருக்குமென்றும் கூறுவர் எ-று.

வி-ரை. குஜன் லக்கினாதிபதியாயும் கேந்திரம் திரிகோணம் இவ்விராசிகளிலும் ஆக்ஷியாக விருந்தாலும், தன் களத்திரத்தால் சந்தோஷமும், ராஜிய லாபங்களும், செய்தொழில் மூலமான லாபமும் உண்டு.

நற்புதன் றனிலேராகு முப்பதுநாண் மூவாறும்
நிற்பதோர்நிலைவிட்டேகும் நீசரால்விஷத்தாலேயம்
மற்பொருபூசலுண்டா மனத்திடரர்த்தஹானி
சொற்பனந்தலைநோய்பித்தஞ் சூட்சமாமன்னனந்தானே.

இ-ள். நற்பலனைத்தரும் புதமகாதிசையில் இராகுவுண்ணும் வருடங்கள்-2, மீ-6, நாட்கள்-18, அக்காலங்களில் அவன் தரும் பலனைச் சொல்லுமிடத்து இல்லத்தை விட்டுப் போகுதலும், துடுக்கர் முதலிய நீச்சமனுஷரால் கஷ்டங்களும், விஷஜெந்துவால் பயங்கரமும், எந்நாளும் நீங்காத சத்ருத்துவ முதலிய விவாதங்களும், தைரியகுறைவும், கெண்டங்களும், சொர்ப்பனம் அதிகமாய்க் காணுதலும், சிரபாதையும், பித்தத்தினால் ஆகாமிரக்கமின்மை முதலிய பலனை விளைக்கும் எ-று.

புந்தியிற்பொன்னன்மாதம் புகழ்பெறுமிருபத்தேழும்
வந்தநாளாறுமின்ப மன்னரான்மகிழ்ச்சியாகும்
சிந்தைபிற்கிலேசமில்லை சிறுவருஞ்சுற்றமுண்டாம்
பைந்தொடிமணமதாகும் பாக்கியமிகவுண்டாமே.

இ-ள். புதமகாதிசையில் தனுர் மீனத்தாக்ஷி நாதனான குருவுண்ணும் ௵-2, மீ-3, நாட்கள்-6, அக்காலம் அவன் தரும் பலன்கள் என்னவெனில் சந்தோஷங்களும், மன்னரால் மனசந்தோஷமும், தன்மனத்தில் ஏதேனுமொரு விசனமும், சந்தேகமில்லாது குழந்தைகளுண்டாதலும், உறவினர்களுண்டாதலும், பெண்களைக் கலியாணம் செய்வதும், அனேக பொருள்கள் வந்து சேருமென்றும் கூறுவர்.

வி-ரை. மேற்சொன்ன குரு உச்சம் ஆக்ஷியாக இருப்பானேயானால் சவுக்கியம், கலியாணம், பால் அன்னம் புசித்தல் முதலிய நற்பலனும், நீச்சம் பகையாலும், 6-8-12-லும் இருப்பானேயானால் சண்டை பிதுரு துவேஷம், ராஜகோபமும் உண்டு.

நன்றிசேர்புதனிற்காரி நாலெட்டுமதினொளொன்பான்
இன்றிடுநன்மைநாளு மெதிர்த்திடுபகையுமுண்டாம்
சென்றிடும்வலக்கனேவாங் திசையுத்திராடத்துன்பம்
மன்றிடுமுற்றார்கேடு மனமதிற்கிலேசமாமே.

இ-ள். நற்பலனையே தரும் புதமகாதிசையில் சனியுண்ணும் வரு-2, மீ-8, நாட்கள்-9 ஆகும். அக்காலங்களில் அவன் தரும் பலனைச் சொல்லுமிடத்து தன்னை எதிர்க்கும் சத்துருக்கள் பலர் உண்டாவதோடு வலதுகாலில் பாதையுண்டாதலும், உத்திராடத் திசை என்னும் மேற்குதிக்கில் கஷ்டங்களும் தன்னைப்பெற்றோர் முதலிய உறவினர்களுக்குத் துன்பமும், சந்தேகமுடைய மனத்தனு மாக இருப்பானென்றும் கூறுவர் எ-று.

வி-ரை. மேற்சொன்ன சனி ஜெனனகாலங்களில் ஆக்ஷி உச்ச மாகவும், 3-12-6 இவ்விடங்களிலுமிருக்கில் முன்சொன்ன துற்பல னைத்தராது, ராஜியலாபம், சுகம் இவைகளுண்டாகும் என்றும் கூறுவர்.

கேது திசாபுக்தி பலன்

ஈண்டியகேதிற்கேது நாலுநாளிருபத்தேழும்
வேண்டியமனையாண்மகக்கட் சகோதரவெறுப்புண்டாகும்
பூண்டிடும்விலங்குகாலில் புரட்டாசியுள்ளதோறும்
ஆண்டதுவருஷத்தார்க்குத் திசையதுவவதிதானே.

இ-ள். கேதுமகாதிசையில் தன் சுயபுக்தியான மாதங்கள்-4, நாட்கள்-27, அக்காலங்களில் அவன் தரும்பலனைச்சோதிக்குமிடத்து தன் இஷ்ட களத்திரத்தின்மீதும் உடன்பிறந்தார்மீதும், புத்திரர்கள் மீதும் விரக்தியை உண்டாக்கும், ராஜாக்களால் கரங்களில் விலங்கிடு தலும், புரட்டாசி மாதங்களுக்குள்ளேயே ஜெனிக்கும் மைந்தர் களுக்கு அந்த திசையில் கொடிய பலனும், பற்பல துன்பங்களும் உண்டாகும் என்றும் கூறுவாயாக எ-று.

வி-ரை. மேற்சொன்ன கேது ஒன்பதுக் குடையோனுடன் கூடினுலும், லக்கினதிபதியுடன் சம்மந்தப்பட்டு இருந்தாலும், சுபக் கிரகங்களின் பார்வையும் பெற்றால் நதி தீர்த்தம், விவசாய லாபம், தானதருமம், லாபம் நற்பலனே விளையுமென்றும் கூறுக.

பூரியகேதில்வெள்ளி புத்தியீரேழுமாதம்
பாரியமக்கட்பேறு பலித்திடுங்கன்றுகாலி
காரியமெல்லாங்கூடும் கடையினிற்பீடையுண்டு
வீரியமனையாளோயா மீளவுமகன்றுபோமே.

இ-ள். கேதுமகாதிசையில் புக்திநாதனாக வரும் சுக்கிரனுண் ணும் வருடம்-1, மாதங்கள்-2, அவன் தரும்பலனைச் சோதிக்கு மிடத்து தன் களத்திர விருத்தியும், புத்திர உற்பவமும், பால்பாக்கிய விருத்தியும் தரும். வாகனம் முதலிய பசுங்கன்று விருத்தியும், தான் தொடுத்த வேலைகள் யாதொரு விக்கினமின்றி கைக்கூடுதலும், இப் புக்தியின் அந்தியில் பலகஷ்டங்களும் அன்புடைய களத்திரத்திற்கு கொடிய ரோகங்களும் உண்டாகி மறுபடியும் நிவர்த்தியாகும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன சுக்கிரன் பாக்கியாதி என்னும் 9-ஆம் வீட்டோனுடன் கூடியிருப்பானகில் சம்பத்தும்; நீச்சம் அஸ்தமயம் பெற்றிருந்தால் பல இராஜ விரோதமும், தானிய நாசமும், சர்ப்பம் முதலியவைகளால் பயமும், இடி வீழ்தலும் உண்டாகும் என்பதாம்.

நந்தலாங்கேதிற்பானு நாற்றிங்களாறுநாளும்
சிந்திடும்பூமிவிட்டுத் தேசம்போய்வருவன்பின்பு
சுந்தரமேனியெங்குஞ் சுரந்தலைநோயுண்டாகும்
மந்தரமுலையினளே மனமதிற்கிலேசந்தானே.

இ-ள். அழகுபொருந்திய கேதுமகாதிசையில் புக்திநாதனக வரும் சூரியனுண்ணும் மாதங்கள்-4, நாட்கள்-6, அக்காலங்களில் அவன் தரும்பலன்கள் என்னவெனில் தன் கையிலுள்ளவைகள் யாவும் இழந்து தன் சுயக்ஷேத்திரத்தைப் பிரிந்து அன்னிய தேசங்களுக்குப்போய் மறுபடியும் தன் சுயக்ஷேத்திரத்திற்கு வந்து சேர்தலும், அழகுடைய தன் சரீரம் முழுவதிலும் வியாதி என்னும் ஜுரம், சிரபாதை முதலியவைகளால் பீடிக்கப்படும், ஓ அழகுவாய்ந்த பெண்ணே! இப்பலன் உண்டாகும் என்றும் கூறுக எ-று.

வி-ரை. புக்திநாதனகிய சூரியன் ஜெனனகாலங்களில் உச்சம் அல்லது ஆக்ஷியாயும், சுபர்களுடன் கூடினலும், அல்லது பார்த்தாலும், அவனுக்கு இராஜ சன்மானங்களும், நூதன கிரக கட்டடமும் உண்டாகுமென்றும் 6-8-12-கேந்திர திரிகோணம் இவைகளில் இருந்தாலும், நீச்சம் பெற்றாலும், தலைநோய், ஜுரம், களத்திர புத்திர பீடை, மாதுரு நாசம், மனவியாகூலம் இவைகள் உண்டாகும் என்றும் சொல்லுக.

சாதககேதிலிந்து தன்புத்தியேழுமாதம்
மாதரால்வழக்குசண்டை மைந்தர்க்குப்பீடையுண்டாம்
போதவேகன்றுகாலி பொன்னுமாபரணமுண்டாம்
சீதளமுகத்தினளே தீங்குவந்தகன்றுபோமே.

இ-ள். வல்லமையையுடைய கேதுமகாதிசையில் புக்திநாதனக வரும் சந்திரனுண்ணும் மாதங்கள்-7, அக்காலங்களில் அவன் தரும் பலன்களைச் சோதிக்குமிடத்து ஸ்திரீகள் மூலமான விவகாரங்களும், தன் புத்திரர்களுக்கு வியாதி, துற்பலனும், பசு முதலிய வாகன விருத்தியும், பொன் பூஷண சேர்க்கையும் உண்டாகும். குளிர்ந்த முகத்தை யுடையவளே! பல கஷ்டங்கள் உண்டாயினும் நிவர்த்தியாகும் என்றறிக எ-று.

வி-ரை. மேற்சொன்ன சந்திரன் ஜெனன லக்கினத்திற்கு 6-8-12-இவ்விராசிகளில் நின்றுனகில் கலகங்களும், தான்ய நஷ்டமும், பூஷண நஷ்டமும், பலவித தீங்கும் உண்டாகும் என்றும் கூறுவர்.

கடைப்பறவதனிற்செவ்வாய் கலந்திடுமாதனுலு
இடையுறுமிருபானேழ்நா ளிடர்பயமர்த்தஹானி

படையுறவழக்குச்சண்டை பலபலவிரோதமாகுந்
தடையுறும்பெண்ணாற்கேடு தழல்பயகவுண்டாமே.

இ - ள். கருநாகமென்று சொல்லும் கேதுமகாதிசையில் குஜனுண்ணும் மாதங்கள்-4, நாட்கள்-27 ஆகும். அக்காலங்களில் அவன் தரும் பலன்களை சோதிக்குமிடத்து பல கொடிய கஷ்டங்களும், மனபீதியும், அற்ப சவுக்கியமும், பொருள் விறயமும், விவாதங்களும், சண்டை முதலியவைகளுமுண்டாகும். பலவிதமான சத்ருத்துவங்களாலும், ஸ்திரீஜனங்களால் தடையுண்டாதலும், அபமிருத்துவும், நெருப்பால் பெருத்த ஆபத்தும் உண்டாகும் எ-று.

வி-ரை. குஜபகவான் ஜெனனகாலங்களில் சுபரங்கிசம் பெற்றும் உச்ச சொக்ஷேத்ராங்களாகவு மிருந்தால், அவன் விவசாயலாபமும், தனலாபங்களும் சவுக்கியமும், அந்தியகாலங்களில் அகாலபோஜனமும், களத்திரசுனம் உண்டுபண்ணும் என்றறிக.

கேதுவிலிராகுபுத்தி கேள்பன்னிரண்டுமாதம்
மீதியிரொன்பாநாளும் விஷபயம்வந்துதீரும்
மாதர்கடமக்குப்பீடை மன்னவனுசமாவான்
போதவேயர்த்தநாசம் புகழ்நிலைநின்றிடாதே.

இ-ள். கேதுமகாதிசையில் தன்னைப்போன்ற செம்பாம்பென்னும் இராகுவுண்ணும் ஷூ-1, நாள்-18, அக்காலங்களில் அவன் தரும் பலனென்னவெனில் பயங்கரமும், விஷந்தீண்டுதலும், தன் குடும்ப ஸ்திரீகளுக்குப் பல கஷ்டமும், ஜாட்டியங்களும், மன்னவனென்னும் தன் பிதா இறந்து போதலும், எந்த நாளும் நீங்காத அர்த்தநாசமும், தன் மானுபிமானமும் இழந்து போவான் என்றும் கூறுவர் எ-று.

வி-ரை. மேற்சொன்ன இராகு ஜெனனகாலங்களில் சுபாங்கிசமும், சுபர்கள் பார்வையும் பெற்றிருப்பாராகில் மிலேச்சராஜாக்களால் லாபமும், சுயகிராமத்திலேயே பற்பல நன்மையும், 6-8-12 என்னுமிடங்களிலிருப்பாரே யானல் திரேகத்தில் வடுவுண்டாகுதலும், இஷ்டஜன நாசம், சிரபாதை, குளிர்காச்சல் இவைகள் உண்டாகும் என்றும் கூறுவர்.

பரிவுளகேதுவுக்குள் பாங்குள்ளமன்னன்புத்தி
ஒருபதினொன் றுநாட்க ளோரா றுமர்த்தலாபம்
மருவியமன்னர்சேர்த்தி விஷபயம்வந்துதீரும்
திருவெனமனையாள்சேர்வள் செல்வமுமிகுதியாமே.

இ-ள். உத்தமபலனை விளக்கும் கேதுமகாதிசையில் உத்தம கிரகங்களி லொன்றான குருவுண்ணும் காலமான மாதங்கள்-11, நாட்கள்-6, அக்காலம் அவன் தரும் பலன்களைச் சொல்லுமிடத்து சமரசவருமானமும், அன்புடைய ராஜாக்களை வந்தடைதலும், விஷ

ஜெந்துவால் தீங்குண்டாதலும், அழகுடைய களத்திர சேர்க்கையும், தனசம்பத்து உண்டாகு மென்றும் கூறுவர் எ-று.

வி-ரை. மேற்சொன்ன குரு கேந்திர திரிகோணங்களில் இருப்பாரேயானல் ராஜாக்களால் வருமானமும், வஸ்திராபரணமும், தண்டிகையும், குதிரை யானையும், நற்பேரும் உண்டாகும் என்றும், 6-8-12-ல் இருப்பாராகில் ஆதியில் கஷ்டமும், பாவிகள் பார்த்தால் மித்ரு குரோதமும், நேத்திர வியாதியும், சோராக்கினி முதலிய துற்கருமங்களும் உண்டாம்.

சதியுறுகேதுவுக்குட் சனிபுத்தியானமாதம்
பதின்மூன்றுநாளொன்பானும் பலபொருட்சேதமாகும்
அதிதலம்பேதமாகு மங்கத்திற்சொறிசிரங்கு
மதிமுதத்தரிவைபீடை மனமதுகிலேசமாமே.

இ-ள். சதியை விளக்கும் கேதுபகவான் திசையில் உண்ணவரும் சனிக்குறிய வருடம்-1, மாதம்-1, நாட்கள்-9 ஆகும். அக்காலங்களில் அவன் தரும் பலன்களாவன பற்பல திரவியங்களும் தன் கைவிட்டுப் போகும். தன் சுயக்ஷேத்திரத்தை விட்டு அன்னிய க்ஷேத்திரம்போய் சேர்வன். தன் உடலில் அடையாளங்களை யுண்டு பண்ணும். சொறி சிரங்குண்டாகும். தன் குடும்பஸ்திரீக்கு பல கஷ்டங்களும், தான் எந்த காரியங்களிலும் சந்தேகமுள்ளவனுகவே இருப்பான் என சந்திரனை பழிக்கும் முகவிலாசத்தையுடைய பெண்ணே! இவ்விதம் சொல்வாயாக எ-று.

வி-ரை. மேற்சொன்ன சனி ஜெனனகாலங்களில் மூலத்திரிகோணத்திலும் உச்ச சொக்ஷேத்திரங்களிலு மிருப்பானுகில் சனி வாரங்களில் ஆபரணவருத்தும் லாபங்களும் உண்டாகுமென்றும் கூறுவர்.

குலமுளகேதிற்புத்தி குறித்திடும்புத்திமாதம்
நலமுறுபத்துமொன்று நாளிருபத்தேழுக்கும்
தலமதுவிட்டுப்போகுந் தமராற்பயமுண்டாகும்
நிலைமையாய்புத்ரசோபம் நினைத்ததுமுடிந்திடாதே.

இ-ள். நீச்சகுலத்தோ னென்னும் கேதுமகா திசையில் உண்ணவரும் புதனுக்குறிய மாதங்கள்-11, நாட்கள்-27, அக்காலங்களில் அவன் தரும் பலனைச் சொல்லவெனில் தன் க்ஷேத்திரத்தைவிட்டு மாறுதலும், தன் சுயபந்துக்களென்னும் உறவினரால் ஆபத்தும், எந்நாளும் நீங்காத மக்கள் வியாகூலமும் உண்டாகும். தான் மனத்தில் உத்தேசித்த காரியம் அபஜெயமும் உண்டென கூறுவாயாக.

வி-ரை. மேற்சொன்ன புதன் கேந்திரகோணம்-உச்சம்-ஆக்ஷியாகவிருக்கில் இராஜாக்களால் நல்ல மேன்பாடான பலனும், புத்திர சவுக்கியமும் புராணகாவியக் கேள்வியும், தரும சிந்தையும், வாகனாதி

யுடன் கூடியிருக்கில் நூதன கிரகமும், இஷ்டஜென விஸ்வாசம் முதலிய சுபபலனும் நடக்கும் என்றறிக.

சுக்கிரன் திசாபுக்தி பலன்

வண்மையாம்புகரில்வெள்ளி மாதங்கணூற்பதுக்கும்
உண்மையாம்பணிகண்முத்து உயர்குடைபுரவியானை
தன்மையாம்புன்மைநீங்கு நாளிலேதனமுஞ்சேரும்
எண்மையாங்கிசத்திற்றுக்க மெய்துமைப்பசியிற்றுனே.

இ-ள். நற்பலனையே தரும் சுக்கிரமகாதிசையில் தன் சுயபுக்தியான வருடம்-3, மாதம்-4, அக்காலங்களில் அவன் தரும்பலன்களைச் சொல்லுமிடத்து கட்டாயமாய் நல்ல நகைகளையும், முத்து பவழம் என்று சொல்லும் பிரகாசமான பொருள்கள் உண்டாவதோடு குதிரை யானை முதலியவைகளும், பூச்சக்கிரக் குடைகளும், தன் துற்பலன் யாவும் நீங்கி நற்பலன் தருவதோடு நாளுக்குநாள் நல்ல மேலான பொருள்களை சேர்க்குதலும், ஆட்டுருவையுடைய மேஷ ராசிநாதன் அங்கிசம் பெற்றிருப்பானாகில் அவன் துக்க சாகரங்களை அனுபவிப்பானென்றும், அவை உண்டாகுங்காலம் ஐப்பசி மாதத்திலென்றும் தெரிந்துகொள்வாயாக எ-று.

வி-ரை. அனேகருக்குச் சுக்கிரதிசை என்றால் வெகு பிரமாதமான திசையென்றும் அதைவிட யோகத்தைத்தரும் திசை வேறில்லை என்றும் அனேகர் கூறுவதுண்டு. சோதிடம் கல்லாதாரும்கூட சுக்கிரதிசை நடக்கிறதென்றால் உனக்கென்ன குறைவு என்று பதில் அளிப்பார். மகாவிஷ்ணுவானவர் மாபலியிடம் சென்று தானம் கேட்டபோது மாபலி தாரைவார்க்கையில் சுக்கிரன் ஓர் வண்டுருவாய் நீர் துவாரத்தையடைக்க மகாவிஷ்ணு இது தெரிந்து ஓர் குச்சியால் குத்த அதனால் மேற்படி சுக்கிரனுக்கு ஓர் கண் பழுதென்பது விஷ்ணுபுராணங்கள் கூறும். சுக்கிரனுக்கு நேர்சத்துரு சூரியனும் சந்திரனும் ஆவார்களென முன்கூறிய 27-ஆம் செய்யுளால் அறியலாம். அவ்வாறு பகை கிரகங்களுடனும், பகை க்ஷேத்திரங்களிலும் கொடியவர்களால் பார்க்கப்பட்டும் இருந்தால் மேற்படி சுக்கிரன் எவ்வித பலனைத்தருவான் என்பதை சோதிடர்கள் நன்கு அறிந்து பலன் சொல்வது நலம். இதனாலேயே சோதிட ஆசிரியருள் ஒருவரான நடராஜ தம்பிரானும்,

"உச்சமித்ர சொக்ஷேத் ரத்திற்பல வானாய்
இச்சுவை சுங்கனார்திசை வந்தெய்தினா—சச்சமற
வாழ்வுடைய மாடாடு வாகனமுண் டாநீசம்
தாழ்வுவரும் வெள்ளி திசைத்தான்."

என்று கூறினார். சுக்கிரன் உச்சனாகவும் ஆக்ஷியாகவும் பலம் பெற்றிருந்தால் நல்ல வாழ்வும், நாற்கால் சுகமும் உண்டு. நீச்சனாகி

இருந்தாலோ தாழ்வையே உண்டுபண்ணுமென்றபடி சுக்கிரனிருக்கும் தாராதரமறிந்து கூறல் வேண்டும்.

சிறந்திடும்புகரிற்பானு திங்களீராறுந்துன்பம்
குறைந்திடுந்தனமும்மாளிற் கொடும்பகைஅரசராலே
பறந்திடுமனேயாண்மக்கள் பலருடன்வழக்காமென்க
உறைந்திடுதெய்வமுள்ளு முறவதுபகையதாமே.

இ-ள். சிறப்புற்றோங்கிய சுக்கிரன் மகாதிசையில் சூரியனுண்ணும் வருடம்-1, அக்காலங்களில் அவன் தரும் பலனைச் சொல்லுமிடத்து கஷ்டங்களும், நாளுக்குநாள் தன் செல்வம் யாவும் குறைந்து போகும். கொடிய விரோதங்கள் மன்னரால் உண்டாதலும், தன் களத்திர புத்திரர்களை விட்டுப் பிறிதலும், பற்பலரோடு வழக்கு, தெய்வங்களால் சீற்றம், தன் பந்துஜனங்களும் சத்துருவாகவே இருப்பார் எ-று.

வி-ரை. மேற்சொன்ன சூரியன் உச்சம் ஆகூஷி பெற்று சுபனுடன் கூடியிருந்தால் திரேகசவுக்கியமும், வீட்டில் கலியாண சம்பிரமமும், ராஜ அபிமானமுண்டு. திரிகோணம் கேந்திரம் இவ்விடங்களிலிருந்தால் பிதுர்பாக்கியமும், பிதுர்கிலேசமும், தாயாதி ஜனப்பகை இவைகள் உண்டாகும்.

மருவியபுகரிற்சோமன் மாதமோரிருபதுக்கும்
கருதியகருமநாளில் வந்துகைகூடுமென்க
உறுகுறுமனேயாளாலே உயர்பகைவந்துதீரும்
சருவியவின்பமாதர் தம்மொடுமிணக்கமாமே.

இ-ள். சுக்கிரன் மகாதிசையில் புக்திநாதனுகவரும் சந்திரனுண்ணும் ஷூ-1, மீ-8, அக்காலம் அவன் தரும் பலனைச் சோதிக்குமிடத்து தான் நினைத்த காரியம் ஜெயமடைதலும், தன் உயிர்க்கிணையான மனைவியால் கொடிய பகைவந்து நேர்தலும், இன்பமாதர் என்று சொல்லும் நற்சொற்களை புறக்கும் ஸ்திரீகளுக்குக் கட்டுப்பட்டு அவர்கள் சொல்லின்படி நடக்கவும் செய்யும் என்றறிக எ-று.

வி-ரை. மேற்சொன்ன சந்திரன் ஜெனனகாலங்களில் நீச்சம் பெற்றிருந்தாலும் அஸ்தமயமடைந்த கிரகங்களுடன் கூடியிருந்தாலும், மேற்சொன்ன நற்பலனைத் தவிர்த்து, தன நஷ்டமும், அன்னிய கிராம வாசமும், மனநோய், வடக்குதிசைப் பிரயாணம் முதலிய பலனையே விளைக்கும்.

புண்ணியபுகரிற்செவ்வாய் புகழ்திங்களீரேழுக்கும்
நண்ணியபூமியுண்டாம் நாறியார்கருமநாசம்
எண்ணியதேவர்சேவை யிருவராற்பகையுண்டென்னும்
கண்ணினேய்மெய்யிற்குட்டங் கண்டதுதீருந்தானே.

இ-ள். புண்ணிய பலனையுடைய சுக்கிரமகாதிசையில் குஜனுண்ணும் வருடம்-1, மீ-2, அக்காலங்களில் அவன் தரும் பலனைச் சோதிக்குமிடத்து தான் நினைத்த பூமிவந்து சேர்தலும், தான் நினைத்த காரியம் ஸ்திரீகளால் அபஜெயப் படுதலும், தான் எண்ணிய கடவுளைக் கும்பிடுதலும், சத்ருத்துவம் இருவரால் உண்டாதலும், விழிகளுக்கு பாதையும், உடலில் குஷ்டம் காணுதலும், பிறகு நிவர்த்தியாகுதல் முதலிய பலனுண்டாகு மென்றும் கூறுவர் எ-று.

வி-ரை. குஜன் ஜெனனகாலங்களில் 9-ஆம் வீட்டோனுடனும் மற்றும் சுபகிரகங்களுடனும் கூடியிருக்கில் லக்ஷ்மிகடாக்ஷம், தான் நினைத்த பூமியை வாங்குதலும், அனேக பொருள் சேர்தலும், ஆடையாபரணமும், 6-8-12 இவ்விடங்களிலிருந்தால் ராஜகோபம் சண்டை அபஜெயம் இவைகளுண்டாகும் என்க.

திருந்தியபுகரில்ராகு திங்களோர்முப்பத்தாறும்
பொருந்தியமுனியைப்போல பூமியிற்றபசுசெய்வன்
வருந்தியமைந்தராலே வருங்கலகங்கள்மெத்த
அருந்தியமருந்தினாலே விஷமதாயலைவன்றானே.

இ-ள். நற்கோட்களி லொருவரான சுக்கிரன்மகாதிசையில் ராகு உண்ணும் வருடம் 3-லும், அவன் தரும் பலன்களைச் சொல்லுமிடத்து வசிஷ்டர், விஸ்வாமித்திரர், ரோமரிஷி என்னும் ரிஷிகளைப் போல் இப்பூமியில் தவம் செய்தலும், தான் வருத்தப்படும்படியான கோள் தன் புத்திரர்களாலேயே உண்டாதலும், தான் புசித்த அவுஷதமே விஷமாகி, இப்பூமியில் அலைந்து திரிந்துகொண்டு மிருப்பான் என்றும் கூறுவர் எ-று.

வி-ரை. இராகு 5-9-11 இவ்விடங்களிலும், உச்ச க்ஷேத்திரங்களிலும், 3-6-10 இவ்விடங்களிலு மிருந்தால் சத்துருநாசமும், சந்தோஷம், ராஜசன்மானம். புத்தி முதலில் ஜுரநோய், மனஸ்தாபம் மத்தியிலும் கடைசியிலும் பொன் முத்து சிவிகை இவை லாபமும், நிருதிதிசை சென்று உத்யோகம் செய்வானென்றும் கூறுவர்.

முன்புறுபுகரின்மன்னன் முப்பத்திரண்டுமாதம்
இன்புறுதானியங்க ளெய்துமேயர்த்தலாபம்
அன்புறுமறையோராலே யதிசயமிகவுமுண்டாம்
மன்புகழ்தோணிவிட்டத் திசையினில்வருத்தமாமே.

இ-ள். முன்சொல்லிய சுக்கிரமகாதிசையில் குருவுண்ணும் வரு-2, மீ-8, அக்காலங்களில் அவன் தரும் பலனைச் சோதிக்குமிடத்து சந்தோஷங்களும், நவதான்யங்கள் சேர்தலும், தன் வருமானம் அர்ப்பமும், பிராமணர்களால் சந்தோமுண்டாதலும், ராஜாக்களால் கொண்டாடும் கடற்பிரயாணம் செய்யும் தோணி என்னும்

கருவிவந்தடைதலும், அவிட்டத்தின் திக்கான மேற்குதிசையில் சுலபசஞ்சலமும் உண்டாகும் என்றும் கூறுவர் எ-று.

வி-ரை. குரு 6-8-12-ல் இருந்தால் மேற்சொன்ன நற்பலனைத் தரான். திருடராலும் அக்கினியாலும் பயமும், சண்டை முதலிய மனவியாகூலமும், இல்லம் கைவிட்டுப் போதலும், ராஜவிரோதமும், குரு 2-7-க்கு ஆக்ஷிநாதனுக இருந்தால் நீங்காத பீடையும், இவை தீர ஏழைகளுக்கு அன்னதானம் செய்க.

சாலவேவெள்ளிதன்னிற் சனிமாதமுப்பத்தெட்டும்
மூலமாநோயினுலே முயங்கியேவீங்குங்கைகால்
வேலெனும்விழியாய்துன்ப மெய்யினில்ரோகமுண்டு
ஆலமாம்விஷம்போலன்ன மரோசிகமாகுந்தானே.

இ-ள். போதுமான நற்பலனைத்தரும் சுக்கிரன் திசையில் சனி யுண்ணும் வருடம்-3, மீ-2, அக்காலங்களில் அவன் தரும் பலனைச் சோதிக்குமிடத்து சரீரத்தில் உட்கண்ட வியாதியால் கால் கரங் களுக்கு முடக்கைக்கொடுத்து மறுபடியும் சவுக்கியப்படுத்துதலும், பற்பல கஷ்டங்களும், உடலில் வியாதியும், உணவைக்கண்டால் விஷத்தைப்போன்ற வெருப்பும் உண்டாகுமென வேலைப்போன்ற விழிகளையுடையவளே! சொல்வாயாக எ-று.

வி-ரை. சுக்கிரன் வீட்டில் சனியும், சனி வீட்டில் சுக்கிரனு மிருக்கில் ராஜ்யலாபமும், சவுக்கியமும், குலநாசமும், அபகீர்த்தியும் உண்டாகுமென்றும் மேலோர் கூறுவர்.

வெள்ளியிற்புந்திமாதம் விரும்புமுப்பத்துநான்கும்
தெள்ளியமனையாண்மக்கள் சீருடன்பொருளுண்டாகும்
வள்ளியகல்விஞானம் வாக்கினுற்பாடலாகும்
நள்ளியசிவப்பனுலே நன்மைகள்பலவுண்டாமே.

இ-ள். சுக்கிரன் மகாதிசையில் புக்திநாதனுக உண்ணவரும் புதனுக்குரிய வருடம்-2, மாதம்-10, அக்காலங்களில் அவன் தரும் பலன்களைச் சொல்லுமிடத்து நல்ல களத்திரமும், அழகுடைய புத்திரரும், விருத்தியடைவதோடு தனமும் விருத்தியாகும். தெள் ளிய வித்தியா அப்பியாசமும், நல்ல கீர்த்தனைகளைத் தன் வாக்கினுல் பாடுதலும், சிவப்பு நிறமுடைய மனிதனுல் பற்பல உபகாரங்களும், க்ஷேமமும் உண்டாகும் எ-று.

வி-ரை. மேற்சொன்ன புதன் 1-4-7-10-என்னும் இடங்களி லாவது 5-9-என்னும் இடத்திலாவது இருந்தால் இராஜ பேட்டியும், நல்ல போஜனமும் உண்டாகும். 6-8-12-ஆம் ராசிகளிலிருந்தால் மனவியாகூலமும், முற்பாதியில் சவுக்கியமும், பிற்பாதியில் கஷ்டங் களும் உண்டாகுமென கூறுவாய்.

இட்டமாம்வெள்ளிதன்னிற் கேதுவீரேழ்மாதம்
துட்டமாமிருகத்தாலே துன்பமுமிகவுண்டாகும்
அட்டமாமனையாடன்னி னனுபோகத்தாலேநோயாம்
திட்டமாம்விஷந்தான்வீட்டிற் றீண்டியேமீளுந்தானே.

இ-ள். யாவரும் கோரப்பட்ட சுக்கிரமகாதிசையில் புக்திநாதனாகவரும் கேது உண்ணும் வருடம்-1, மாதம்-2, அக்காலங்களில் அவன் தரும் பலன்களாவன. துஷ்ட குணமுடைய மிருகங்களால் பல கஷடங்கள் உண்டாகும். களத்திர விரோதமும், சேர்க்கையால் பிணி பீடைகளும், தன் வீட்டிலேயே விஷம் கடித்துக் கஷ்டமுண்டாகி நிவர்த்தியாகுமென்றும் கூறுவர் எ-று.

வி-ரை. கேதுபகவான் ஜெனனகாலங்களில் 1-4-5-7-9-10- இவ்விடங்களிலிருந்தால் தேவாலய தரிசனமும், மன்னர் பேட்டி, சத்துரு ஜெயம், தனதானிய லாபம் உண்டாகுமென்றும் கூறுவர்.

கிரகங்களின் ஆக்ஷிவீடுகளாவன

சூரியனுக்கு ஆக்ஷி சிங்கம், சந்திரனுக்கு ஆக்ஷி கடகம், செவ்வாய்க்கு ஆக்ஷிவீடு மேடம் விருச்சிகம், புதனுக்கு ஆக்ஷிவீடு மிதுன கன்னி, குருவுக்கு ஆக்ஷிவீடு தனுசு மீனம், சுக்கிரனுக்கு ஆக்ஷிவீடு ரிடபமும் துலாமும், சனிக்கு ஆக்ஷிவீடு மகரம் கும்பம் என்க.

கிரகங்களின் உச்சவீடு

சூரியனுக்கு உச்சவீடு மேஷம், சந்திரனுக்கு உச்சவீடு ரிடபம், புதனுக்கு உச்சவீடு கன்னி, குருவுக்கு உச்சவீடு கடகம், சுக்கிரனுக்கு உச்சவீடு மீனம், சனிக்கு உச்சவீடு துலாம், செவ்வாய்க்கு உச்சவீடு மகரம் என்க.

கிரக காரகம்

சூரியன்	பிதுருகாரகர்
சந்திரன்	மாதுருகாரகர்
செவ்வாய்	சகோதரகாரகர்
புதன்	மாதுலகாரகர்
குரு	புத்திரகாரகர்
சுக்கிரன்	களத்திரகாரகர்
சனி	ஆயுள்காரகர்
இராகு	வயிராக்கியகாரகர்
கேது	மோக்ஷகாரகர்

நக்ஷத்திர நாழிகை பிரமாணம்

அசுவினி	65	கார்த்திகை	56
பரணி	56	உரோகணி	56

மிருகசிரம்	56	அநுஷம்	60
திருவாதிரை	56	கேட்டை	62
புனர்பூசம்	62	மூலம்	63½
பூசம்	52	பூராடம்	62
ஆயில்யம்	56	உத்திராடம்	55
மகம்	54	திருவோணம்	65½
பூரம்	53	அவிட்டம்	66½
உத்திரம்	56	சதயம்	53½
அஸ்தம்	57	பூரட்டாதி	61
சித்திரை	60	உத்திரட்டாதி	63
சுவாதி	65	ரேவதி	64
விசாகம்	61		

ஜன்ம நக்ஷத்திரத்தால் திசையறிதல்

அசுவினி-மகம்-மூலத்திற்கு	கேதுதிசை	ஷூ	7
பரணி-பூரம்-பூராடத்திற்கு	சுக்கிரதிசை	,,	20
கார்த்திகை-உத்திரம்-உத்திராடத்திற்கு	சூரியதிசை	,,	6
உரோகணி-அஸ்தம்-திருவோணத்துக்கு	சந்திரதிசை	,,	10
மிருகசிரம்-சித்திரை-அவிட்டத்துக்கு	குஜன்திசை	,,	7
திருவாதிரை-சுவாதி-சதயத்துக்கு	ராகுதிசை	,,	18
புனர்பூசம்-விசாகம்-பூரட்டாதிக்கு	குருதிசை	,,	16
பூசம்-அநுஷம்-உத்திரட்டாதிக்கு	சனிதிசை	,,	19
ஆயில்யம்-கேட்டை-ரேவதிக்கு	புதன்திசை	,,	17
	ஆக	ஷூ	120

திசைபுக்தி விவரங்கள்

கிரு-உத்-உத்ரா			ரோகி-ஹஸ்-திருவோ			மிருக-சித்த-அவி		
சூரிய திசை ஷூ-6			சந்திர திசை ஷூ-10			செவ்வா திசை ஷூ-7		
புக்தி	மீ	நா	புக்தி	மீ	நா	புக்தி	மீ	நா
சூரியன்	3	18	சந்திரன்	10	0	செவ்வாய்	4	27
சந்திரன்	6	0	செவ்வாய்	7	0	ராகு	12	18
செவ்வாய்	4	6	ராகு	18	0	குரு	11	6
ராகு	10	24	குரு	16	0	சனி	13	9
குரு	9	18	சனி	19	0	புதன்	11	27
சனி	11	12	புதன்	17	0	கேது	4	27
புதன்	10	6	கேது	7	0	சுக்கிரன்	14	0
கேது	4	6	சுக்கிரன்	20	0	சூரியன்	4	6
சுக்கிரன்	12	0	சூரியன்	6	0	சந்திரன்	7	0

திருவா-சுவா-சதய
ராகு திசை வரு-18

புக்தி	மீ	நா
ராகு	32	12
குரு	28	24
சனி	34	6
புதன்	30	18
கேது	12	18
சுக்கிரன்	36	0
சூரியன்	10	24
சந்திரன்	18	0
செவ்வாய்	12	18

புனர்-விசா-பூரட்டா
குரு திசை வரு-16

புக்தி	மீ	நா
குரு	25	18
சனி	30	12
புதன்	27	6
கேது	11	6
சுக்கிரன்	32	0
சூரியன்	9	18
சந்திரன்	16	0
செவ்வாய்	11	6
ராகு	28	24

பூச-அனு-உத்திரட்
சனி திசை வரு-19

புக்தி	மீ	நா
சனி	36	3
புதன்	32	9
கேது	13	9
சுக்கிரன்	38	0
சூரியன்	11	12
சந்திரன்	19	0
செவ்வாய்	13	9
ராகு	34	6
குரு	30	12

ஆயில்-கேட்-ரேவதி
புத திசை வரு-17

புக்தி	மீ	நா
புதன்	28	27
கேது	11	27
சுக்கிரன்	34	0
சூரியன்	10	6
சந்திரன்	17	0
செவ்வாய்	11	27
ராகு	30	18
குரு	27	6
சனி	32	9

அஸ்வனி—மகம்—மூலம்
கேது திசை வரு-7

புக்தி	மீ	நா
கேது	4	27
சுக்கிரன்	14	0
சூரியன்	4	6
சந்திரன்	7	0
செவ்வாய்	4	27
ராகு	12	18
குரு	11	6
சனி	13	9
புதன்	11	27

பரணி—பூரம்—பூராடம்
சுக்கிர திசை வரு-20

புக்தி	மீ	நா
சுக்கிரன்	40	0
சூரியன்	12	0
சந்திரன்	20	0
செவ்வாய்	14	0
ராகு	36	0
குரு	32	0
சனி	38	0
புதன்	34	0
கேது	14	0

மாரகம் செய்வோர் 2-7-க் குடையவர் எனல்

திசைநாதன்செய்யுமந்தத் தீதுதான்சொல்லக்கேளாய்
அசையாமனின்றகோண ரதிகேந்திரர்சொல்வதில்லை
திசையாகவேழிரண்டு திசைநாதற்கதுவேயாக
நிசமாகமதிக்குமந்த வடைவானேன்கொல்வன்றானே.

இ-ள். ஒவ்வொரு ஜாதகர்களுக்கும் திசைபுக்தி நடக்குங்காலம் அவர்கள் செய்யும் தீச்செயலாகிய மாரக விஷயங்களைச் சொல்லு கிறேன் கேட்பாயாக. எப்படியெனில், ஜென்ம லக்கினத்திற்கு கேந்திரகோணம் என்னும் 1-4-5-7-9-10 என்னும் க்ஷேத்திராதிபர்கள் கொல்லார், மற்றும் எவர்கள் கொல்வாரெனில் ஜென்மலக்கினத்திற்கு 2-7-ஆம் அதிபர்களே கொல்லுவார். இன்னும் சந்திர லக்கினத்திற்கு 2-7-ஆம் அதிபர்களும்கூட கொல்லுதற்கு அதிகாரம் வாய்ந்தவரென்றுங் கூறுவாயாக எ-று.

வி-ரை. ஜென்மலக்கினத்திற்கு 2-7-ஆம் வீட்டோனும் சந்திர லக்கினத்திற்கு 2-7-ஆம் வீட்டோனுமே கொல்வதற்கு பூரண அதிகாரம் வாய்ந்தவரென்றுங் கொள்க.

வருந்தவன்றிசையில்வந்து வடிவுளோனுகிக்கொல்வன்
இருந்தவனேழிரண்டு மிவன்பொசிப்பாகிற்கொல்வன்
கருந்தவன்காரிகூடக் கலந்தவன்பொசிப்பிற்கொல்வன்
இருந்தவர்பகையேயாறு லிவருமேகொல்வர்மாதே.

இ-ள். ஏ பெண்பாவாய்! மேலே கூறியுள்ள 2-7-ஆம் அதிபதி திசைவரினும் கொல்லுதற்கு அதிகாரமுண்டெனவும், மற்றும் 2-7-ல் இருந்தவன் திசையில் 2-7-ஆம் அதிபதி புக்தியிலும் கொல்லுவர். மேற்படி 2-7-ஆம் வீட்டுக்குடையவன் திசையில் சனியுடன் கூடிய கிரகமெவையோ அவர்கள் புக்தியிலும், மேற்படி சனிக்கு பகைக் கிரகங்களின் புத்தியிலும் கொல்லுமென்று திட்டமாய்க் கூறுக எ-று.

வி-ரை. 2-7-ல் நின்றவன் திசையில் மேற்படி ஸ்தானுதிபன் புந்தியும், சனியுடன் கூடினவர் சனிக்கு கொடிய சத்துருவானவர் இவர்கள் திசையிலும் கொல்வார் என்பதாம்.

இவை மாரக சம்மந்த கோட்களாகும் இதனை ஜென்மலக்கினம் சந்திர லக்கினமென்னும் இரண்டிற்கும் யோசித்து கூறவேண்டுவதாகும்.

எட்டவன்றிசையுமாக விருமாரகர்பொசிப்புமாகிப்
பொட்டெனப்பகையுண்டாகிற் பொசிப்புவந்தளவிற்கொல்லும்
நட்டமுமனேகமுண்டு நகர்விடும்பதிபோந்தீது
தொட்டவன்போகுமட்டுந் தொந்தரையுண்டுமாதே.

இ-ள். ஜென்ம லக்கினத்திற்கு அட்டமாதிபன் திசையாகி முன்பு சொல்லிய 2-7-க் குடையவன் புக்தியில் மேற்படி 8-ஆம் ஆதிபதிக்கு 2-7-க் குடையவர் பகையாக இருக்கில் மேற்படி புக்தி ஆரம்பித்த உடனே மரணமுண்டாக்குமெனவும், மற்றும் பலவித மான நஷ்டங்களும், தேசபிரட்டம் செய்தலும், ப்லவிதகஷ்டம் தொந்தரவு முதலியனவும், மேற்படி புக்தியின் ஆரம்பமுதல் அந்தம் வரையிலும் உண்டெனக் கூறுவாயாக எ-று.

வி-ரை. அட்டமாதிபனுக்கு 2-7-க் குடையவர் பகைவராகில் மேற்படி 2-7-க் குடையவன் புக்தியில் மேலேகூறிய கஷ்டநஷ்டங் களும் மரணமும் உண்டாக்கும் என்பதாம்.

எட்டினிலிருந்தோன்வந்தான் மதிக்கெட்டோன்பொசிப்பிற்றீது
பொட்டெனவவர்க்கேயேழீ ராரவன்பொசிப்பிற்கெண்டம்
மட்டினிற்சோமனின்ற மனக்கேழிரண்டுவீட்டான்
பொட்டெனவாகினின்றுற் போய்விடுமாவிதானே,

இ-ள். ஏ பெண்பாவாய்! திசைநடக்கும் காலத்து அட்டம ஸ்தானத்திலிருந்தவன், சந்திரனுக்கு அட்டமாதிபனென்னும் இவர்கள் கொடிய பலனையே செய்வார். மற்றும் ஜென்ம லக்கினத்திற்கும் சந்திர லக்கினத்திற்கும் 7-12-ஆம் வீட்டுக்குடையவன் புக்தியாகில் கெண்டம் செய்யுமென்றும், மேலே சொல்லியுள்ள புக்தி நாதர்கள் சந்திர லக்கினத்திற்கு 2-7-ஆம் வீட்டுக்குடையவர்களாகில் கட்டாயம் மாரணமுண்டாக்குமென்று திட்டமாய்க் கூறுவாயாக எ-று.

வி-ரை. அட்டமாதிபன் திசைநடக்கும் காலத்து மேற்படி அட்டமாதிபன் எங்கு நின்றான் எனவும், மேற்படி அட்டமன் திசையில் லக்கினத்திற்கு 6-12-ஆம் வீட்டோன் புக்தியில் கெண்டாதி கெண்டமும் மேற்படி கிரகமே சந்திரனுக்கு 2-7-ஆம் அதிபதியாகில் கட்டாயம் மாரகம் செய்யுமென்றும் திட்டமாய்க் கூறுக.

திசைமரிப்போதேவென்னி லிருமாரகமவற்கேயாகி
இசையிருமதிக்குமார னவனுமேபொசிப்புமாகி
அசையவரிவற்கேபொல்லா தாகாதுபகையேயானூற்
கொசுமசக்காகக்கொல்வர் குறியிதுகேளாய்மாதே.

இ-ள். ஜென்மலக்கினத்திற்கு மாரகாதிகளென்னும் 2-7-க்குடைய கிரகம் ஒருவனேயாகி அவன் திசைவந்தகாலத்து மேற்படி திசாநாதனுக்கும் சந்திர லக்கினத்திற்கு 2-7-க்குடைய கிரகம் எவையோ அவற்றிற்கும் பகையாக நிற்கில், மேற்படி சந்திரனுக்கு 2-7-க்குடையவன் புக்தியில் தவராது மாரகத்தை செய்வாரென்றும் அவை தவராது எனவும் கட்டாயமாய்க் கூறுவாயாக எ-று.

வி-ரை. ஜென்மலக்கினத்தில் 2-7-ஆம் ஆதிபத்தியம் ஒரு கிரகத்திற்கு வந்தும் மேற்படி 2-7-க்குடையவன் சந்திரனுக்கு 2-7-க்குடையவனுக்குப் பகையாகில், மேற்படி புக்தியில் கட்டாயமாய்க் கொல்லுவாரென்றுங் கூறுவாய் என்பதாம்.

வருதிசைப்படியேபார்த்துப் பொசிப்பவன்பகையைக்கண்டு
தருகுமாரகரைப்பற்றிச் சனிநின்றபகையைப்பாய்ந்து
இருவிலாதுநோக்கித் தீலஞ்சொன்னன்மெய்யே
மருமணச்குழலினாளே வருந்திசைபார்க்கும்வாறே.

இ-ள். ஒவ்வொரு திசாநாதனின் சுபாசுபங்களை ஆராய்ந்தும் மேற்படி திசாநாதனுக்கும் புக்தி நாதனுக்கும் உண்டாகும் பகை முதலியவற்றை ஆராய்ந்தும் அவர்களுள் எவர்கள் மாரகர்களென் பதை ஆராய்ந்தும், சனிக்குள் பகை விஷயங்களையும் நன்றாய் ஆராய்ந்து பின்பே நன்மை தீமை என்பதைச் சொல்லவேண்டும் ஆகையால் வாசனை நிறைந்த கூந்தலையுடைய பெண்பாவாய்! இவ்வாறு ஆராய்ந்தே மாரகதிசை விவரங்களை சொல்லவேண்டுமென்று அறிவாய் எ-று.

வி-ரை. மாரகதிசையைச் சொல்ல ஒரு திசாநாதனைக் குறித்து அவன் மாரகாதியா அல்லவா என்றும், சந்திரனுக்கு என்ன ஆதிபத்தியம் பெற்றான் என்பதையும், சனியுள்ள நன்மை தீமைகளை ஆராய்ந்தபிறகே மாரகவிஷயம் சொல்லவேண்டும் என்பதாம்.

உயிருடன்மாரகரைப்பற்றி யொன்றியேதீயர்சேர்ந்து
எதிரிட்டுநின்றுபார்த்தா லிதைக்கொண்டுபோவரென்க
அதையறிந்துரைக்கவின்ன மதிகமாரகருமுண்டு
வயிரமேயிருப்பறிந்து மருதிசைபொசிப்பறிந்தே.

இ-ள். ஜென்மலக்கினாதியுடன் மாரகாதிகளென்னும் 2-7-ஆம் வீட்டுக் குடையவர் சேர்ந்து கொடிய கோட்களுடன் கூடி முன்பு சொல்லிய ஜென்மலக்கினத்தைப் பார்ப்பார்களேயாமானால் அந்தஜாதகனுக்குக் கட்டாயம் மாரக முண்டாகுமென்றுங் கூறுக. மேற்படி மாரகரை நிலைகூற இன்னு மனேக காரணங்களுமுண்டு. அவர் திசையில் புத்தி க்ஷேத்திரம் பார்வை சேர்க்கை என்னும் காரணங்களைக் கொண்டே மேற்படி மாரக விஷயங்களை நிலைகூறவேண்டும் எ-று.

வி-ரை. மாரகாதிபதியை நிலைகூற திசைபுக்தி க்ஷேத்ரம் ஆதிபத்தியம் பார்வை சேர்க்கை என்னும் விசேஷ விஷயங்களாலேயே நிலைபடுத்தவேண்டும் என்பதாம்.

மந்தன்மாரகம் மதியுதையமாரகம்
சொந்தமாயிவர்க ளிவ்விடத்தர்மாரகம்
அந்தமாய்ப்பத்துபேர் மாரகமறிந்து
வந்ததிசைபகை நட்புரைமாதே.

இ-ள். மாரக விஷயங்களைக் கூறுவதற்கு சனி நின்ற லக்கினத்திற்கு மாரகாதிபதி எவரென்றும், சந்திர லக்கினத்திற்கு மாரகாதி எவரென்றும், ஜென்மலக்கினத்திற்கு மாரகாதி எவரென்றும் மற்றுமுள்ள அம்சம் திரேகாணம் உபயம் திரிசாங்கிசம் காலாங்கிசம் சப்தமாங்கிசம் தசாங்கிசம் என்னும் ஒவ்வொரு ராசிக்கும் மாரகாதிபர்களையறிந்து அவற்றுள் மேற்படி லக்கினப்படி மாரகராய் வந்துள்ளவர் திசைநாதனையும் ஆக்ஷி உச்சம் நட்பு பகை என்னும் விஷயங்களையும் நன்கு ஆராய்ந்து மாரகரை நிலை கூறுவாயாக எ-று.

உதித்திடும்பிள்ளைக்கின்ன முடன்பிறப்புண்டோவென்னில்
எதிர்த்திடுஞ்சத்ருமாதுரு வின்னமும்பிதுருபுத்திரர்
மதித்திடுமாவுகாரி மாமணியிவர்க்கேயெல்லாம்
சதித்தகாரணவன்வீடுங் காரகநிலையும்பார்த்தே.

இ-ள். ஒரு ஜாதகனுக்கு சகோதர முண்டா என்பதை மற்றும் பிதுரு மாதுரு சகோதரம் மாதுலன் புத்திரன் சத்துரு களத்திரம் என்னும் பாவ விசேஷங்களையும், சனி இராகு கேது சூரிய சந்திரன் செவ்வாய் புதன் குரு சுக்கிரன் என்னும் நவகோட்களால் அந்த கார

களையும், அவர்கள் சுயக்ஷேத்திரம் நின்ற க்ஷேத்திரமென்னும் விவரங்களையும் செவ்வனே ஆராய்ந்து அவரவர்கள் விஷயங்களைச் செவ்வனே தெரிந்து தெளிந்தும் கூறுவாயாக எ-று.

செனித்திடுமதற்குச்சொல்லுஞ் சீரதுபாகம்போல
குனித்ததுபார்த்துச்சொல்லக் கூறியநிலையால்நிற்கும்
வெறித்துநீவேறேபார்த்து வெளியினிற்றேடவேண்டாம்
மறித்தொருநாளும்பொய்யா மணிகண்டகேரளந்தான்.

இ-ள். ஏ பெண்பாவாய்! ஜெனன ஜாதகத்தைக் கொண்டு அந்த ஜாதகனின் வருவினையைச் சொல்வதுபோலவே, அந்த ஜாதகனின் வர்க்க ஸ்தான மெவையோ அவை லக்கினமாக வைத்து மற்றும் பாவங்கள் 12-ம் கணக்காய் அறிந்து சொல்ல மற்றுமுள்ள வேறு சாஸ்திரங்களை ஆராயாது, இந்த மணிகண்ட கேரள மென்னும் சாஸ்திரத்தில் கூறியபடியே உரைப்பாயாகில் உள்ளவிஷயம் பொய்க்காது உண்மைப் பொருளாகவே விளங்குமென்று நினைப்பாய் எ-று.

வி-ரை. எவரைக் குறித்து ஆராயவேண்டுமோ அதையே லக்கினமாக வைத்து மற்றும் பாவங்கள் 12-ம் ஆராய்க.

இத்தையேபார்த்துச்சொல்வா யெண்ணுணுக்கருமங்கட்கும்
மற்றுமோர்சாஸ்திரந்தேடி மயங்கிடவேண்டாங்கண்டாய்
வித்தையோரதிகமுள்ள வேதனார்சொல்லுநீதி
வித்தகமுள்ள நூலில் விதம்போறதில்லைமாதே.

இ-ள். ஏ பெண்பாவாய்! கல்வியில் கரைகண்ட மேதாவியாகிய அகத்தியமகாமுனிவரால் கூறிய மணிகண்ட கேரளமென்னும் இந்த சாஸ்திர நூலில் உள்ளதை உள்ளபடியே கூறுவாயாயின், அவ்விஷயம் கட்டாயமாய் மாறாது உண்மைப் பொருளாய் விளங்குமாகையால், இந்த சாஸ்திரத்தையல்லாது மற்றுமுள்ள அனேக சாஸ்திரங்களை தேடித்தேடி அலையவேண்டாம். எல்லா விஷயங்களுக்கும் இவை கைகண்ட பொருளென அறிந்து-இவ்வுலகோர்க்கு வரும் கருமங்களை வழுவாதுரைப்பாய் எ-று.

அனுபவ நஷ்ட ஜாதக சிந்தாமணி

முற்றிற்று.